www.tamilarangam.net



# வவுனியா: முடிவிலாப் பயணம்!

சரிநிகர்

ஒகஸ்ட் 29 - செப்டம்பர் 11, 1996

இதழ் 104

விலை 7.00

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே" பாரதி

ஆசிரியர் குழு
ச. பாலகிருஷ்ணன்
சேரன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம். ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்

வடிவமைப்பு
ஏ.எம்.ரஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்,
18/2, அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்,
334 காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை - ரூபா 175/=
வெளிநாடு 30 U.S.$
- (தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெருக்கே எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகட்கும்
ஆசிரியர்,
சரிநிகர்,
04 ஜெயரட்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு -05
தொலைபேசி: 593615
தொலைமடல்: 594229

## மலையக இளைஞர் மர்ம மரணம்!

கடந்த ஒகஸ்ட் 9ம் திகதியன்று கண்டி பொலிஸ்நிலையத்தில்தடுப்புக்காவலில் இருந்த மலையக இளைஞர் எம்.இராஜலிங்கத்தின்மரணம்திடீர் மரணமே அல்ல என்றும் அது பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டபடுகொலையே என்றும் சரிநிகருக்கு கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

மஸ்கெலிய சின்னக்கரு தோட்டத்தைச் சேர்ந்த இவ்விளைஞர் சம்பவதினத்தன்று கண்டி ''குட்செட்'' பஸ்நிலையத்தில் ஆசனம் ஒன்றில் அமர முயல்கையில் சில சிங்கள பேரினவாத வெறிபிடித்த காடையர்களால் தாக்கப்பட்டு பின்னர் கூடிய கூட்டத்திடம் அவ்விளைஞரை புலியெனக் கூறி பொலிஸாரிம் ஒப்படைத்துள்ளனர். கண்டி பொலிஸாரும்மேலதிக விசாரணை என்ற பேரில் கொடூரமாகத் தாக்கியதில் அவ்விளைஞன் துடிதுடித்து இறந்துபோனான்.

ஆனால், இச்சம்பவம்பற்றி செய்தி வெளியிட்ட அரச பிரச்சாரப் பத்திரிகையான ''தினகரன்'' இவ்விளைஞன் குட்செட் பஸ்நிலையத்தில்தரித்திருந்த பஸ்ஸொன்றின் பக்கக் கண்ணாடியைத் தாக்கி சேதப்படுத்தினாரென்றும் அதன் பேரிலேயே பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் செய்தி வெளியிட்டது.

மேலும்இவ்விளைஞர்காவல் அறையில் நினைவிழந்து காணப்பட்ட வேளையில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், கண்டிநகரிலுள்ள இவ்விளைஞனின் உறவினர்கள் பொலிஸுக்கு அழைக்கப்பட்டு 'அவன் பஸ் நிலையத்திலேயே மயக்க முற்று விழுந்து விட்டதாகவும்தமக்கு இம்மரணம்பற்றிய எவ்வித சந்தேகமும் இல்லையென்றும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கேற்றாப்போல் நீதிவானின் தீர்ப்புக்கூட 'இம்மரணம் இருதய நோயினால் ஏற்பட்ட மரணமே'' என அளிக்கப்பட்டுவிட்டது.

கடந்த அரசாங்கத்தின் போது பொலிஸ் படையினரால்படுகொலை செய்யப்பட்ட பல சம்பவங்கள் பற்றி விசாரணை செய்யப்படும் நீதிவழங்கப்படும் என்றெல்லாம் கூறி பதவிக்கமர்ந்த சந்திரிகா அரசாங்கம் இதே படையினரை பகைத்துக்கொள்ளாமலிருப்பதற்காக எல்லா கொமிஷன்களையும் கிடப்பில் போட்டுவிட்டது. இன்றைய ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளாக நட்ட ஈடுவழங்குவதும் இறப்பு சான்றிதழ் வழங்குவதும் மட்டுமே காணப்படுகிறது.

இந்நிலையில் தான் கடந்த இருவருடங்களும் படையினர், பொலிஸ் ஆகியோரின்தமிழர் வேட்டையாடல்படிப்படியாக வளர்ந்து உச்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இராஜலிங்கத்தின் படுகொலை ஒரு சிறு துளி உதாரணம் மாத்திரமே. இது இத்துடன்முடிவடையப் போவதுமில்லை. வடக்கில் படையினர் நடத்தி வரும் பாலியல் வல்லுறவு, படுகொலைகள், கொள்ளைகள் என்பவை படையினருக்கு சந்திரிகா கொடுத்து வந்த லைசன்ஸ்களுக்கு உதாரணங்கள்.

-கரன்



## சாணக: நல்லவர்க்குக் காலமில்லை!

இலங்கை லிபரல்கட்சியின்தலைவர் கலாநிதி சாணக அமரதுங்க தனது 34வது வயதில் 1996 - 08 - 01 ல் இடம் பெற்ற வாகன விபத்தில் காலமானார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தாராள ஜனநாயக சித்தாந்தப் போக்கினை முழு விசுவாசத்துடன் அவர் கடைப்பிடித்தார்.

1988லே லிபரல் கட்சியை தேர்தல் ஆணையாளர் அங்கீகரிக்கும் வரை லிபரல் ஜனநாயகக் கவுன்சில் மூலமாக லிபரல் ஜனநாயக சித்தாந்தத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தி வந்தார். லிபரல் ஜனநாயகக் கவுன்சிலை ஆரம்பித்ததிலிருந்து அவர் மறையும் வரைதமிழ்பேசும் மக்களின்நியாயமான உரிமைகளுக்கு குரல் கொடுத்து வந்தார். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெரும்பான்மை சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றியே அக்கறைக் காட்டாத சூழ்நிலையிலும் சாணக அமரதுங்க தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு தமிழ் பேசும் மக்களுக்கு சமஷ்டி ஆட்சி வழங்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுத்து வந்தார்.

அண்மைக் காலத்தில் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட போது சில சிங்கள அரசியல்தலைவர்கள் மதில் மேல் பூனை போலச் செயற்பட்டனர். சிலர் சிங்களப் பேரினவாதக் கருத்துக்களையே தொடர்ந்தும் முன்வைத்தனர். ஆனால், சாணக அமரதுங்க அதிகாரப் பகிர்வு யோசனைகளைப்பகிரங்கமாக ஆதரித்து பிரச்சாரம் செய்து வந்தார். வெகுஜன தொடர்புசாதனங்களின் மூலம் அதிகாரப் பரவலாக்கலின் அவசியத்தை பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு புரிய வைப்பதில் அரும்பாடு பட்டார்.

இலங்கையில் யதார்த்த நிலைப்பாடுகளை ஆழமாக அணுகியதோடு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசியல் யாப்பில் மாற்றங்களை நிதர்சனமாக்க முனைந்தார் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான காத்திரமானயதார்த்தபூர்வமான கருத்துக்களை மிக ஆணித்தரமாக எடுத்துரைத்தார். முன்னைய அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் பொருட்டுக்கூடிய சர்வக்கட்சி மாநாடு முதல் அவர் உயிர் துறக்கும் வரை இனப்பிரச்சினை தொடர்பானசகல பொது அரங்குகளிலும் தமிழரின் உரிமைகளை விட்டுக்கொடுக்காது முன்னெடுத்துச் சென்றார்.

இலங்கையின் மனித உரிமைகள் அதிகாரப் பரவலாக்கல் என்பன தொடர்பாக காத்திரமான கருத்துக்களை முன்வைத்து சிறப்புப் பணியாற்றிய பெருமை அவருக்கே உரியது. இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் மிக இளம் வயதிலேயே அவரை இழக்க நேரிட்டமை பேரிழப்பாகும்.

**நாதன்**

## மாமாங்கக் குண்டு: படையினர் பின்னணியில்!

ஒகஸ்ட் 11ம் திகதி மட்டு மாமாங்கப் பிள்ளையார் கோயிலில் குண்டொன்று வெடித்ததும், இச்சம்பவத்தில் 40க்கு மேற்பட்டோர் காயமடைந்ததும் ஒரு சிறுவன் கொல்லப்பட்டதும், அரசு மற்றும் தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் புலிகளே இக்குண்டு வெடிப்பை நடாத்திய காட்டுமிராண்டிகள் எனச் செய்தி வெளியிட்டதும் தெரிய வந்த செய்தி.

தெரியவராத செய்தி இக்குண்டு வெடிப்பை நடாத்தியது உண்மையில் புலிகளல்ல என்பதும் மட்டக்களப்பில் புலிகளின் தாக்குதலிலிருந்து பலமுறை தப்பிய சித்தா என்ற பொலிஸ்காரரே இச்சம்பவத்தின் சூத்திரதாரி என்பதும் இச்சம்பவம் மாமாங்கம் கோயிலுக்கருகே உள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்குக் கூடத் தெரியாமலே மேற்கொள்ளப்பட்டதும்இதனாலேயே அக்காவல் நிலையத்தைச்சேர்ந்த நான்கு பொலிஸார் காயமடைய நேர்ந்தது என்பதும்தான்.

இதனை புலிகளின்தலையில் கட்டி விடும் நோக்கில்மறுநாள் காலையே இராணுவத்தினரால் புலிகளே இக்கொலையை மேற்கொண்டுள்ளார்கள் என்ற கருத்துப்பட துண்டுப்பிரச்சுரம் விநியோகிக்கப்பட்டதும் 12ம் திகதி இரவு பொதுமக்கள் நிறைந்திருந்த சமயம் சுயபாதுகாப்புக் கருதி குண்டொன்றை வெடிக்கவைப்பதாகக் கூறி குண்டொன்றை காவல் நிலையத்தினுள்ளே வெடிக்க வைத்து தாங்கள் மக்களின் பாதுகாப்புக் கருதி முன்னெச்சரிக்கையுடனேயே வெடிக்க வைப்போம் என்று கூறி மக்களின் இரட்சகர்களாகக் காட்டிக் கொண்டதும் இக்குண்டு வெடிப்பை புலிகளல்ல படையினரே செய்திருக்கிறார்கள் என்று உறுதிப்படுத்திற்று.

இவ்வாறான படையினரின் ஒரு நடவடிக்கையே சிறிது காலத்திற்கு முன்னர் நல்லூர் கந்தசாமி கோயிலினுள் புலிகள் குண்டு வைத்ததாக கூறப்படும் சம்பவமும் என்று தெரிகிறது.

– சத்தி

### சிறுகதைப்போட்டி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபத்தின் தமிழ்த் தேசிய சேவை மலையக எழுத்தாளர்களுக்கான சிறு கதைப் போட்டியொன்றை அறிவித்துள்ளது. மலையகத்தில் பிறந்த சகலரும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். கையெழுத்தில் முழுத்தாளில் தாளில் பத்துப் பக்கங்கள் கொண்டதாக சிறு கதைகள் அமைய வேண்டும். முதற் பரிசு ரூபா 10,000, இரண்டாம் பரிசு ரூபா 7,500, மூன்றாம் பரிசு ரூபா 5,000. போட்டிக்கான முடிவுத் திகதி 20.09.1996.

## வவுனியாவில் கடத்தப்பட்ட யாழ் வர்த்தகருடைய சடலம் மொரட்டுவவில்!

மொரட்டுவவில் ரயர் போட்டு எரிக்கப்பட்ட ஒருவருடைய சடலம் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக நடாத்தப்பட்ட விசாரணைகளில் இச்சடலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருடையது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இவர் வவுனியாவில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் குற்றமற்றவர் எனக் காணப்பட்டதன் பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும், விடுதலையாகி சில தினங்களின்பின்னர் பொலிஸாரால்கைது செய்யப்பட்டபோது இவரிடமிருந்து பொலிஸாரால் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களை மீளப் பெற பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற இவர் மீளத் திரும்பி வரவில்லை என்றும் தெரிய வருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியாவைச் சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று கான்ஸ்டபிள்கள் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

-என்.எஸ்

## தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களது போராட்டமும்

அடுத்த ஏப்ரலில்தான் அரசியல்தீர்வு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்ற பீரிஸின் அறிவிப்பு தமிழ்க் கட்சிகளுக்குப் பெரிய தலையிடியாற்று. பிரேமதாசவை நம்புகிறோம். சந்திரிகாவை நம்புகிறோம் என்று அறிக்கை விட்டு தள்ளிய காலங்களும் போயிற்று.

ஜனநாயக வழிக்கு வந்த ஒன்பது வருடங்களில் அவ்வழிமுறையில் தமிழ் மக்களது உரிமைகளைப் பெறத்தான் முடியவில்லை. உள்ளதையாவது காப்பாற்றிக்கொண்டீர்களா என்ற கேள்விக்கு சொல்லப் பதிலேதுமில்லாத கையறு நிலையில் ஏதாவது ஒரு வழியில் இருப்பையாவது தக்கவைத்துக்கொள்ளலாமா என்று ஆராய கடந்த வாரத்தில் ஒருநாள் ஐந்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றாய்க் கூடின.

வட - கிழக்கில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஹர்த்தால் ஒன்றை நடாத்தினால்என்ன? என்றார் வந்திருந்த பிரதிநிதிகளுள் ஒருவர். அவருடைய கட்சியினர் இராணுவத்தினருடன் நில்லாததாலோ என்னவோ அவர் இக்கோரிக்கைப்போட்டிருக்கிறார். இதனை உடனடியாகவே மறுத்தார். இன்னொரு கட்சியின் பிரதிநிதி. கூடவே அதற்கான காரணத்தையும் சொன்னார்; எங்கடை பெடியள் இராணுவத்தோடை சேர்ந்து நிக்கிறாங்கள் நாங்கள் கடையைப்பூட்டச்சொல்ல படையினர் திறக்கச் சொல்ல அது பெரிய சில் லெடுப்பாகப் போய்விடும்''

மூன்றாவது பிரதிநிதியும் இதனை ஆமோதித்தார்.

ஆக, அந்த யோசனையை விட்டு விட்டு வேறு என்ன செய்யலாம்என்று பேசினார்கள். சத்தியாக்கிரகம் இருப்பது, சிறுசிறு கருத்தரங்குகள் நடத்துவது, பொதுக் கூட்டங்கள் நடாத்துவது, துண்டுப் பிரசுரம் வெளியிடுவது, என்று நீண்ட ஆலோசனைகளின் பின்னர் சுவரொட்டி ஒட்டுவது என்று முடிவாயிற்று. ஒரு நல்ல வழிமுறையைக் கண்டுபிடித்த திருப்தி பிரதிநிதிகளுடைய முகத்தில். எல்லோருக்கும் பசைவாளி தூக்கிய முன்னனுபவம் இருந்ததால் இது இலகு என்று நினைத்தார்களோ என்னவோ?

இந்த நேரத்தில், இச்சுவரொட்டியின் அடியில் ஐந்து கட்சிகளினதும் பெயரை எப்படி போடுவது என்று ஒரு கேள்வியைத்தூக்கிப்போட்டார் ஒருவர். பழையபடி பிரதிநிதிகள் முடியைப் பிய்த்துக்கொண்டிருக்க இன்னொரு கட்சியின் பிரதிநிதி சொன்னார் 'ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டு என்று போடு[illegible]'

எல்லோருக்கும் இது நல்ல யோசனையாகப் பட்டது. ஆனால், ஒரு கட்சியின் பிரதிநிதிக்கு மட்டும் இதில் உடன்பாடில்லை. அவர் சொன்னார்; எங்களுடைய கட்சி தமிழ் மக்களை மட்டும் பிரதிநிதிப்படுத்துவது அல்ல. முஸ்லிம்களையும் நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். அது தவிர தமிழ்க் காங்கிரஸ், கூட்டணி, போன்றவை இக்கூட்டுக்குள் இல்லை. நாங்கள் வெறுமனே ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டு என்று போட்டால் அக்கட்சிகளும் இதனுள் இருப்பதாக மக்கள் தவறாக எண்ணிவிடக் கூடும். ஆக, அது சரிவராது.

இப்போது மீளவும் குழப்பம்; தீராக்குழப்பம்! அப்படியென்றால், ஐந்து கட்சிகளினதும் பெயரைப்போட்டால்என்ன? என்ற ஒருவரது கேள்விக்கு எந்த ஓடரிலை பெயரைப்போடுவது என்ற இன்னொரு பிரதிநிதியுடைய கேள்வி பதிலாக இருந்தது. ''அல்பமெற்றிக் ஓடரிலை' போடுவம் என்றார் ஆலோசனையை முன்வைத்த பிரதிநிதி.

பிரச்சினை தீர்ந்தது; சுவரொட்டியே ஒட்டி முடித்தால்போல் நிம்மதியுடன் எழும்பும் நேரம் இன்னொரு குண்டைத் தூக்கிப்போட்டார் ஒருவர். அப்ப 68ம் ஆண்டு தொடங்கிய எங்களுடைய இயக்கத்தினுடைய பெயர் கடைசியாக வரும். முந்தநாள் தொடங்கிய இயக்கத்திற்னுடைய பெயர் முதலில் வரும். இதை எங்களாலை ஏப்படி ஏற்க இயலும்?

இந்தக் கேள்விக்கு பிறகு கூட்டம் 'காரசார'மாக நடந்தது . பிரதிநிதிகள் என்ன முடிவுக்கு வந்திருப்பார்கள் என்று நாம்சொல்லத்தேவையில்லை. ஆனாலும் சொல்கிறோம். எந்த முடிவும்இல்லாமலே மீண்டும் ஒரு முறை கூட்டம் கூடிப் பேசுவதாக முடிவு செய்யப்பட்டதுடன் கூட்டம் கலைந்தது.

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!!

-மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தீர்வு அடுத்த வருடம்!

- நாசமறுப்பான்







1997 ஏப்ரல் மாதத்திற்கு முன்பாக அரசாங்கத்தின் தீர்வுப் பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்று இப்போது அறிவித்துள்ளார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள்.

1994 டிசம்பரிலேயே தயார் என்று அறிவிக்கப்பட்ட இந்தத் தீர்வுப்பொதி இத்தனை கால இழுத்தடிப்புக்குப் பிறகு இப்போது அடுத்த வருடம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வழமையான அறிவிப்புக்களைப்போலவே இந்த அறிவிப்பும் எந்த விதமான நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படையான திட்டமும் இல்லாத வெற்று அறிவிப்பாகத்தான் இருக்குமோ என்ற சந்தேகம் பொதுவாக எல்லோர் மனதிலும் எழுந்துள்ளது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்பும் சரி, பிறகும் சரி, இதன் தலைவர்கள் சொன்ன விடயங்களில், விதித்த காலக்கெடுக்களில் ஒன்றையேனும் சரியாக நடைமுறைப்படுத்தியதில்லை. பிற்போடல்கள், அல்லது சொன்னவற்றுக்கு நேரெதிரான விடயங்களை நடைமுறைப் படுத்தல்கள் என்பவற்றையே இந்த அரசின் இரண்டாண்டுகால அனுபவங்கள் காட்டியுள்ளன.

ஜனாதிபதி முறை மாற்றியமைக்கப்படுவது தொடர்பான காலக்கெடு முதல், தீர்வுப்பொதி தொடர்பான அமைச்சரின் இந்தக் காலக்கெடுவரை எத்தனையோ காலக்கெடுக்களை அரசாங்கம் கூறியிருக்கிறது. அவற்றில் ஒன்றிற்குத் தானும், அவற்றைக் கூறும் போது நடைமுறைப்படுத்தும் திட்டங்களை அது கைவசம் வைத்திருந்ததில்லை!

இந்த அறிவிப்பினை எடுத்துக்கொள்வோம்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசாங்கத்தின் இப்பிரேரணைகள் ஏற்கெனவே பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் நிராகரித்து விட்டன; அல்லது அதில் சில திருத்தங்கள் செய்யப்படாவிடில் ஆதரிக்க முடியாது என்று தெரிவித்து விடடன. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவோ இதன் அடிப்படையையே அதாவது பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையையே நிராகரித்து ஒற்றையாட்சி முறைமை தொடர்பாக பிடிவாதமாக நிற்கிறது. தெற்கிலுள்ள சிங்கள இனவாத சக்திகள் இத்தீர்வுத் திட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளன. தேசியப் பத்திரிகைகளில் ஒன்று கூட (ஏரிக்கரை தவிர்ந்த) இத்திட்டத்திற்கு ஆதரவாக நிற்கவில்லை.

தவிரவும், பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை ஆதரவுடன் இந்தத் தீர்வை ஏற்கச் செய்வதற்குத் தேவையான வாக்குகளைப் பெறுவதற்கு ஏற்ற விதத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களுடனான தனது உறவைப் பலப்படுத்துவதற்கும் இந்த அரசாங்கம் முயல்வதாகத் தெரியவில்லை. மாறாக, அவர்களை மேலும் மேலும் எதிரணிக்கு தள்ளும் முயற்சியிலேயே அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

இதன் காரணமாக பேராசிரியரின் இக்கூற்று நடைமுறைக்கு வருமா என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இந்த நிலையில், இப்பொழுது அமைச்சர் இவ்வாறு அறிவித்திருப்பதன் நோக்கம் தான் என்ன?

இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்கக் கூடியது என எதிர்பார்க்கப்பட்ட அரசாங்கத்தின் யோசனைகள், திரும்பத்திரும்ப சிங்கள இனவாத அடிப்படையிலான விமர்சனங்களுக்கு வளைந்து கொடுப்பதற்காக மிகவும் பெரியளவிற்கு மாற்றப்பட்ட பின்னரே சட்ட வரைவு வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள், உண்மையில் மாற்றங்கள் அல்ல; அது சட்டவரைவு என்ற வடிவில் இருப்பதால் மாற்றம் போலத் தோன்றுகிறது. ஆனால், ஆரம்பத்தில் அரசாங்கம் வெளியிட்ட யோசனைகள்தான் இவை என்று ஜி.எல். பீரிஸ் அவர்கள் முன்பொருமுறை காதிலே பூச்சொருக முனைந்திருந்தார். ஆயினும், இந்த வரைபு பிராந்தியங்களின் மூக்கணாங் கயிறுகளை மத்திய அரசிடம் கொடுத்துள்ளதன் மூலம் வெறும் மத்திய அரசின் தலையாட்டிப் பொம்மைகளாக அவை இயங்குவதற்கு மட்டுமே வழி செய்துள்ளது. அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசப்பட்டபோதும் உண்மையில் இந்த யோசனைகள் மூலம் பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தின் மீதான கட்டுப்பாட்டை தொடர்ந்தும் மத்திய அரசாங்கமே வைத்திருக்க விரும்புவது தெரிகிறது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்மொழியப்பட்ட இந்த அரசியலமைப்பு சீர்த்திருத்த யோசனைகள், ஏற்கெனவே கொண்டு வரப்பட்ட மாகாண சபைகளைப் போல, முழுநாட்டிற்குமான மாற்றங்களாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இது வடக்குக் கிழக்கின் தமிழ் - முஸ்லிம் மக்களின் பிரச்சினையின் விஷேடத் தன்மையும், உரிமை மறுக்கப்பட்ட அவர்களது இத்தனைகால போராட்டங்களும், யுத்தம், அதன் விளைவுகள் என்பன பற்றியும் ஒரு தெளிவான பார்வை இன்றி முழு நாட்டிலுமுள்ள அனைத்து மக்களுக்குமான தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுகிற ஒரு நடவடிக்கையாகும் என்பதில் சந்தேகமில்லை.

பல்லின பல்மத நாடாக உள்ள இந்த நாட்டில் இனரீதியான முரண்பாடு பலமடைந்திருக்கும் ஒரு சூழலில், இவ்வாறு பொதுப்படையானதாக வைக்கப்படும் தீர்வு எப்போதும் நிலைமையின் உக்கிரத்தை எளிமைப்படுத்துவது மட்டுமல்லாமல், இனமுரண்பாட்டை மேலும் சிக்கலுக்குள்ளாக்கிவிடும் என்பது ஒரு முக்கியமான விடயம். முரண்பாடுகளை தீர்ப்பதில் அக்கறை காட்டுகின்ற ஒவ்வொருவருக்கும் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய பள்ளிப்பாடம் இது.

துரதிர்ஷ்டவசமாக எமது நாட்டின் வரலாற்றில் இந்தப் பள்ளிப்பாடத்தைக் கூட தெரிந்து கொள்வதில் யாரும் அக்கறை காட்டுவதில்லை.

இதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு.

முரண்பாட்டின் ஒரு கூறான சிங்களப் பேரினவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களின் கையிலேயே அதிகாரம் இருப்பதாலும், தீர்வுக்கான முயற்சிகளில் இறங்குபவர்களாக அவர்களே இருப்பதாலும், தீர்வு முயற்சிகளின் போதெல்லாம் தம்பக்கத்தில் முடியுமானளவுக்கு சாதகமான அம்சங்களை வைத்துக்கொள்ளவே அவர்கள் முற்படுகின்றனர். தமக்கு சாதகமான விதத்திலேயே தீர்வைக்காண விரும்புவதன் காரணமாகவே இந்தப் பள்ளிப் பாடம் அவசியம் என்று யாரும் கருதுவதில்லை. இதனால், மறுகூறான ஒடுக்கப்படுகின்ற இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள், அவர்கள் புலிகளாயினும் சரி, யாராயினும் சரி, தொடக்க முதலே சந்தேகத்துடன் தான் தமது எதிர்வினைகளைச் செய்யத் தொடங்குகிறார்கள். தமது பாதுகாப்புக்கு வேண்டியளவு உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொள்வதில் அவர்கள் விடாப்பிடியாக நிற்பது தவிர்க்க முடியாததாகின்றது.

இந்தச்சிக்கல் ஒடுக்கப்படுபவர்களுக்கும் ஒடுக்குபவர்களுக்கும் இடையிலான உறவு அப்படியே நிலவும் அதேவேளை, பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படவேண்டும் என்று எதிர்பார்க்கும் கற்பனாவாத நிலைக்கு இட்டுச்செல்கின்றது. அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் அவரது சகாக்களுமாக 'அரும் பாடுபட்டு' தயாரித்த இந்த தீர்வுத்திட்டமும் அத்தகைய கற்பனாவாத எதிர்பார்ப்புகளுடனேயே தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்வு இனப்பிரச்சினையையும் அதன் குறிப்பான தன்மையையும் கணக்கிலெடுக்காமல் தனது தீர்வை முன்வைத்திருக்கிறது என்பதனைக் காட்ட சில உதாரணங்கள்:

1. இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்படுவதோடு அதைப் பேணிப்பாதுகாப்பதும் வளர்த்தலும் அரசின் கடமையாகும் (7:1)

2. பிராந்திய சபையின் ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனையின் மீது ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். ஆனால், இந்த ஆலோசனையில் தெரிவிக்கப்படுவரை, மறுத்து இன்னொருவரைப் பிரேரிக்குமாறு ஜனாதிபதி கோரமுடியாது என்று எந்த விதிகளும் தெரிவிக்கவில்லை. இது ஜனாதிபதி தனக்கு சார்பான, தன் கட்சிக்கு சார்பானவர்களை மட்டுமே நியமிப்பதற்குரிய வாய்ப்பை அவருக்கு வழங்குகிறது. (10:2)

3. ஆளுநருக்கு அவரது பணிகளைப் பிரயோகிப்பதில் உதவி செய்து ஆலோனையளிப்பதற்காகவே பிராந்திய மந்திரி சபை முதலமைச்சர் தலைமையில் இயங்குகிறது (14:1) ஆக, பிராந்திய சபையின் மந்திரிசபைக்கு ஒரு ஆலோசகர் சபை என்பதை விட வேறு அர்த்தம் இல்லை.

4. இந்த விடயம் இன்னும் தெளிவாகத் தெரியப்படுத்தப்படுவது இந்த வரைபின ஷரத்தான 14:2 இன் மூலமாகவாகும். இது அமைச்சரவையால் வழங்கப்பட்ட ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமா இல்லையா என்பதை ஆளுநரே தீர்மானிக்க அதிகாரம் வழங்குகிறது. ஆலோசனையொன்று வழங்கப்பட்டதா, அது ஏன் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பது போன்ற விடயங்கள் தொடர்பாக எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படக்கூட முடியாது என்றும் இந்த ஷரத்து கூறுகிறது. இதன் அர்த்தம் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இயங்குபவராக முதலமைச்சரும் பிராந்திய சபையும் இருக்கும் என்பதையே.

5. ஆளுநருக்கு பிராந்திய சபையைக் கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது பிராந்திய சபையின் அதிகாரங்களை மத்திய அரசு தான் விரும்பியபடி கட்டுப்படுத்தப் போதிய வாய்ப்புகளை வழங்குகிறது. (10:8.இ)

6. பிராந்திய சபைகளின் நிதி தொடர்பாக மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் சபையான நிதி ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் (20: 1) என்ற ஷரத்து, மூன்று இனங்களைச் சேர்ந்த மூவர் நியமிக்கப்படுவார்கள் என்று கூறிய போதும், அவர்கள் அவ்வினங்களை எந்த வகையில் பிரதிநிதித்துவப்படுத்துவர் என்று தெரிவிக்கவில்லை. கல்விமான்களாக இருப்பதுவும், ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுவும் மட்டுமே அந்த இனத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் தகுதியை இவர்களுக்குத் தந்துவிட முடியாது. ஆக, இந்த ஆணைக்குழு, ஜனாதிபதியின் செல்வாக்குக்குட்பட்ட ஒன்றாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இந்த ஆணைக்குழுவை ஒரு சுயாதீன அமைப்பாகக் கொள்ளுதல் முடியாது. இவர்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களும் அல்லர். ஆனால், இந்த ஆணைக்குழுவே பிராந்தியத்தின் நிதிவிவகாரங்களை தீர்மானிப்பதாக அமையப் போகிறது.

7. இந்த ஆணைக்குழு நிதி தொடர்பாக, பிராந்தியத்தின் சனத்தொகை, பிராந்திய தலா வருமானம், பொருளாதார, சமூக சமத்துவமின்மைகளைக் குறைத்தல், ஒரு பிராந்திய தலாவருமானம், பிராந்தியங்களுக்கிடையிலான அதியுயர் தலாவருமானம் என்பவற்றுக்கிடையிலான வித்தியாசத்தைக் குறைத்தல் என்ற அடிப்படைகளில் தனது முடிவுகளை மேற்கொள்ளும். (20:5) இது ஒரு பிராந்திய மக்களுக்குரிய இயற்கை வளம் அவர்களது விருப்பத்தேர்வுகள், அவர்களுடைய சிறப்புத்தேர்ச்சிகள் என்பவற்றைக் கணக்கிலெடுத்துள்ளதாகத் தெரியவில்லை. அத்துடன் இந்த ஆணைக்குழு தனக்குத்தானே தனது வேலைகளை தீர்மானிக்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது. (20:6) மேலும் இதன் முடிவுகள் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமே ஒழிய இவற்றின்மீது பாராளுமன்றம் எத்தகைய தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாது. (20:7) இவையெல்லாவற்றையும் விட முக்கியமானது இந்த நிதி ஆணைக்குழுவுடைய எந்தத் தீர்மானங்கள் தொடர்பாகவும் எந்த நீதிமன்றத்திலும் கேள்வியெழுப்பப்படவோ விசாரிக்கப்படவோ முடியாது. (20:8) என்பது தான்.

9. பிராந்திய பொலிஸ் ஆணையாளர் ஆளுநருடைய கலந்தாலோசனையின் பேரிலேயே முதலமைச்சரால் நியமிக்கப்படவேண்டும் (25 -3) என்ற ஷரத்து பிராந்திய பொலிஸ் ஆணையாளர் கூட முதலமைச்சரது சுதந்திரமான தெரிவு அல்ல என்பதையே காட்டுகிறது. தவிரவும் பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவே அங்குள்ள முழு ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு உள்ளிட்ட சகல விடயங்கட்கும் பொறுப்பாக இருக்கும். இவ்வாணைக்குழு . நேரடியாகவும் ஆளுநர் மூலமாகவும் மத்திய அரசின் செல்வாக்குக்குட்பட்டு இருக்கும் ஆபத்தையே கொண்டுள்ளது.

10. இதில் உள்ள இன்னொரு வேடிக்கையான விடயம் என்னவென்றால், பிராந்திய பொலிஸ் விசாரிக்கப்படக்கூடாது என்று விலக்கப்பட்டுள்ள விடயங்களை பட்டியலிடும் ஷரத்து (25:4) இந்த பொலிசுக்கு உள்ள அதிகாரங்கள் அனைத்தையும் பறித்துவிடுகிறது. உதாரணமாக, ஜனாதிபதிக்கெதிராக வசைபாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டு மத்திய அரசாங்கத்தின் பொலிஸ் பிரிவினால் விசாரணைக்காக கைது செய்யப்படுவார். தன் பிராந்தியத்திலிருக்கும் ஒருவர் இக்காரணங்களுக்காக தேசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட போதும் பிராந்திய பொலிசாரால் இது தொடர்பாக எதுவும் செய்ய முடியாது. சாதாரண சிவில் குற்றங்களை விசாரிக்கும் (கோழி பிடித்த, கசிப்புவடித்த போன்றவை) அதிகாரம் மட்டுமே அதற்கு இருக்கிறது!

இதற்கு ஒரு நீண்ட பட்டியலையே போடலாம். இவ்வளவும் இப்போதைக்குப்போதும்.

இவை தெட்டத்தெளிவாக உணர்த்துவதெல்லாம், இந்தத் தீர்வு தமிழ், முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாகக் கொண்டு உருவாக்கும் ஒரு பிராந்தியத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை விளக்கப் போதுமானவை.

ஆக, ஒரு புறத்தில் மத்திய அரசு பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதாகக் கூறிக்கொண்டு (பரவலாக்குவதுதான்: பகிர்தலல்ல) அவற்றை மீளப்பறிக்கும் வேலையை செய்யும் அதேவேளை வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளையும் உணர்வுகளையும் கொஞ்சம் கூட கணக்கிலெடுக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இந்த நிலையில் இந்தத் தீர்வு 1997ம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படுமானாலும் நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்படுமா என்பது சந்தேகமே. ஆக, ஏன் இந்த அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தித் தான் ஆவோம் என்று இந்த அரசாங்கம் கூறிவருகிறது? நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தை நியாயப்படுத்தவா? அல்லது அரசியல் தீர்வில் அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதைக்காட்டுவதற்காகவா? அல்லது இரண்டுக்குமாகவா?

எது எப்படி இருப்பினும் இந்தத் தீர்வு மேலே குறிப்பிட்டது போன்ற விடயங்களில் கவனமெடுத்து திருத்தப்பட்ட பின் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே, அது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் பயனுள்ள விளைவுகளைத் தரும். ஒருவேளை பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டாலும் கூட ஒரு நல்ல தீர்வை முன் வைத்த பெருமையாவது அரசாங்கத்திற்கு மிஞ்சும்.

அல்லது, அமைச்சரின் கூற்றுக்குக் காரணம் மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்காத் தான் என்ற பெயர் மட்டுமே எஞ்சும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சொல்வதற்கு வேறு வழியில்லை.

## அஷ்ரப் மீது கொலை முயற்சி!?





கடந்த இரு வாரங்களுக்கு முன், கல்முனையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் படுகொலை செய்வதற்காக வந்த இரு தற்கொலையாளிகளை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்று விட்டதாக அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் பத்திரிகைகளும், வானொலி, தொலைக்காட்சியும் பிரச்சாரம் செய்து வருகின்றன.

இந்நிகழ்ச்சிபற்றிய நம்பகத்தன்மை மிகவும் குறைவான நிலையில் விடுதலைப் புலிகளோ அல்லது முஸ்லிம் காங்கிரஸோ இதுபற்றிய உண்மை நிலையை வெளிப்படுத்தவில்லை. அநேகமாக இது அரசின் தந்திரோபாய மிக்க பிரச்சாரம் போல் தெரிகிறது. கல்முனையைச் சேர்ந்த இரு அப்பாவி பாடசாலை மாணவர்களே இத்துப்பாக்கிச் சூட்டில் இறந்து போனவர்களாவர். அரசின் இராணுவத்தால் திட்டமிடப்பட்ட ''பயங்கரவாதி'' நாமங்களைச் சூடிய ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் மரணங்கள் ஒன்றும் மக்களுக்குப் புதிதானவையல்ல; ஏலவே கடந்த காலங்களில் அரசின் சுய இலாப நடவடிக்கைகளுக்காக எதிரிகளாக பிரிக்கப்பட்டுவந்த தமிழர், முஸ்லிம் உறவு அரசின் கபடத்தனத்துக்கு அதிக இலாபத்தையே தந்திருக்கிறது. இதனால் அதிக துன்பமடைந்தவர்களும் நஷ்டமடைந்தவர்களும் வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களும், முஸ்லிம்களுமே.

வடக்கு கிழக்கு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையேயான உறவு தற்போது சுமூகமாக இருப்பதால் அது சிங்களப் பேரினவாதிகளுக்கு ஒரு அச்சம் தரும் நடவடிக்கையன்றி வேறில்லை. ஆகவே இச்சமூக உறவைச் சீர்குலைப்பது இன்று அரசாங்கத்திற்கும் பேரினவாதிகளுக்கும் உடனடித் தேவையாகவுள்ளது. இத் தேவையின் நிமித்தம் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே பாரிய இனத்தீ மூட்டும் முதல் கைங்கரியமே அஷ்ரஃப் மீதான படுகொலைப் பிரச்சாரம் ஆகும் என நம்புவதற்கு அநேக ஏதுக்கள் இருக்கின்றன.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்து வைக்கும் அரசின் தந்திரோபாயத்திற்கு விடுதலைப்புலிகளும் ஏனைய ஆயுத அமைப்புகளும் பெரும் பங்காற்றியிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் முஸ்லிம்கள் மீதான இனச் சுத்திகரிப்பு (இதற்கு மொஸாட் பின்னணியில் இருந்ததாகச் சொல்வர்) இனப் படுகொலைகளால் வடகிழக்கில் இரத்தம் ஆறாய் ஓடி இருக்கிறது. காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, ஏறாவூர் கிராமம் மீதான படுகொலை, பஸ் படுகொலைகள் என்பன வரலாறு வெட்கப்பட வேண்டிய துயரங்களாகின. விடுதலைப் புலிகள் மட்டுமன்று ஈ.பி.ஆர்.எல்.எப், டெலோ, புளொட் போன்ற அமைப்புகளும் தமிழர் முஸலிம் உறவில் நெருடல் ஏற்பட காரணமாய் இருந்திருக்கின்றன. காரைதீவில் 45க்கும் மேற்பட்ட தொண்டர் படையைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப்பினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த காலங்களில் அரசும், ஏனைய ஆயுத அமைப்புகளும், விடுதலைப் புலிகளும், முஸ்லிம் சுயநலவாதிகளும் தமிழர் முஸ்லிம் உறவைத் தங்களது சுயலாபங்களுக்காகப் பயன்படுத்தியிருக்கின்றனர். எனினும், 1994 இறுதிக்குப்பின் தமிழர் முஸ்லிம் உறவில் ஒரு கணிசமான முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் மீதான படுகொலையை நிறுத்தி விட்டதற்கான சூழல் தென்படுகிறது. தமிழர்களும் முஸ்லிம்களும் நெருங்கி வர ஆரம்பித்திருக்கும் இன்றைய தருணத்தில் அஷ்ரஃப் மீதான படுகொலை முயற்சிபற்றி; அதன் உண்மை பொய்மைபற்றி நாம் நோக்க வேண்டியிருக்கிறது. சிறுபான்மையினங்களின் வாழ்தலுக்கான நியாயமான போராட்டத்தில் முஸ்லிம்கள் தொடர்பாக தமிழ் தலைமைகள் இழைத்திருக்கும் தவறுகள், தமிழர் தொடர்பாக முஸ்லிம் தலைமைகள் இழைத்திருக்கும் தவறுகள் பற்றிய மதிப்பீடுகள் உடனடியாக தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அவசியமாகிறது.

இந்த நாட்டில் காலகாலமாய் பேரினவாதிகளால் அடக்கப்படும், நசுக்கப்படும் மக்கள் என்ற வகையில் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பேரினவாதிகளுக்கெதிரான போராட்டம் தமிழர் முஸ்லிம் இணைந்த சக்தியின் பலத்தின் அடிப்படையிலேயே முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும். ஆனால், துரதிருஷ்டவசமாக பேரினவாதிகளின் சூழ்ச்சிக்கு பலியாகி தமிழர்களும், முஸ்லிம்களும் மாறி மாறி ஒருவரின் நியாயமான உரிமைகளை மற்றவர்கள் தங்களின் தனிப்பட்ட நலன்களுக்காக காட்டிக்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

பொன் இராமநாதனில் இருந்து தொடங்கி, தென்னிலங்கை முஸ்லிம் அரசியல் தலைவர்கள், பிரபாகரன், அஷ்ரஃப் என இன்று வரையான இந்தத் தலைமைகளினை தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் ஐக்கியப்பட்ட போராட்டத்திற்கு துரோகமிழைத்தவர்களென வரலாறு காட்டி நிற்கிறது. இவ்வரலாற்றின் மாற்றத்தின் ஊடே இன்றைய சூழலை முதன்மைப்படுத்தி பிரபாகரனும், அஷ்ரஃபும் பேரினவாதத்திற்கெதிரான போராட்ட சக்திகள் என்ற வகையில் தத்தமது பாத்திரங்களை உணர்ந்து, தங்களது நடவடிக்கைகளை மாற்றியமைத்தல் வேண்டும். தமிழர் முஸ்லிம்களது உறவு அவர்களின் உரிமை தொடர்பாக இருபக்கத் தலைமைகளும் சிந்திக்கும் சூழல் வரும்வரை தமிழர், முஸ்லிம் உறவு மேம்பாடடைய வழியில்லை.

பேரினவாதத்திற்கெதிரான தமிழர் முஸ்லிம்களது போராட்டம் உறுதியாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமானால், விடுதலைப் புலிகள், முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முஸ்லிம் சிந்தனையாளர்கள், கலைஞர்கள், இளம் பரம்பரையினர் ஏனைய தமிழ்க் கட்சிகள், ஏனைய முஸ்லிம் கட்சிகள், அதிக பங்களிப்பு செய்ய வேண்டியிருக்கிறது. யார் நண்பன்? யார் எதிரி? என்பதில் தெளிவு கொள்ள வேண்டியிருக்கிறது. இதில் பெரும்பான்மையான தமிழ் முஸ்லிம் சிந்தனையாளர்கள், கலைஞர்கள், இளம் பரம்பரையினர் தெளிவுடனும் உத்தரவாதப் படுத்தப்படுகின்ற நியாயமான ஐக்கியத்திற்காகவும் உழைத்து வருவது அண்மைக்காலமாக வெளிப்பட்டு நிற்கிறது.

பிரபாகரனும், விடுதலைப் புலிகளும் தங்களது இனச்சுத்திகரிப்பு, இனப்படு கொலையின் ஊடாக முஸ்லிம்களுக்கு துரோகமிழைத்தது போன்று முஸ்லிம் காங்கிரசின் கடந்த கால நடவடிக்கைகளிலிருந்து அஷ்ரஃபும் சிங்கள ஆட்சியாளர்களின் அடக்குதலுக்கு ஆதரவான சார்பு நிலை எடுத்து தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் துரோகமிழைத்திருக்கிறார் என்பதை நியாயமான ஒரு மதிப்பீட்டுக்கு உட்படுத்தும் போது காணக் கூடியதாகவிருக்கிறது.

சிங்கள ஆட்சியாளர்களின் அமைச்சர் பதவிகளுடன் மட்டும் திருப்திகொள்ளாத தமிழ் மக்கள் இந்த நாட்டின் அடக்கு முறை அரசுக்கெதிராக நீண்ட காலமாய் அரசியல், இராணுவ மார்க்கங்களில் போராடி வருகின்றனர். 1985க்குப் பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபிதம் முஸ்லிம்களும் அடக்கு முறை அரசுக் கெதிராக தங்களது போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராகிவிட்டார்கள் என்பதைக் காட்டியது. ஆனால் இவ்வெதிர்ப்புக்களை சமாதிகட்டிவிட்டு; முஸ்லிம்களின் உரிமைப்போராட்ட விடயத்தில் அது எப்படி நடந்து கொண்டதோ அதன் அடிப்படையில் தமிழர் போராட்டம் தொடர்பாகவும் தனது பாரிய தவறுகளை இழைத்து வருகிறது.

சமாதானத்தின் பெயரால், அப்பாவி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றி சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு யுத்தத்தையே மக்கள் மீது ஏவி விட்டு கொண்டிருக்கும் சந்திரிகாவின் ஏமாற்றுத்தனமான பலவீனமான அரசாங்கத்தில் அமைச்சர் பதவியில் இருக்கும் அஷ்ரப் தமிழர் போராட்டத்தை பயங்கரவாதமாகப் பார்க்கும் மனோபாவத்தில் சிக்கிவிட்டதையே அவரது கடந்தகாலச் செயற்பாடுகள் காட்டிநிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் மீதான சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குப் பின் அதைக் கொண்டாடும் விதமாக முஸ்லிம் காங்கிரசினால் கொழும்பிலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் அரசாங்கத்தையும் இராணுவத்தையும் துதிபாடி, தமிழர்களின் மனங்களைப் புண்ணாக்கிய பதாதைகள் அஷ்ரஃபின் தூரதிருஷ்டியற்ற பார்வைக்கு சிறு உதாரணமாகும்.

அஷ்ரஃப்பால் சொல்லப்படும் முஸ்லிம்களுக்கான உரிமைப்போராட்டத்தில் முஸ்லிம் காங்கிரசுக்கு இருக்கும் அதே பொறுப்பைத்தான் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் பிரபாகரனும் கொண்டிருக்கிறார் என்பதை அஷ்ரஃப் அடியோடு மறந்து விடுகிறார். அஷ்ரஃப் உரிமைப்போராட்டம் தொடர்பாக வைத்திருக்கும் அளவீடுகள், வரையறைகள் முஸ்லிம்களிடத்தே வெட்ட வெளிச்சமாகிக் கொண்டு வரும் இன்றைய நிலையில் தமிழர் போராட்டம் தொடர்பாக அஷ்ரஃப் கதைப்பதற்கும் அதுபற்றி விமர்சிப்பதற்கும் தகுதியானவர் அல்ல என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாயிற்று.

சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களுக்கு குறைந்த பட்ச தீர்வையாவது தர வக்கில்லாத சிங்கள அரசியலில், அரசாங்கத்தில் அமைச்சராக நாமகரணம் சூடிக்கொண்டு பத்திரிகை அறிக்கைகளிலும் மேடைப்பேச்சுக்களிலும் முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் அதற்காகப் போராடுவதாகவும் கூறிக் கொள்வதை மாபெரும் போராட்டமாக காட்டும் அஷ்ரஃபின் ஏமாற்று நாடகம் பற்றியும் முஸ்லிம்களும் தமிழர்களும் புரிந்து கொள்ளல் வேண்டும்.


பிரபாகரன் விடும் தவறுகளை தமிழர்கள் விடும் தவறுகளாகவும் அஷ்ரஃப் விடும் தவறுகளை முஸ்லிம்கள் விடும் தவறுகளாகவும் பார்க்கும் நிலை மாறப்படல் வேண்டும். தங்களின் நலன்களுக்காக வேண்டி செய்யப்படும் இவர்களின் நடவடிக்கைகள்தான் வடக்கு கிழக்கில் தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் இன ஐக்கியத்திற்கு தீயாக இருக்கிறது. பிரபாகரனைப் பற்றியும், அஷ்ரஃபைப்பற்றியும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் சரியான புரிதல்களை ஏற்படுத்துவதன் ஊடாகவே இவ் அபாயத்தை தவிர்க்கலாம். இதற்காகவும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே உள்ள கலைஞர்கள், சிந்தனையாளர்கள், இளம் பரம்பரையினர் உழைக்க வேண்டியவர்களாகி உள்ளனர்.

சக சிறுபான்மை இனம் என்ற வகையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையேயான ஒற்றுமை - சிங்கள அரசுக்கெதிரான போராட்டத்தில் பிரபாகரனுக்கும் அஷ்ரஃபுக்கும் ஏற்படாதது மாபெரும் துரதிருஷ்டமே. ஒரு இனத்தை மற்ற இனம் காட்டிக்கொடுத்துக்கொண்டு அல்லது முற்றாக அழித்துவிட்டு நிம்மதியாக வாழ முடியாது என்பதை வரலாறு பலமுறை நிருபித்திருக்கிறது.

காலத்தின் இறுதித்தருணம் இதுவெனக் கொண்டு பிரபாகரனும், அஷ்ரஃபும் தங்களது போராட்டத்தில் சக சிறுபான்மை மக்கள் தொடர்பாக விட்ட தவறுகளை திருத்திக்கொண்டு போராட முன்வரல் வேண்டும். விடுதலைப் புலிகளும் முஸ்லிம் காங்கிரசும் இதை உணர்வார்களா?

-அபநிதால்

# வெளியேற்றப்படும் வடக்கு முஸ்லிம்கள்!




கொழும்பு வெள்ளவத்தை சமூகநல நிலையத்தில் தங்கியுள்ள முஸ்லிம் அகதிகள் உள்ளிட்ட ஏனைய முகாம்களிலுள்ள முஸ்லிம் அகதிகள் யாவரையும் வெளியேறிவிடுமாறு கொழும்பு மாநகர சபையால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இவர்கள் 1990 ஒக்டோபரில் யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களாவர். சுமார் 149 பேர் வரை (42 ஆண்கள், 32 பெண்கள், எஞ்சியோர் குழந்தைகள்) உள்ள இம்முகாமைச் சேர்ந்தவர்கள் தங்களது சகல நடவடிக்கைகளையும் இம்முகாமிலேயே மேற்கொண்டு வந்துள்ளார்கள் என்பதும் இவர்களுக்கு எதுவிதமான மாற்று ஏற்பாடுகளும் இதுவரையிலும் செய்து கொடுக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கணேசலிங்கம் கொழும்பு பதில் மேயராக இருந்தபோது வெள்ளவத்தை முகாமிலிருந்த தமிழ் அகதிகள் விரட்டப்பட்டார்கள். தற்போது மேயராக ஆனபின் முஸ்லிம் அகதிகள் விரட்டப்படுகிறார்கள் என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதி முகாமிலுள்ளவர்கள் தங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவுகள் (12 கிலோ அரிசி, 750கிராம் பருப்பு, 300கிராம் சீனி) போதாதென்றும் தங்களுக்கு தொழில் மற்றும் ஏனைய வாய்ப்புக்கள் கிடையாதென்றும் குற்றம் சாட்டுகிற வேளை இந்த முகாமைச் சூழ வசிக்கும் கொழும்பு வாசிகளோ ''அவர்கள் சொல்வது போலெல்லாம் இல்லை... அவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் உண்டு. அவர்களில் பலர் வெளிநாடு போய் சொந்த வீடு வாசல் வாங்குமளவுக்கு இருக்கிறார்கள். நாங்கள்தான் ஏழைகள் எங்களின் எந்தக் காரியங்களுக்கும் இந்த நிலையத்தைத் தான் பயன்படுத்தி வந்தோம். இவர்களால் கடந்த ஆறுவருடங்களாக அதைக் கூட இழந்து விட்டோம்'' என்கிறார்கள்.

எவ்வாறிருப்பினும் எதுவித போக்கிடமுமற்ற எந்தக்கவனிப்பும் வழங்கப்படாத இவர்களை திடீரென எழும்பச் சொல்லியிருப்பது அவர்களை பலத்த அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இந்த அதிர்ச்சியினால் நான்கு நாட்களாக சமைத்துக்கூட உண்ணவில்லை என்று சிலர் கவலை தெரிவித்துள்ளார்கள். எனினும், இவர்களுக்கு வழங்கப்பட்ட அவசர காலக்கெடு டிசம்பர் 15 வரை நீடிப்புக்குள்ளாகியிருக்கிறது.

இவர்களுக்கு புத்தளம் பகுதியில் இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படுமென்றும், இவர்களில் எவராவது வீடுகட்டத்தேவையான காணிகளை வாங்க விரும்பினால், ஏதாவது தொழில் முயற்சியில் இறங்க விரும்பினால் உதவிகள் வழங்கப்படுமென்றும் அதிகாரிகளால் கூறப்பட்டுள்ளது.

இந்த முகாம் உட்பட கொழும்பில் ஐந்து நலன்புரிநிலையங்கள் அகதிமுகாம்களாகவுள்ளன். இதில் முஸ்லிம்களே அகதிகளாயுள்ளனர். 847பேர்களைக் கொண்ட 188 குடும்பங்கள் இங்குள்ளன. இதல்லாத ஏனைய கலப்பு முகாம்களிலும் 860 முஸ்லிம் குடும்பங்கள் வசிக்கின்றன.

இந்தக் கணக்கின்படி சுமார் 5330 பேரளவில் கேள்விக்குறியான எதிர்காலத்துடன் நிற்கிறார்கள். இவர்களை இதுவரை எந்த உதவி ஸ்தாபனங்களோ தொண்டர் நிறுவனங்களோ வந்து சந்திக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை புத்தளத்தை மையப்படுத்தி குடியேற்றிவிட்டு குறிப்பிட்ட ஒரு பிரதேச வாக்காளர்களாகப் பதிவு செய்து வாக்கு வேட்டையாடும் திட்டமோ இதுவென்றும் பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர்?

-ஷபீப்

www.tamilarangam.net



# அமெரிக்க கிறீன் பரட் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி!



1994இல் இந்து சமுத்திர ஓரமாக 400 ஏக்கர் நிலப்பரப்பைக்கொண்ட நிலத்தில் இலங்கை விமான நிலையத்திற்கு வடக்கே 30 மைல் தொலைவில் (Voice of America) ஒலிபரப்பு நிலையமொன்றை நிறுவுவதற்கான திட்டமொன்று வெளிப்படுத்தப்பட்ட போது பாரிய எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

கத்தோலிக்க மதகுரு ஒருவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வெதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னணி அரசியல் கட்சி ஒன்றினால் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இவ்வார்ப்பாட்டத்தின் போது எதிர்ப்பாளர்களில் ஒருவரின் உயிர் பொலிசாரின் தாக்குதலுக்கு இரையானதோடு பலர் காயமடைந்தனர்.

இவ்வெதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தலைமை வகித்த ஒருவரான சமய சமூக நிலையத்தைச் சேர்ந்த பர்னாண்டோ நியூற்றன் அமெரிக்கா பயிற்சி வழங்கும் சம்பவம் பற்றி செய்தியாளர்களிடம் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார் ''அமெரிக்க இராணுவத்தினர் இலங்கையில் இருந்த வண்ணம் இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கிறார்கள் என்ற செய்திகள் தெரிவிப்பது என்னவென்றால், அமெரிக்காவின் குரல் (Voice of America) குறித்து நாம் அப்போது வெளிப்படுத்திய அச்சம் நடைமுறைக்கு வந்துள்ளது என்பதுவே ஆகும்''

''உண்மையிலேயே அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏதோ கபட நாடகம் நடப்பதாகவே நான் எண்ணுகிறேன். அமெரிக்க வீரர்கள் பயிற்சி அளித்து வருகின்றனர் என்பது உண்மையில்லாமல் இருக்கவேண்டுமென நான் விரும்புகிறேன். ஆயினும் அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நாம் அதை எதிர்த்தே தீர வேண்டும். இது எமது உள்நாட்டு இறைமையில் பிறர் தலையிடுகின்ற ஒரு விடயமேயாகும்.

இலங்கையின் தென்கோடியில் உள்ள வீரவில விமானத் தளத்தில் அமெரிக்காவின் கிறீன் பரட் (Green Berets) அமைப்பைச் சேர்ந்த பன்னிரண்டு இராணுவ நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளால் இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இக்குழுவினர் எதிரியை எதிர்த்துப் போரிடும் நுட்பங்கள், வானொலி இயக்கு முறைகள், போர்க்கள நுட்பங்கள் தீயிற்கு மத்தியிலும் உயிரோடிருக்கும் நுட்பங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர். அடுத்ததாக நேரடித் தாக்குதல் நடவடிக்கைப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

யூன் மாத முற்பகுதியிலிருந்து அமெரிக்கப் படைப்பெருக்கத்திற்கும் பொருளாதார நிலைகொள்ளலுக்கும் வாய்ப்பளிக்கும் விதத்திலான செயல்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன.

இரகசியமாகவும், தகவல்கள் வெளித்தெரியாமலும் நடாத்தப்பட்டு வரும் இவ்வமெரிக்க இராணுவ நடவடிக்கை இலங்கைத் தீவின் பாதுகாப்பு, அரசியல் விவகாரங்களில் பல்வேறு ஆபத்துக்களைத் தரவல்ல ஒன்றாகும்.

உலகிலேயே எழில் மிகுந்த நாடுகளிலொன்றாகப் புகழப்படுகின்ற இலங்கை, இன்று உலகின் மிகப் பெரிய உள்நாட்டு யுத்தம் நடக்கின்ற ஒரு நாடாகவும் மாறியுள்ளது. தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதல்கள், இராணுவத்தினரின் ஷெல் வீச்சுக்கள், படுகொலைகள் என்பவற்றினால் இதுவரை 50,000 உயிர்கள் பலியாகியுள்ளன.

வழமையான தமது நடவடிக்கைகளை வெளிப்படுத்துவது போல, இந்தக்கூட்டு இராணுவ விவகாரத்தில் மட்டுமே எதையும் வெளியிடாமல் இரகசியமாகவே வைத்திருக்கிறது பென்டகன் நிர்வாகம். இந்த விடயம் இலங்கைப் பத்திரிகைகள் எவற்றிலும் பெரியளவில் வெளிவரவே இல்லை. இராணுவத்தினரின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் இராணுவ, விடயங்கள் குறித்தும், இலங்கைப் பத்திரிகைகள் அரசாங்கத்தின் பலத்த தணிக்கைக்குள்ளாவது இதற்கு ஒருகாரணமாகும்.

வளைகுடா யுத்த காலத்தில் அமெரிக்கப் போர்விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் தளத்தினை வழங்கிய ஒரே ஆசிய நாடு இலங்கை. சரியாக இந்த வளைகுடா யுத்தம் நடந்த ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்க நுட்பமான அதிசக்தி வாய்ந்த போர் (Lethal Military Equipments) ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனை செய்ய மிகவும் ஆர்வம் காட்டிக்கொண்டிருந்த நிலையில், உலகின் மிகப் பெரிய அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்தை (Voice of America) நிறுவும் வேலைகள் நடந்துகொண்டிருக்கும் வேளையில் இந்தப் பயிற்சியாளர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கைத்தீவு முழுவதும் தமக்கே உரித்தானது. அதனைப் பிளவு படவிடக் கூடாது என்ற எண்ணத்துடன் இயங்கும் தென்பகுதிப் பெரும்பான்மை சிங்களவர்களுக்கு எதிராக வடக்கில் தமக்கென தனியான தாயகம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற நோக்குடன் தமிழ்ப் போராளிகள் ஈடுபட்டுவரும் இன்றைய கசப்பான யுத்தத்தில் இதுவரை அமெரிக்காவின் பங்கு மிகவும் சொற்பமே.

'இப்போரில் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை' என்கிறார் இலங்கைக்கான அமெரிக்க இராணுவ தொடர்பாளர் கேணல் கார்ல் கொரும். ஆனால், 'கிறீன் பரட்' குழுவினரை 'ஒபரேஷன் பலன்ஸ்ட் ஸ்ரைல்' (Operation Balanced Style) எனும் நாமத்துடன் இங்கு செயற்பட அனுப்புவதற்கு உதவியவர் இவரேயாவர். இவர் இப்படிக் கூறுகின்ற போதும், சிறிய அளவிலென்றாலும், கடந்த இரண்டு வருடங்களாக அடிக்கடி நடைபெற்று வருகின்ற இந்த அமெரிக்க இராணுவ ஆலோசகர்களின் வருகையானது, இந்த நிலைமை மாறக்கூடும் என்பதையே காட்டுகின்றன.

இவ்வாறான மாற்றங்களில் ஒன்றுதான் கடந்த வருடம், இலங்கையில் விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு 'பயங்கரவாதக்குழு' என்று அமெரிக்க அரச மட்டத்தில் உத்தியோகபூர்வமாகத் தீர்மானித்ததாகும்.

இன்னுமொன்றைக் கூறலாம். அமெரிக்க மனித உரிமை கணிப்பீட்டாளர்களின் அண்மைக்கால கணிப்பீடு இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில், உத்தியோகபூர்வமானதாக கருதப்பட்ட கொலைக்குழுக்களை வைத்திருந்த துரதிர்ஷ்டமான வரலாறு குறித்து ஆவன செய்து வருவதாக தெரிவித்திருக்கிறது. இதுவே அமெரிக்க அரசு தரப்பு முடிவாகும். இந்த முடிவு குறித்து இலங்கையிலுள்ள சில மனித உரிமைக் குழுக்கள், 'இத்தகைய முடிவானது இலங்கை அரசின் முன்னேற்றம் குறித்து அளவுக்கு மீறிய மதிப்பீட்டைச் செய்வதாக' உள்ளதென்றும், இது இலங்கையை நோக்கி அமெரிக்கா இன்னமும் நெருங்கி வர உதவுவதாக உள்ளதென்றும் குறிப்பிடுகின்றன.

அமெரிக்க எதிர்ப்பாளர்களான இடதுசாரிகள் பலரைக் கொண்டுள்ள இலங்கை அரசும் தன்பங்கிற்கு அமெரிக்காவின் உற்ற நண்பனாகவே செயற்பட்டு வருகின்றது. கடந்த வருடம் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா'வை அனுமதிக்க மாட்டோம் என்று அறிவித்த தனது தேர்தல்கால வாக்குறுதி ஒன்றை இப்போது அது கைவிட்டு விட்டது.

இலங்கையின் மனித உரிமை மீறல் நிலைமைகள் காரணமாக அமெரிக்காவின் சக்திவாய்ந்த இராணுவ ஆயுதங்களை விற்பனை செய்யக்கூடாது என்ற உத்தியோகபூர்வமான தடைகள் இருக்கும் போதே அண்மையில் ஆறு ரோந்துப் படகுகளை அமெரிக்கா இலங்கைக்கு விற்பனை செய்துள்ளது. மேலும் அவற்றில் பொருத்தப்படுவதற்காக துப்பாக்கிகளையும், ஹெலிகொப்டர்களையும் விற்பனை செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இரவு நேரத்தில் பார்க்கக்கூடிய (Night Vision) உபகரணங்களை வழங்குவது பற்றிய விசாரணைகளும் நடைபெற்றுள்ளன. செய்மதி தொழில்நுட்பம் பற்றிய இலங்கை அரசின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளபோதும், அமெரிக்க அதிகாரிகள் இஸ்ரேலிய போர் யுக்திகளுடன் முன்னேறிச் செல்லும் பயிற்சிகளை அளித்து வருகின்றனர். இவையெல்லாம் செய்யப்படக் கூடியதற்கான காரணம் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நிலைமையின் முன்னேற்றமே என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் ஆழமான உறவுகள் நிலவுவதற்குப் பல தொலைநோக்கான காரணங்கள் உள்ளன என்று கொழும்பிலுள்ள இலங்கை அதிகாரிகளும் அமெரிக்க அதிகாரிகளும் கூறுகின்றனர். அதாவது மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தூர கிழக்கு நாடுகளுக்கும் மத்தியிலும், சீனாவிற்கு அருகிலுமாக உள்ள இலங்கையின் அமைவிடம் குறித்து அமெரிக்க இராணுவத்தினருக்கு அக்கறை உண்டு.

அதே வேளை இலங்கையும் தன் அயல் நாடான இராட்சதனை ஒத்த இந்தியாவிற்கு சமமாக அரசியல் ரீதியில் தாக்குப் பிடிக்கக்கூடிய வகையில் துணையொன்றைத் தேடிக் கொண்டிருக்கிறது.

இருப்பினும் இவை தமது நடவடிக்கைகளை மிகவும் சாதாரண மட்டத்திலேயே வைத்திருக்க விரும்புகின்றன. சர்வதேச மற்றும் அரசியல் உறவுகள் அபாயகரமான நிலைமைகளை தோற்றுவிக்கக்கூடும் என்பதே இதன் காரணமாகும். இந்திய இராணுவத்தின் அனுபவத்தை கருத்தில் கொண்டால் இது புரியும். 1987ஆம் ஆண்டில் இந்திய மத்திய அரசு, சகல கட்சிகளினதும் வெளிப்படையான அங்கீகாரத்துடன் 50,000 துருப்புக்களைக் கொண்ட அமைதி காக்கும் படையொன்றை இனப்பிரச்சினைத் தீர்வுகளில் உதவுவதாகக் கூறிக்கொண்டு இலங்கைக்கு அனுப்பி வைத்தது. இருப்பினும் 3 ஆண்டுகளின் பின்னர் அதாவது 1500 வீரர்களைப் பலி கொடுத்த பின்னர் வியட்நாம் பாணியிலான ஒரு தோல்வியுடன் இலங்கையை விட்டு வெளியேறியது.

பின்னர் இந்தியத் துருப்புக்களை இலங்கைக்கு அனுப்பிவைத்த அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியை 1991 ஆம் ஆண்டில் தமிழ்த் தீவிரவாதிகள் கொலை செய்ததுடன் இலங்கையின் ஜனாதிபதி அமைச்சர்கள், முக்கிய அரசியல் புள்ளிகள் என அவர்களின் பட்டியல் நீண்டு செல்கிறது.

கடந்த ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை இராணுவத்தினர் திடீர் தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டு தமிழ்த் தீவிரவாதிகளின் அரணாக விளங்கிய வடபகுதிக்குள் பிரவேசித்தனர். இருப்பினும் இன்றும் புலிகள் நூற்றுக்கணக்கான மைல்களை உள்ளடக்கிய இலங்கையின் காட்டுப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் ரோந்து செல்லும் படையினரையும் சில கிராமங்களையும், மக்கள் செறிந்து வாழும் கொழும்பு நகரப்பகுதிகளையும் அவ்வப்போது தாக்கி வருகின்றார்கள். அமெரிக்காவுடனான அவர்களது சொந்த தொடர்புகள் இருக்கின்றன. அமெரிக்காவில் வாழ்கின்ற தமிழர்கள் கணிசமானளவு நிதி உதவியினையும் இவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

ஒரு இரத்த வரலாற்றைக் கொண்டுள்ள கிறீன் பரட் இயக்கத்தினரின் வருகை பகிரங்கப்படுத்தப் படாமல் இருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல.

இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்கள் அண்மைய பேட்டியொன்றில் ''அமெரிக்க இராணுவ வீரர்கள் தன் தாயகத்தில் கடமைகளில் ஈடுபட்டிருப்பதாக கூறப்படுவதை முற்றாக மறுத்துள்ளார். ஆயினும் அடுத்த சுற்று கூட்டு நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் ஏற்கெனவே போடப்பட்டு விட்டன.

தாய்லாந்து, இந்தியா, இந்தோனேசியா, உட்பட வேறு பல ஆசிய நாடுகளிலும் அமெரிக்கப் படைத்தளபதிகள் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் போது செய்யும் கூச்சலுடன் ஒப்பிடுகையில் இந்த மௌனமான போக்கு மிகவும் மாறுபாடான ஒன்றாக உள்ளது.

உண்மையில் இத்தகைய கூட்டு இராணுவ நடவடிக்கைகளை செய்ய வைக்கின்ற கோட்பாட்டின் இலக்கு 'சகோதர இராணுவத்துடன்' சேர்ந்து சமாதானகால 'கூட்டுச் செயற்பாட்டில்' ஈடுபடுவதாகும். இதன் தார்ப்பரியம் என்னவென்றால், உள்நாட்டு இராணுவத்தினர் அமெரிக்கப் போர் நுணுக்கங்களை அறிந்து கொள்வதைப் போலவே அமெரிக்க இராணுவத்தினர் ஒவ்வொரு நாட்டினதும் இராணுவ ரீதியிலான தகவல்களைப் பற்றிய அறிவைத் திரட்டிக் கொள்கின்றனர். இது தம் நாட்டின் எதிர்கால நன்மைக்கு பயனுள்ளதாக அமையலாம் என்ற அடிப்படையிலேயே செய்யப்படுகிறது. ஆயினும் ஏனைய நாடுகளில் அமெரிக்க இராணுவத்தினரிடம் பயிற்சி பெறுகின்ற உள்நாட்டு இராணுவ வீரர்கள் பெரும்பாலும் சிவில் யுத்தங்களில் ஈடுபடுவது குறித்துப் பயிற்றப்படுவதில்லை.

விஷேட அதிரடிப்படைத் தலைவரான ஜோர்ஜ் மக்டொனல்ட் இலங்கையின் கனிஷ்ட வீரர்களுக்கு ஏனைய பயிற்சிகளுடன், சிறந்த முறையில் ஹெலிகொப்டர் ஒன்றைத் தரை இறக்குதல், ஏற்றுதல் போன்ற பயிற்சிகளையும் அளிப்பதற்காக ஜூன் மாதத்தை இலங்கையில் கழித்தார். இப்பயிற்சிக் காலத்தில் மக்டொனல்டும் அவரது குழுவினரும் மிகுந்த சந்தோஷமாக இருந்தனர்.

''இலங்கையின் விமானத்தளத்தில் மயில்களின் சஞ்சரிப்பைக் காண முடியுமென நான் கனவிலும் எண்ணவில்லை'' என மக்டொனல்ட் கூறிய போதிலும் இப்போர் இலகுவில் முடிவடையக்கூடிய ஒன்றல்ல என்பது அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. இலங்கைப் படையினரைப் பொறுத்தவரை அவர்கள் வீரவிலவில் பயிற்சி முடிந்ததும் மயில்களை அங்கே விட்டு விட்டு வடக்கின் யுத்த களத்திற்குப் போகவேண்டியிருக்கும்.

அமெரிக்க மனித உரிமை அமைப்புகளின் தலைவர்களும் மற்றும் சிலரும் இலங்கையில் 1993ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்தே மனித உரிமைகள் குறித்த நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். அதாவது 17 ஆண்டுகளாக ஆட்சிப்பீடத்தில் இருந்த ஐ.தே.க அரசு, தேர்தலில் தோல்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*மட்டக்களப்பில் படையினர் நடாத்திய 'அலை வேகம்' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக அறிக்கையிட வாகரை வரை சென்று வந்தார் சரிநிகர் செய்தியாளர் என். எஸ். குமரன். வாகரையின் தற்போதைய நிலை பற்றிய கட்டுரை கடந்த இதழில் வெளியாயிற்று. இவ்விதழில் கிழக்குப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் துரை அவர்களுடனும் பெயர் குறிப்பிட விரும்பாத இன்னுமொரு புலிகளின் முக்கியஸ்தருடனும் பல்வேறு விடயங்கள் குறித்து அவர் நடாத்திய உரையாடலிலிருந்து முக்கியமான பகுதிகளைக் கீழே தருகிறோம்.*

*ஆ–ர்.*

***உங்களது இறுதிப் போராட்ட இலக்கு, தமிழீழமே என்ற நிலைப்பாடு ஆரம்ப காலங்களிலிருந்து இருந்து வருகிற போதும் கடந்த பேச்சுவார்த்தைக் காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஈழத்துக்கு மாற்றான சமஷ்டியொன்றை பரிசீலிக்கத் தயாரெனக் கூறியிருந்தார் அந்நிலைப்பாடு இன்னமும் நடைமுறையிலுண்டா?***

ஆம். அந்நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமுமில்லை. அப்படியொரு மாற்றுத் தீர்வொன்றை பரிசீலிக்க நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம் என்பதை தலைமைப் பீடம் எப்போதிருந்தே சொல்லி வருகிறது.

***அப்படியாயின் தற்போது அரசாங்கம் முன்வைத்திருக்கிற தீர்வுப்பொதி குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?***

முதலில், அத்தீர்வுத்திட்டம் இதுவரை எமக்கு உத்தியோகபூர்வமாக அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்படவில்லை. மேலும் அப்படியொரு தீர்வுத்திட்டத்தை ஏனைய தமிழ் அமைப்புக்கள் கூட நிராகரித்துவிட்ட போது வேறென்ன சொல்ல இருக்கிறது.

***சரி, இன்னொரு பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் ஸ்ரீ லங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு முன்வருவீர்களா?***

நிச்சயமாக, நாங்கள் முன்வருவோம்.

***அப்படியானதொரு பேச்சுவார்த்தை நடத்தப்படுமானால் அதற்கென மூன்று நிபந்தனைகளை அரசு முன்வைத்திருக்கிறதே அதனை ஏற்றுக்கொள்வீர்களா?***

அந்த நிபந்தனைகளை நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அரசாங்கத்தின் முதலாவது நிபந்தனையான ஆயுதங்களை கீழே போடுவது ஒருபோதும் உடன்பட முடியாதது. ஏனெனில் கடந்த காலங்களில் தீர்வு கிடைக்குமென ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு அரசிடம் சரணாகதியடைந்த ஏனைய தமிழ் இயக்கங்களுக்கு கிடைத்ததே நல்ல பாடம். அது மட்டுமல்லாமல் அன்றே இதுதான் நடக்கப்போகிறது என்பதை நாங்கள் உணர்ந்ததாலேயே நாங்கள் இன்றும் எமது உரிமைக்காகப் போராட முடிகிறது.

***ஏற்கெனவே முதல் இரு பேச்சுவார்த்தைகளின் போதும் அவற்றை புலிகள் அமைப்பே குழப்பியது என்ற அபிப்பிராயத்தை தென்னிலங்கையில் அரசாங்கமும், சிங்கள மக்களும் கொண்டிருக்கும் நிலையில் மூன்றாவது பேச்சுவார்த்தைக்காக நீங்கள் வழங்கும் உத்தரவாதம் என்ன?***

முதலில், அவ்விரு பேச்சுவார்த்தைகளையும் நாங்கள் குழப்பவில்லை என்பதை உணர வேண்டும். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவுடனான பேச்சுவார்த்தை இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு காணும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டதே அல்ல. 14 மாதகாலம் நடந்த அப்பேச்சுவார்த்தையின் போது இரு தரப்புக்கும் சில பொதுத்தேவைகள் பொது உடன்பாடுகள் இருந்தன. அதன் அடிப்படையில் இரு தரப்பும் பேசிக்கொண்டோம். அவற்றை அடைந்தும் கொண்டோம். உடன்பட முடியாத கட்டம் வந்தபோது நாங்கள் விலகிக் கொண்டோம் அவ்வளவே. ஆனால் சந்திரிகா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு காணும் தன்மைகளைக் கொண்டிருக்கிறது என ஓரளவு நம்பிக்கை கொண்டிருந்தோம். அதன் அடிப்படையில் அதனுடன் பேச்சுவார்த்தை நடாத்தினோம் ஆனால் சந்திரிகா அரசாங்கம் பேச்சுவார்த்தையில் நேர்மையாக நடந்து கொள்ள வில்லை. குறைந்தபட்சமாக தனது மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைக் கூட பூரணமாக வழங்க முன்வரவில்லை. எம்முடன் பேச்சுவார்த்தையை நடத்திக்கொண்டே யுத்தத்துக்குத் தேவையான ஏனைய ஏற்பாடுகளையும் திரைமறைவில் மேற்கொண்டு வந்தது. இந்நிலையினை எச்சரித்தோம். ஆனால் அரசாங்கம் அதனைச் செவிசாய்க்க மறுத்தது. அதன் விளைவு நாங்கள் பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்ள வேண்டியேற்பட்டது.

ஆனாலும் இன்று இரு தரப்பும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையிழந்து இருக்கிற நிலையில் மூன்றாவது பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதாயின் மூன்றாம் தரப்பு நாடொன்றின் மத்தியஸ்தம் இருப்பது நல்லது என நினைக்கிறோம். அப்படியானதொரு நிலையில் உண்மையில் தவறிழைப்பவர்கள் யார் என்பது தெரியவரும்.

***மூன்றாம் தரப்பாக எந்நாட்டை முன்மொழிகிறீர்கள்?***

குறிப்பாக ஸ்கன்டினேவிய நாடுகளை நாங்கள் வரவேற்கிறோம். ஏனெனில் அந்நாடுகள் ஒப்பீட்டுரீதியில் ஏனைய நாடுகளில் அரசியல், பொருளாதார நலன்களைக் கொண்டிராத நாடுகளென்றன்றபடியால் ஓரளவு நடுநிலைமை வகிக்கக்கூடியவை. அதற்காக ஏனைய நாடுகளை நிராகரிக்கிறோம் என்பதல்ல எமது கருத்து. மேற்சொன்ன நாடுகளைக் கூடுதலாக விரும்புகிறோம்.

***சர்வதேச அளவில் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு வீழ்ச்சியடைந்து வருவதாகவும் அரசாங்கத்திற்கான ஆதரவு கூடிவருவதாகவும் கூறப்படுகிறது. இதற்கான காரணங்கள் என்னவென நம்புகிறீர்கள்?***

எம்மைப் பொறுத்தவரை சர்வதேச சமூகம் எமது அமைப்பின் மீதான நம்பிக்கையிலும் ஆதரவிலும் பெரியஅளவில் அசைவை ஏற்படுத்தவில்லை. ஆனால் முன்னைய ஐ.தே.க அரசாங்கத்தோடு ஒப்பிடுகையில் தற்போதைய அரசாங்கத்தின் மீது ஒரு வகை நம்பிக்கையைக் கொண்டிருந்தது என்பது உண்மைதான். ஏனெனில் முன்னைய அரசாங்கம் தனது நிலைப்பாட்டினை பகிரங்கமாகவே "போர் என்றால் போர்!", "இது இனப்பிரச்சினையல்ல, பயங்கரவாதப்பிரச்சினையே" என்றெல்லாம் கூறிவந்தது. ஆனால் தற்போதைய சந்திரிகா அரசாங்கமோ பேச்சுவார்த்தையென்றும், தமிழ் மக்களுக்கு எதிரான போரை சமாதானப்போர் என்றும் கூறிவரும்போது மேலோட்டமாகப் பார்க்கும் எந்த நாடும் அக்கருத்தில் மயங்கிவிடுவது இயல்பே. ஆனாலும் இன்று அரசாங்கத்தின் உண்மை முகம் சர்வதேச அளவில் அம்பலமாகிக் கொண்டிருக்கிறது.

***அண்மைக்காலமாக அமெரிக்கா புலிகள் அமைப்பின் செயற்பாடுகளை கண்டித்து அறிக்கை வெளியிட்டுக்கொண்டும் வருகிறது. மறுபுறத்தில், இலங்கை இராணுவத்துக்கான பயிற்சியையும் வழங்கிவருகிறது. இது தங்கள் அமைப்பின் செயற்பாட்டில் எவ்வகையான தாக்கத்தினை ஏற்படுத்தும்?***

ஒரு உலக வல்லரசானது ஒரு இனம் ஒடுக்கப்படும் போது நிச்சயமாக ஒடுக்கப்படும் சிறுபான்மையினத்தின் தரப்பில் நின்று கருத்துக் கூற வேண்டும். அதனையே அது செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அமெரிக்கா போன்ற நாடுகள் இவ்வகையான நிலைப்பாடு எடுப்பது தொடர்பாக வருந்துகிறோம். எனினும் இந்நிலைப்பாடு தொடராது என நம்புகிறோம்.

***அமெரிக்கா தனது நலனையும் மேவி இன்னொரு நாட்டின் சிறுபான்மையினத்துக்காக குரல் கொடுக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா?***


ஆம். அமெரிக்கா தமிழீழப் போராட்டத்துக்காகக் குரல் கொடுக்கும் என நம்புகிறோம்.

***விடுதலைப் புலிகள் அமைப்பினை தடை செய்யுமாறு அரசுக்குள்ளும் அதற்கு வெளியிலும் பல தடவைகள் கோரப்பட்டு வருகிறது. இவ்வாறான தடை பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பை இல்லாது செய்துவிடாதா?***

இல்லை! இஸ்ரேல், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை (PLO) தடை செய்தது. ஆனால் இறுதியில் அதே இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதே. அதே போல் தென்னாப்பிரிக்க அரசாங்கம், ஆப்பிரிக்க தேசிய (ANC) காங்கிரஸை தடை செய்தது. இறுதியில் மண்டேலாவுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியதே. அதே போல் பிரித்தானியா, அயர்லாந்து விடுதலை(IRA) இயக்கத்தை தடை செய்தாலும் பின்னர் அதனுடன் பேச்சுவார்த்தை நடத்த நேரிட்டதே. எனவே தடை செய்வதனால் பேச்சுவார்த்தை நடாத்த முடியாது எனக் கொள்ள முடியாது.

***ஆனால், அப்படியான ஒரு தடை வெளிநாடுகளில் கிடைக்கும் ஓரளவு அங்கீகாரத்தைக்கூட இல்லாமல் செய்துவிடும் அல்லவா?***

இல்லை, அப்படியொரு தடை எம்மைப் பாதித்துவிடப்போவதில்லை. நான் முன்னர் கூறிய நாடுகளில் விடுதலை இயக்கங்களை அந்நாடுகள் தடை செய்த போதும் சர்வதேச ரீதியில் அதற்கிருக்கும் அங்கீகாரம் சீர்குலையவில்லை.



**"தமிழீழ மண்ணுக்கு அப்பால் ஒரு சிறு நிலப்பகுதி தானும் எமக்கு வேண்டாம்!"**

**—கிழக்குப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் துரை**



***அண்மைய தேர்தலின் பின்னர் இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற மாற்றம் போராட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறதா?***

இந்தியாவில் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை முன்னைய அரசாங்கத்தில் எமது இயக்கத்தின் மீது கொண்டு வந்த தடையை இவ்வரசாங்கமும் நீடித்ததைக்காணும் போது எமது இயக்கம் தொடர்பாக பெரிய நிலைப்பாட்டு மாற்றம் ஏற்படவில்லை எனத் தெரிகிறது. ஆனால் இலங்கை இராணுவத்துடன் முன்னர் கூட்டமைத்திருந்ததைப் போல இப்போது இல்லையெனத் தெரிகிறது.

ஆனால் தமிழ் நாட்டு நிலைமை வேறு. அங்கு எமக்கெதிரான ஒரு நிலைப்பாடொன்றை தமிழ்நாட்டு அரசாங்கம் எடுக்கவில்லை. தமிழ் நாட்டு மக்கள்கூட போராட்டத்துக்கு ஆதரவாகவே இருந்து வருகிறார்கள்.

***சென்ற சில நாட்களாக 'யால' காட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள் ஆரம்பித்திருப்பதாகவும், உள்ளே செல்லும் உல்லாசப் பிரயாணிகளின் வாகனங்கள் கூட பறித்தெடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறதே, அது உண்மையா?***

நிச்சயமாக இல்லை. எங்கள் தமிழீழ மண்ணுக்கு அப்பால் ஒரு சிறு நிலப்பகுதிதானும் எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் யால வனாந்திரத்தில் இருப்பதான பொய்ப் பிரச்சாரத்தை நம்பி ஸ்ரீ லங்கா அரசாங்கம் ஒரு சில இராணுவ நடவடிக்கையையும் முட்டாள் தனமாக நடாத்தி முடித்திருக்கிறது என்பது தான் உண்மை.

***முல்லைத்தீவு தாக்குதல் குறித்து கூறமுடியுமா?***

முல்லைத்தீவு தாக்குதல் தமிழீழப்போராட்ட வரலாற்றிலேயே ஸ்ரீ லங்கா அரசுக்கு ஏற்படுத்திய பெரும் இழப்பாகக் கொள்ள முடியும். அது மட்டுமன்றி முதற்தடவையாக ஒரு முழு மாவட்டத்தையும் எமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த முதல் தடவையும் இது தான்.

***முல்லைத்தீவு தாக்குதலில் கொல்லபபட்ட படையினரில் எத்தனை பேரின் சடலங்களை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தீர்கள்?***

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் நாங்கள் 553 இராணுவத்தினரின் சடலங்களை ஒப்படைத்தோம். ஆனால் அவற்றில் 53 சடலங்களை மாத்திரமே அரசு பொறுப்பேற்றது. ஏனையவற்றை பொறுப்பேற்கவில்லை. இது தான் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் பெற்றோர்களுக்கு அரசு பொறுப்பு சொல்லும் முறை. மிகுதிச் சடலங்களை நாங்கள் மீளப் பெற்று அவர்களுக்கு இறுதி மரியாதையளித்து எரித்தோம். கொல்லப்படுபவர் எதிரிகளாயினும் சரி நாங்கள் அவர்களுக்கான மரியாதையை வழங்க மறுப்பதில்லை ஆனால் ஸ்ரீ லங்கா அரச படையினர் இன்று யாழ்ப்பாணத்திலிருந்த எமது போராளிகளின் மாவீரர் துயிலும் இல்லத்தையும் கிட்டு பூங்காவையும் புல்டோசர் போட்டு அழித்து விட்டனர்.

***அண்மைக்காலமாக, புலிகள் அமைப்பு செய்துவருவதாகக் கூறப்படும் அப்பாவி மக்கள் மீதான தாக்குதல் குறித்து, குறிப்பாக 'இலவன்குளம்' கிராமப் படுகொலை மற்றும் தெஹிவளை குண்டு வெடிப்பு போன்றவற்றை எவ்வாறு அரசியல் ரீதியில் நியாயப்படுத்துவீர்கள்?***

நிச்சயமாக அப்படுகொலைகளை நாங்கள் புரியவில்லை. இவ்விரு நடவடிக்கைகளையும் ஏன் நாங்களே செய்திருக்க முடியும் என நினைக்கிறீர்கள்? ஏன் வேறு எவராவது செய்திருக்கமுடியாது? அண்மைக்காலமாக தென்னிலங்கையில் இடம்பெற்றுவரும் இவ்வகை நடவடிக்கைகள் எமக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. எந்தச் சம்பவம் நடந்தாலும் எம்மீது பழி சுமத்துவது இலகுவான காரியமாகிவிட்டது. நிச்சயமாக எமக்கு தென்னிலங்கை சிங்கள மக்கள் எதிரிகளே அல்ல. எமக்கு எதிரி இந்த பேரினவாத சிங்கள பௌத்த அரசும் அதன் இராணுவமுமேயொழிய மக்களல்ல. சிங்கள மக்களின் எதிரிகள் நாங்கள் என்கிற பிரச்சாரத்தை திட்டமிட்ட வகையில் சகல அரசாங்கங்களும் செய்து வருவதன் விளைவே இது. இச்செயலை செய்தவர் யாராக இருந்தாலும் அதனை நாங்கள் எதிர்க்கிறோம், கண்டிக்கிறோம்.

***தென்னிலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு எந்நேரமும் பாடசாலை மீது குண்டு வைக்கலாம் என்ற பீதி கடந்த சில மாதங்களாக காணப்பட்டது அப்படியான ஒரு எண்ணமுண்டா?***

நிச்சயமாக இல்லை. வடக்கில் தாங்கள் நடாத்தப்போகும் தாக்குதலின் காரணமாக பொதுமக்கள் தங்களை பாதுகாப்பதற்காக கோவில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் என்பவற்றில் போயிருக்குமாறு கூறிவிட்டு, மக்கள் அங்கு போய் பதுங்கிய பின்னர் நாகர் கோவில் பாடசாலை மீது குண்டு போட்டு சிறுவர்கள் உட்பட பலரை அழித்தது அரசு. இதற்கு பதிலாக நாங்கள் தென்னிலங்கையில் பாடசாலைகள் மீது குண்டு வைக்கலாம் என நம்பி முட்டாள் தனமாக பல நாட்கள் தென்னிலங்கையில் பாடசாலைகள் மூடப்பட்டன. நாம் ஸ்ரீ லங்கா அரசு போல ஒரு போதும் மாணவர்களைக் கொல்லுமளவுக்கு இரத்தவெறி பிடித்தவர் களல்ல.

***வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டது குறித்து வருந்துவதாகவும் அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான முயற்சிகளை தாங்கள் செய்து வருவதாகவும் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார். ஆனால் அதன் பின் அது குறித்த எந்த வித பேச்சுமில்லையே ஏன்?***

உண்மையில் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேறச் செய்ததானது வருந்தத்தக்க விடயம். பல இழப்புக்களின் மத்தியில் போராட்டம் தொடர்ந்து வந்த நிலையில் சிங்கள பேரினவாதம் போராட்டத்தை அடக்குவதற்கு முஸ்லிம் மக்களை ஒரு கருவியாகவே பயன்படுத்தி வந்தது என்பதும், முஸ்லிம் பெயர்களில் சிங்களவர்களைக் கூட இயக்குவித்த சம்பவங்களும் அன்று நடந்தன. இன்றும் தொடர்ந்து வருகின்றன. ஆனால் முன்னரை விட இன்று முஸ்லிம்-தமிழ் மக்கள் உறவு சுமுகமாகியுள்ளது. அவர்கள் போராட்டத்துக்கு எதிரானவர்கள் அல்ல. மற்றும் அவர்கள் தமிழ் மொழியை வளர்ப்பதிலும் தமிழ்ப்பற்றிலும் அவர்களது பணி போற்றத்தக்கவை.விட்ட தவறை நிவர்த்தி செய்ய, மீளக் குடியேற்ற வேண்டியவர்கள் நாங்களே. ஆனால் இன்று முஸ்லிம் மக்களை மட்டுமல்ல தமிழ் மக்களையே உடனடியாக மீளக் குடியேற்ற முடியாத நிலையில் நாம் உள்ளதை உணர்வீர்கள். எதிர்காலத்தில் அது நடக்கும்.

***ரிவிரெசவின் பின் யாழ்ப்பாணம், அரசின் கைவசம் போன பின் போராட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிற தாக்கங்கள் என்ன?***

எப்போதும் கெரில்லா போரொன்றின் போது கெரில்லாக்களுக்கு பெரும் நிலப்பகுதி கட்டாயம் தமது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவே வேண்டுமென்பது முன்நிபந்தனையானதல்ல. எனவே அரசு பிடித்திருப்பது என்பது வெறும் நிலப்பகுதியேயொழிய எமது இயக்கத்தையல்ல. அரசுக்கு அது வெற்றியுமல்ல எமக்கு தோல்வியுமல்ல. எமக்கு அது தற்காலிகப் பின்னடைவே. இன்று நாங்கள் அங்கு பிடிவாதத்துடன் பின்வாங்காமல் போர் புரிந்திருந்தால் அது தந்திரோபாயமாகாது. எமது அழிவு அதிகரித்திருக்கும்.

***புலிகள் அமைப்பின் மீது முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகளில் ஒன்று இயக்கத்தில் சகல உறுப்பினர்களுக்கும் எவ்வித அரசியல் கற்பிப்பு, கருத்தாடல் எதுவுமின்றி வெறும் இராணுவ அணிதிரட்டலும், வெறியூட்டலுமே புகுத்தப்படுகிறது எனபது. இது பற்றி...***

எமது அமைப்பு இராணுவமய கருத்தூட்டலுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் அரசியல் கருத்தூட்டலைவிட அதிகம் தான் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நடைமுறையில் அதற்கான தேவையே அதிகம் என்பதை உணர வேண்டும். இராணுவ ரீதியில் நாங்கள் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போது முதலில் அரசியல் கற்பிப்பு என்பது முன்நிபந்தனையாக இருக்காது. ஆனால் அதற்காக எங்கள் அமைப்பில் அரசியல் கற்பிப்பு இல்லை என்று அர்த்தம் கொள்ளலாகாது. பல பகிரங்கப் பத்திரிகைகள், வகுப்புகள், உட்சுற்றுக்கு மட்டுமே குறித்த பத்திரிகைகள் போன்றவை நடைமுறையில் இருக்கத்தான் செய்கிறது.

***தென்னிலங்கை தமிழ் இயக்கங்கள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?***

அவர்களைப்பற்றி கதைப்பதற்கு ஒன்றுமில்லை.

***ஆனால் உங்கள் துப்பாக்கி கதைக்குமல்லவா?***

(சிரிப்பு....) இன்று அரசாங்கம், தமிழீழப் போராட்டத்தை நசுக்கும் வேலையை கூடிய பட்சம் செய்யக்கூடியவற்றையெல்லாம் செய்து தமிழ் மக்களை அழித்தொழித்து வரும் வேளையில் போராடத்தான் வாருங்கள் என்று கூட கேட்கவில்லை. தமிழ் மக்களின் இன்னல்களை தீர்க்க வேண்டும் என்கிற நிலையில் அவர்கள் பேசாமல் இருந்தாலே போதும்.

***அவர்கள் தங்களுடன் போராட்டத்தில் இணைவதற்கு முன்வந்தால் அவர்களை ஏற்றுக்கொள்வீர்களா?***

ஆம், அவர்கள் தூய நோக்கோடு முன்வந்தால் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி, எம்முடன் இணைக்கத் தயார்.

***புல்மோட்டையில் இல்மனைற் ஏற்றிய அந்நிய நாட்டுக் கப்பலைத் ஏன் தாக்கினீர்கள்?***

புல்மோட்டையிலிருந்து இல்மனைற் ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்த கப்பல் இது. இத்தாக்குதல் தமிழீழ வளங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் உரிமை ஸ்ரீ லங்காவுக்கு கிடையாது என்பதை எச்சரிப்பதற்கான தாக்குதல் தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்த் தேசியவாதம்

ஓர் ஆய்வு -02

## டி.சிவராம்



**தீண்டாமை ஒழிப்பு மூடநம்பிக்கை ஒழிப்பு என்பவற்றை நோக்கமெனக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தை அவர் தொடங்கினார். இதில் ஈ.வே.ராமசாமிப் பெரியார் பிராமணரில்லாத சமூகங்களினுள் காணப்பட்ட அனைத்துத் தீமைகளுக்கும் பிராமணரும் அவர்களது மதமான இந்து மதமுமே காரணமெனச் சாடினார். அவரது செயற்பாடுகளுக்கும் ஆரிய திராவிட முரண்பாடு என்னும் வேளாள அறிஞரின் வரலாற்றுக் கருத்தியல் கை கொடுத்தது..**

தமிழ்த் தேசியத்தை வரையறை செய்யவும் அதை ஆய்வுக்குட்படுத்தவும், வடிவம் கொடுக்கவும் எடுக்கப்பட்ட கோட்பாட்டு முயற்சிகளை (Theoretical Efforts) நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று; திராவிட இயக்கம் சார் கோட்பாட்டாளர், வரலாற்றாசிரியர் ஆகியோருடையது.

இரண்டு; தமிழகம் தனித் தமிழ்நாடு ஆகவேண்டும் எனக் கருதியவர்களுடையது.

மூன்று; இந்தியா எனும் அரசியற் பொதுமையினுள் தமிழர் கூடிய சுயாட்சியும் சுயநிர்ணய உரிமையும் பெற்று வாழ வேண்டும் எனக்கருதியவர்களுடையது.

நான்கு; தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பாதிப்பு, தென்னிந்திய இடதுசாரிப் புரட்சிக் குழுக்கள் மத்தியில் 80களில் ஏற்பட்ட கோட்பாட்டு மறுபரிசீலனை காரணமாக தமிழ்த் தேசியம் என்பது ஒரு அரசியற் கற்பிதம் என்ற வகையில் ஒரு தேடலை மேற்கொண்டுள்ள புத்திஜீவிகளுடையது.

மேற்கண்டவற்றில் முதல் மூன்றையும் வரலாற்று நோக்கிலும், நான்காவதை அதன் சமகால அரசியல் மற்றும் கோட்பாட்டு முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் பார்க்க வேண்டியதாகிறது. இதன் பின்னணியிலேயே தமிழ்த் தேசியம் பற்றிய எனது ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

இனி முதலாவது திராவிட இயக்கத்தினுடைய தமிழ்த் தேசியக் கோட்பாடு பற்றிப் பார்ப்போம்.

ஆரிய திராவிட வரலாற்று முரண்பாடே இதன்மையக் கருத்து உந்துவிசையாகும். இதைப் புரிந்து கொள்வதற்கு திராவிட இயக்கத்தின் சமூக அரசியல் வரலாற்றை சற்றுச் சுருக்கமாகப் பார்ப்பது அவசியம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய உபகண்டத்தின் பெரும் பகுதியைத் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்த பிரிட்டிஷார் அதனை மூன்று நிர்வாக அலகுகளாக ஆளலாயினர். சென்னைப் பிரதானி, (Presidency) பம்பாய் பிரதானி, வங்காளப் பிரதானி எனப்பட்டன அவை. இதில் இன்றைய கேரள, தமிழக, ஆந்திர கன்னட மாநிலங்களை உள்ளடக்கியதாக சென்னைப் பிரதானி அமைந்திருந்தது. (ஐதராபாத், புதுக்கோட்டை, திருவாங்கூர் என்பன இதனுள் தனிக்குறுநில அரசுகளாக இருந்தன.)

பிரிட்டிஷாருக்கு முன்னர் இருந்த அரசாட்சிகளில் முக்கிய அலுவலர்களாகவும், கல்விக்கு உரிமையுடையவர்களாகவும், அரசின் நிலக்கொடைகள் காரணமாக பெரும் நில உரிமையாளராகவும் இருந்த பிராமணர்கள், கிழக்கிந்தியக் கம்பனியிலும் மொழிப் பெயர்ப்பாளர்களாகவும், அலுவலர்களாகவும், கணக்காளர்களாகவும் பதவி பெறத் தொடங்கினர். (கிழக்கிந்தியக் கம்பனியே ஆரம்பத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு வழிவகுத்தது)

இவ்வாறு 18ம் நூற்றாண்டிலும், 19ம் நூற்றாண்டின் முற்பாதியிலும் கிழக்கிந்தியக்கம்பனி உள்ளூர்க்காரருக்கு வழங்கிய பதவிகளில் மிகப் பெரும்பான்மையானவை பிராமணருக்கே சென்றன. இத்தொடர்பு காரணமாகவும், வேதகால கலாசாரம், சமஸ்கிருத மொழி என்பவற்றினை மேல்நாட்டு அறிஞர் கற்கத் தொடங்கியதன் காரணமாகவும் இந்திய உபகண்ட சமூகத்தில் முதன்மையுடையவர்களாக பிராமணரை நடத்தலாயினர். பிரிட்டிஷ் அரச இயந்திரம் பரவலாக இந்திய உபகண்டம் எங்ஙனும் நிறுவப்பட்ட வேளையில் பிராமணரே இயல்பாக அதில் மிகப் பெரும் அளவில் உள்ளூர்க்காரருக்கான பதவிகளைப் பெற்றனர். சென்னைப் பிரதானியிலும் இதே நிலை காணப்பட்டது. உதாரணமாக 1855இல் இப்பிரதானியில் காணப்பட்ட 305 உயர்மட்டப் பதவிகளில் 237 பிராமணர் கைகளிலேயே காணப்பட்டன. ஆனால், பிரதானியின் மொத்த ஆண் சனத்தொகையில் பிராமணர் 3 சதவீமாகவே காணப்பட்டனர். பிரிட்டிஷாரின் இந்திய அரச இயந்திரத்தில் பிராமணருக்கு இருந்த இச்செல்வாக்கு அவர்களின் சமூக முன்னேற்றத்திற்கும் உதவிற்று. பெரும் நில உடமையாளரான பிராமணர் காணிகளை விற்று நகரங்களை நோக்கி நகரலானார்கள். பலர் பெரும் தொழில் அதிபர்களாயினர்.

மன்னர் ஆட்சிக்காலத்தில் பாரம்பரியக் கல்வியிலும், நிலஉடமையிலும், தமிழ்ச் சமூகத்தில் பிராமணருக்கு அடுத்த நிலையில் காணப்பட்ட வேளாளர்கள் ஆந்திராவில் காணப்பட்ட ரெட்டி, கேரளாவில் நாயர் போன்ற பல பிராமணர் அல்லாத முக்கிய சாதிகள் பிராமணரின் இம்மேலாதிக்கத்தை எதிர்க்கத் தலைப்பட்டனர். இச் சாதிகளினுள் ஆங்கிலக் கல்வியறிவு மிகக் குறைவாக இருந்த காரணத்தாலும், பிராமணர் புதிய தொழில் வழங்குவதில் தம் சாதியினரையே முதன்மைப்படுத்தியதாலும், இவர்களது நிலை பிரிட்டிஷ் அரசயந்திரத்தைப் பொறுத்தவரையில் மிகப்பின்தங்கியே காணப்பட்டது. உதாரணமாக சென்னை மாகாணத்தில் கல்விகற்ற ஆண்களின் தொகையில் 17.88 வீதமான பிராமணர் ஆங்கிலக் கல்வி பெற்றிருந்த அதே வேளை வேளாளர்கள் 0.19வீதமே ஆங்கில மொழி தெரிந்தோராகக் காணப்பட்டனர். இது 1901ம் ஆண்டுப் புள்ளிவிபரம். இத்துடன் சமூக அமைப்பிலும் வேளாளர்களும், சென்னை மாகாணத்தின் பிற பகுதிகளில் காணப்பட்ட பிற நிலவுடமைச்சாதிகளும், பிராமணரால், சூத்திரர் என்றே வரையறுக்கப்பட்டனர். செட்டிகள் மட்டுமே வைசியர் என்ற அந்தஸ்தைப் பெற்றனர். சூத்திரர்கள் என்போர் இந்து மதத்தின் சமூகக் கருத்தியல் அடித்தளமான நால்வர்ண அமைப்பில் கடைநிலைச் சாதியாவர். சூத்திரரை, ஏனைய வர்க்கத்தினரான பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகியோருக்குச் சேவை செய்யக் கடமைப்பட்டவர்களாகவும் வேதக்கல்வி கற்கக்கூடாதவர்களாகவும் மனுதர்மம் வரையறுக்கின்றது. மனுதர்மத்தையும், அதன் நூல்களாகத் தோன்றிய நிபந்த நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு ஆங்கிலேயர் சட்டமியற்ற முற்பட்டமையும் புள்ளி விபரத்திற்கான சாதிப்பட்டியல் தயாரிக்க முற்பட்டமையும் வேளாளருக்கும் நாயர், செட்டி போன்ற சாதிகளுக்கும் பிரச்சினையாகிவிட்டது. புள்ளி விபரங்களுக்கான சாதிப்பட்டியல்களுக்கு தமிழர் வேளாளர் தம்மை உயர்த்திக் காட்டுகின்ற வகையில் மனுக்களை வழங்கினர். தமிழகத்தில் தாமே முதன்மை பெற்ற சாதி என்பதையும் காட்ட வரலாற்று முயற்சிகளிலும் இறங்கலாயினர்.

இவர்களுடைய முயற்சிகளுக்கு தகுந்த ஒரு வரலாற்று மொழியியல் ஆதாரமாக கார்டுவெல்ஐயரின் திராவிட மொழிகளில் ஒப்பியல் இலக்கணம் அமைந்தது. இந்நூல் சென்னை மாகாணத்தில் வாழ்ந்த மக்கள் பேசிய மொழிகள் (தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ், துளு) சமஸ்கிருதத்தோடு தொடர்பற்ற தனித்துவமான திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவையே என நிறுவிற்று. 19ம் நூற்றாண்டின் பிற்கூற்றில் எழுதத் தலைப்பட்ட பல வேளாள அறிஞர்கள் இதை மையமாகக் கொண்டு ஆரியரான பிராமணர் இந்திய உபகண்டத்தினுள் புகுவதற்கு முன்னரே அங்கு வாழ்ந்த ஆதிக்குடியினர் திராவிடர் ஆவர் எனவும் அத்திராவிடர்கள் தூய வேளாளரே எனவும், இதனால், தாம் நால்வர்ண முறைக்கு உட்படாத பெரும் ஆதிப்பண்பாட்டை உடையவர்கள் எனவும் எழுதலாயினர். இவ்வேளாளர் மையப்பட்ட கருத்துக்களின் முதன்மைக் கர்த்தா பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஆவார்.

வேளாளருக்கு பிராமணருடன் காணப்பட்ட முரண்பாட்டை தென்னக வரலாற்றின் மீது செலுத்தி இராம - இராவண யுத்தம் போன்ற பலவற்றை ஆரிய திராவிட (பிராமண - வேளாளர்) மோதலாக சித்திரித்து எழுதலானார். பிராமணருக்கும் பிராமணரல்லாத சென்னை மாகாணத்து உயர் சாதிகளுக்குமிடையில் தொழில் வாய்ப்பு, பொருளாதாரப் போட்டி, ஆங்கிலேயர்மீதான செல்வாக்கு போன்ற விடயங்களில் காணப்பட்ட முரண்பாடு வேளாள அறிஞர்சிலரின் கையில் ஆரிய திராவிட முரண்பாடாக உருமாற்றம் அமைந்தது. பிராமணர் மீதான சென்னை மாகாணத்தின் ஏனைய உயர் சாதிகள் கொண்டிருந்த கசப்புணர்வின் நிறுவனமயப்படுத்தப்பட்ட முதலாவது வெளிப்பாடு டொக்டர். சி. நடேசன் 1912இல் தொடங்கிய சென்னை ஒற்றுமை கழகம் எனலாம். பின்னர் இது திராவிட சங்கம் என அறியப்பட்டது. இதையடுத்து 1916இல் சென்னை மாகாணத்தின் பிராமணர் அல்லாத முக்கியஸ்தர்கள் பலர் சேர்ந்து தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் எனும் அமைப்பை உருவாக்கினர். இது அதன் ஆங்கில ஏடான Justice என்பதன் பெயரால் காலப்போக்கில் நீதிக்கட்சி (Justice Party) ஆகிற்று. இந்தியத் தேசிய காங்கிரசிலும் 1905இன் பின் வேகம் பெற்ற பிரிட்டிஷாருக்கெதிரான ஆயுதக்கிளர்ச்சி இயக்கத்திலும் பிராமணரே முதன்மை பெற்றிருந்தனர். ஆனால் நீதிக்கட்சியும் அதைச் சேர்ந்த வேளாளரும் ஏனைய பார்ப்பனரல்லாத உயர்சாதி முக்கியஸ்தர்களும் தம்மை மிகுந்த பிரிட்டிஷ் விசுவாசிகளாகக் கூறிக்கொண்டு தம்மை உயர்நிலைப் படுத்த முயன்றனர்.

இச் சூழலில் காங்கிரசில் அதிமுக்கிய தலைவர்களில் ஒருவராக அன்றிருந்த ஈ.வே ராமசாமி நாயக்கர் 1925இல் அதிலிருந்து வெளியேறினார். காங்கிரஸ் பிராமணர் நலனையே முதன்மைப்படுத்திச் செயல்படுகிறது என்பதே அவரது குற்றச்சாட்டு.

தீண்டாமை ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, என்பவற்றை நோக்கமெனக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தை அவர் தொடங்கினார். இதில் ஈ.வே. ராமசாமிப் பெரியார் பிராமணரல்லாத சமூகங்களினுள் காணப்பட்ட அனைத்துத் தீமைகளுக்கும் பிராமணரும் அவர்களது மதமான இந்து மதமுமே காரணமெனச் சாடினார். அவரது செயற்பாடுகளுக்கும் ஆரிய - திராவிட முரண்பாடு என்னும் வேளாள அறிஞரின் வரலாற்றுக் கருத்தியல் கை கொடுத்தது.

சென்னை மாகாண வெகுஜனங்களின் இழிநிலைகள் அனைத்திற்கும் பிராமண அதாவது ஆரிய வரலாற்றுச் சூழ்ச்சிகளே காரணம் என்பது அவருடைய கருத்தாயிற்று. பிராமணரான ராஜாஜியின் தலைமையின் கீழ் சென்னை மாகாண ஆட்சியை 1937இல் கைப்பற்றிய காங்கிரஸ்கட்சி தமிழ்நாட்டில் ஹிந்தியை கட்டாய பாடமாக்கியது. இதை எதிர்த்து வேளாள அறிஞரான மறைமலை அடிகள், நீதிக்கட்சிப் பிரமுகர்கள் மற்றும் பல தமிழ்க் கல்விமான்கள் வெகுஜனப் போராட்டத்தில் குதித்தனர். இக்காலத்தில் தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கங்களும் மேலோங்கிற்று. இக்கால கட்டத்தில் நீதிக்கட்சியின் தலைமையும் பெரியார் ஈ.வே.ராவின் கைக்குச் சென்றது. 1944இல் நீதிக்கட்சி திராவிடக் கழகமாகியது. அதிலிருந்து பிரிந்து 1949இல் சி.என். அண்ணாத்துரையின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது. திராவிடக் கழகம், தி.மு.க. ஆகியவற்றின் கோட்பாட்டாளராகவும் (Theoreticion) கலைஞர், அண்ணாத்துரை, ஆகியோரின் அரசியற் குருவாகவும் இருந்தவர் பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரைப் பிள்ளை. இவரே தமிழ்த் (திராவிட) தேசியம் பற்றி வரையறை செய்ய முற்பட்ட முதன்மையான திராவிட இயக்கக் கோட்பாட்டாளர் எனலாம். இவருடைய கருத்துக்களை ஆராய்வது இன்றைய தமிழ்த் தேசியத்தின் சில அம்சங்களைப் புரிந்து கொள்வதற்கு இன்றியமையாததாகும்.

# கறுப்பு=புலிகள்!

அண்மைய தெஹிவளை குண்டுவெடிப்புக்குப் பின்னர் தலைநகரிலும் சூழவுள்ள நகர்களிலும் பொது மக்கள் பாதுகாப்புப் படையினர் போல் நடந்து கொள்கின்றனர். இரவுநேர மின்வெட்டுக்களின் போது எந்தத் தமிழரையாவது இருட்டுச்சந்துக்குள் மடக்கி தங்கள் இராணுவத்தன கைவரிசைகளைக் காட்டத்தொடங்கி விடுகின்றனர். இது அதிகமாக தெஹிவளைப் பகுதியில் இடம்பெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி எவராவது சற்றுக் கறுப்பாகத் தென்பட்டு விட்டால் போதும் புலிகளைக் கண்டுவிட்ட களிப்பில் துள்ளுகிறார்கள். சன்மானம் கிடைக்கலாம் என்ற நப்பாசையோ தெரியாது.

கடந்தவாரம் களுத்துறை தனியார் பஸ் நிலையத்தில் கொழும்புக்கான பஸ்ஸில் 35-40 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் ஏறுகிறார். கறுப்பு சற்றுக் கடினமானதுதான். அவள் ஏறும் போது அங்குநின்றவன் இந்தக் கறுப்பென்றால் சந்தேகக் கறுப்புத்தான்...., இது சிங்களக் கறுப்பல்ல...., என்ற தொனியில் முணுமுணுக்கிறான். பஸ்ஸில் ஏறி எல்லாரும் அமர்ந்தாயிற்று. இவளையே அனேக கண்கள் மொய்க்கின்றன. சற்று நேரத்தில் முன்பு முணுத்தவன் அவளருகே வந்து 'அடையாள அட்டையைத் தர முடியுமா?' என்கிறான். அவளும் தருகிறாள். பார்த்துவிட்டு Thanksம் கூடவே ஒரு Sorryயும் சொல்லிவிட்டு போகிறான். அவள் சிரிக்கிறாள். அவமானமா, அப்பாவித்தனமா, அசட்டுச்சிரிப்போ சிரிக்கிறாள். அடையாள அட்டையில் தமிழ்ப் பெயர் இருந்திருந்தால் அடுத்தநாள் பத்திரிகையில் ''களுத்துறை பஸ் நிலையத்தில் கரும்புலியைச் சேர்ந்த பெண் கைது'' என்று வந்திருக்கும்.

இன்னுமொரு சம்பவம் கண்டியைச் சேர்ந்த ஒரு தமிழ்த் தம்பதி கொழும்பு பஸ் நிலையத்தில் கண்டி பஸ்ஸுக்காக காத்திருக்கிறது. இவர்களும் கறுப்பென்பதைத் தவிர சந்தேகப்பட எந்தக் காரணங்களும் இல்லை. விசாரித்த பொலிஸார் இவர்களைக் கொண்டு போய் தடுப்புக்காவலில் வைத்துள்ளனர். வெள்ளிக்கிழமை வந்த இவர்கள் சனி, ஞாயிறு தினங்களாக என்ன ஆனார்கள் என்பது வீட்டாருக்குத் தெரியவில்லை. திங்கட்கிழமையே இவர்கள் பற்றிய விபரம் தெரியவந்து உறவினர்கள் போய் பார்த்து இருக்கிறார்கள். கொழும்பு தடுப்புச்சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று சிறைச்சாலை அதிகாரிகளால் கூறப்படுகிறது. இவர்கள் இலங்கையில் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதும் முக்கிய பத்திரிகையாளர் ஒருவரின் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கறுப்பான இரு பத்திரிகையாளர்கள் மோட்டார் சைக்கிளில் செல்கிறார்கள். சந்தேகம் கொண்ட பொலிஸார் வாகனத்தில் பின் தொடர்ந்து வந்து மறிக்கின்றனர். இருக்கிற எல்லா அடையாளங்களையும் சொல்கிறார்கள், காட்டுகிறார்கள். பதினைந்து நிமிடங்களுக்கும் மேலாக விசாரணை தொடர்கிறது. ஒன்றும் செய்ய இயலாத நிலை. ''எங்களுக்கு உங்களில் சந்தேகம் தான்'' என்கிறார்கள். ''ஏன்'' என்கின்றனர். இவர்கள் பதில் சொல்ல முடியாத நிலையில் பிரிகிறார்கள்

இம்மூன்று சம்பவங்களும் புலிகள் எல்லாரும் கறுப்பானவர்கள் என்ற சந்தேகங்களால் இடம்பெற்றவை. கறுப்பானவர்கள் எல்லாம் புலிகள் என்று கருத்தாவது இது ஏற்படுத்தியிருக்கிற இன்னொரு விளைவு வெள்ளைக்காரர்களாய் அல்லாத ஏனையோர்களையும் புலிகளாக சந்தேகப்பட வைத்திருக்கிறது.

- ஷகீப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பொ.ஐ.முவின் இரண்டாண்டுகள் ஒரு மீள்பார்வை:

# யுத்த முனைப்பில் காணாமல் போன

இந்நாட்டின் இன முரண்பாடானது பல்வேறு வழிகளிலும் ஜனநாயக சீரழிவிற்கு வழிவகுத்தது என்பது யாவரும் அறிந்த விடயமே. இலங்கை அரசியலைக்குற்றவியல் அரசியலாக்குவதற்கும், (Criminalisation of Politics ) சமூகத்தை மிலேச்சத்தனமாக்குவதற்கும் (Brutalisation of Society ) இந்நாட்டின் பேரினவாத, யுத்தவாத, அரசியல் பெரும்பங்களிப்புகளைச் செய்துள்ளது. 1979ம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து ஐ.தே.கட்சியினால் உத்தியோக பூர்வமாக பாரிய அழிவுகளுக்கு மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட இந்த இனப்படுகொலை யுத்தத்தின் உண்மையான விளைவுகளினாலும், ஐ.தே.கட்சி ஆட்சியின் ஜனநாயக விரோத ஊழல் மிக்க அரச பயங்கரவாத ஆட்சியின் காரணமாகவும் சலிப்புற்று விரக்தியின் விளிம்புக்குச் சென்றிருந்த சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் உட்பட இந்நாட்டின் எல்லா மக்களினதும் மனநிலையைக் கவரக்கூடிய வகையில் சமாதானத்திற்கும், ஜனநாயக மயப்படுத்தலுக்குமான கோரிக்கையை மிகவும் ஜனரஞ்சகமான கோரிக்கையாக முன்னெடுத்துச் சென்றது பொதுஜன ஐக்கிய முன்னணி (பொ.ஐ.மு). 1993ம் ஆண்டின் மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஆரம்பமான இக்கோஷம் 1994ம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் வரை பிரபல்யம் பெற்றதொன்றாகத் திழ்ந்தது. 1994ம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனநாயக மரபுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலான ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவது, யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வைக் காண்பது என்ற வாக்குறுதிகளே மிகவும் பிரபல்யம் பெற்றவையாகவும், ஐ.தே.கட்சியின் வாக்குறுதிகளுடன் ஒப்பிடும் பொழுது அதனுடன் கொள்கை அடிப்படையில் வேறுபட்ட வாக்குறுதிகளாகவும் விளங்கியவையாகும். தேர்தல் காலங்களில் இக்கோரிக்கைகள் மிகவும் ஜனரஞ்சகமான சுலோகங்களாக முக்கியத்துவம் அடைந்தன. இன முரண்பாடு தொடர்பாக சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்த ஜனநாயக ரீதியிலான நிலைப்பாடுகளின் காரணமாக இத்தேர்தலில் பொ.ஐ.முன்னணிக்கு இவரே தலைமைதாங்கியதனால், இம்முக்கியத்துவம் கிடைக்கப் பெற்றிருக்கலாம். இவ்வரசு பதவிக்கு வந்ததன் பின் சமாதான செயற்பாடுகளும் முறையான அரசியல் அடிப்படைகளின் மூலம் ஆரம்பிக்கப்பட்டதை விட மிகவும் ஜனரஞ்சகமான வகையில் மேலெழுந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. இக்கட்டுரையானது இவ்வரசின் ஈராண்டுகள் பூர்த்தியாகியிருக்கின்ற இவ்வேளையில் எந்தவகையில் இவ்வரசு அதனது வாக்குறுதியை நிறைவேற்றச்செயற்பட்டுள்ளது என்பது பற்றிய விடயத்தை விமர்சன ரீதியில் நோக்குகின்றது.

### சமாதானப் பேச்சுவார்த்தைகள்

பொ.ஐ.முன்னணியின் சமாதானத்திற்கான சுலோகங்கள் சிங்கள மக்களில் பெரும்பகுதியினரை ஆக்கிரமித்துக் கொண்டது மட்டுமல்ல, கடந்த ஒன்றரை தசாப்தங்களாக யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்துக்கொண்டிருக்கும் வட, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்தது. மறுபுறம் பொ.ஐ.மு. பாராளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றி சந்திரிகா அவர்கள் பிரதம அமைச்சரானதைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தமது தயார் நிலையைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தினர் விடுதலைப் புலியினர். இந்நிலைமையானது இவ்வரசு தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியிருந்த நம்பிக்கையின் விளைவாக உருவாகியது என்றால் தவறாகாது. இந்நிலைமைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு சாதகமான சூழ்நிலையாக அமைந்தது. விஜேதுங்க அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பிரதமரான சந்திரிகா அவர்களின் பிரதிநிதிகள் மூலமாக இப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வரசின் இன உறவுகள் தொடர்பான இன்றைய நிலைப்பாட்டில் இருந்து பார்க்கும் போது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளில் பெற்ற வாக்குப்பலத்தை ஜனாதிபதித் தேர்தலில் அதிகரித்துக் கொள்வதற்காக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு கண்கட்டி வித்தையா இது என எண்ணத்தோன்றுகிறது. எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த தொண்டமான் அவர்களை அவசர அவசரமாக கட்சியின் அமைச்சராக ஆக்கிய விதம் இச்சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகின்றது.

மிகவும் ஆழமான முரண்பாட்டையும், பாரிய ஆயுதப் போராட்டத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரச்சினையைத்தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை நடத்தப்படும் போது அதற்குத் தேவைப்படும் நிபுணத்துவங்களோ, நிகழ்ச்சி நிரல்களோ, வரையறைகளோ தயார் செய்யப்படாமல் ''மணலில் சோறு செய்து விளையாடும் சிறுபிள்ளைகள் விளையாட்டைப்போல்'' நான்கு மாதங்களில் முறிவடைந்து மீண்டும் யுத்தம் ஏற்பட்டுவிட்டது.

எவ்வித முறையான காரணிகளையும் மக்கள் முன்வைக்காமல் விடுதலைப் புலிகள் தாமாகவே பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்ட செயலானது அவர்களின் இராணுவத் தேவை கருதி அவர்கள் மேற்கொண்ட முடிவே இது என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமது இராணுவ சக்தியின் மீது முழு நம்பிக்கையையும் வைத்து செயற்படுகின்ற அமைப்பு என்ற வகையில் இது உண்மையாகவும் இருக்கலாம். எனினும் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இப்பேச்சுவார்த்தையின் போது நடந்து கொண்ட விதமானது இருசாராருமே சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நேர்மையான கடமைப்பாட்டுடன் ஈடுபட்டார்களா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. பேச்சுவார்த்தை முறிவடைந்ததைத் தொடர்ந்து இரு சாராரும் தத்தமது நிலைமைகளைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான நியாயங்களை தங்களுடன் வைத்திருக்கின்றார்கள். ஆனால், யுத்தம் வழமையாக மிலேச்சத்தன்மான வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

### அரசின் தீர்வுப் பிரேரணை

இந்தப் படுகொலை யுத்தத்தை மிகவும் கொடூரமான வகையில் நடத்திக்கொண்டு செல்கின்ற இவ்வரசு இன முரண்பாட்டுக்கான அரசியல் தீர்வுப்பிரேரணை ஒன்றையும் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முன்வைத்தது. அதன் பிறகு இவ்வருடம் ஜனவரி மாதம் அதன் சட்ட நகல் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. சென்ற வருடம் ஓகஸ்ட் மாதம் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளில் சில நல்ல அடிப்படைகள் காணப்பட்டாலும் அது சில மாதங்களில் சட்ட நகலாக மாற்றம் பெற்ற பொழுது அதன் தரம் குறைக்கப்பட்டு சிங்கள, பௌத்த இன வாதப் பக்கம் சாய்ந்த நிலை காணப்படுகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன்வைக்கப்படும் பிரேரணைகளானது தமிழர்களின் குறைந்தளவிலான இணக்கப்பாட்டையாவது கொண்டதாக அமைவது அவசியமானதாகும். எனினும், தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட கொழும்பில் நிலை கொண்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடன்கூட இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பேச்சுவார்த்தைகளை நடத்த மறுத்து வரும் இவ்வரசின் உள்நோக்கம் சந்தேகத்திற்கிடமானதாகவே அமைந்துள்ளது.

அரசு முன்வைத்துள்ள பிரேரணைகள் ஒரு முழுமையான அரசியல் யாப்பாக இல்லாததன் காரணமாக இந்தயாப்பியல் கட்டமைப்பைப்பற்றி முழுமையாக ஆய்வு செய்ய முடியாது. எனினும், இன முரண்பாட்டிற்கு வழிவகுத்த பெரும்பான்மையினர் ஆளும் ஜனநாயக நடைமுறையைத் தேசிய ரீதியில் மாற்றி அமைப்பதற்கான எவ்விதமான உத்தரவாதத்தையும் இப்பிரேரணைகள் முன்வைக்கவில்லை. அதிகார அலகு தொடர்பாகவும் தீர்க்கமான முடிவு முன்வைக்கப்படவில்லை. அத்தோடு இப்பிரேரணைகள் தொடர்பான இவ்வரசின் உறுதியான கடமைப்பாட்டையும் தெளிவாகப் பிரகடனப்படுத்தவில்லை. யுத்தமுனைப்புகளுக்கு இவ்வரசு வழங்கும் முக்கியத்துவத்துடன் ஒப்பிடும் போது அரசியல் தீர்வின் நடைமுறையை வென்றெடுக்க இவ்வரசு எதுவித முக்கியத்துவத்தையும் கொடுக்கவில்லையென்பது தெளிவாகின்றது. இந்நிலைமைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து **யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான சர்வதேச ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரு ஆயுதமாகவே இன்று வரை இவ்வரசின் தீர்வுப் பிரேரணைகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே, இப்பிரேரணைகளானது அரசியல் ரீதியான அதனது முக்கியத்துவத்தையும், நியாயத்தன்மையையும் அரசு யுத்தமுனைப்புக்குள் இழந்து விட்டது என்று கூறினால், தவறாகாது.**

இவ்வரசும் ஐ.தே.கட்சியைப்போல யுத்த நடைமுறைகளின் மூலமே அதனது காலத்தைக் கடத்தி விடுமோ என்ற சந்தேகமும் வலுப்பெற்று வருகின்றது.

அரசியல் தீர்வு நடைமுறையை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் வென்றெடுப்பதற்குத் தேவையான ஐ.தே.கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக அவர்களைப் புறக்கணிப்பதாகவே அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஒற்றையாட்சி முறையை மாற்றுவதற்கு சம்மதிக்க மாட்டோம் என்னும் ஐ.தே.கட்சித் தலைவரின் கூற்றானது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அரச யாப்பு சீர்த்திருத்தம் தொடர்பான நடவடிக்கைகளை நடைமுறைரீதியில் முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.

இந்தப் பிரேரணைகளை வைத்துக் கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழு இனியும் செயற்படுவதன் மூலம் ஆகப் போவது ஒன்றும் இல்லை. அத்தோடு இந்நடைமுறையின் தோல்விக்கான எல்லாப் பொறுப்புகளையும் இவ்வரசு ஏற்றுக் கொள்ளவேண்டும்.

### யுத்தமும் சமாதானமும்

பொ.ஐ.மு. சமாதானம் தொடர்பான வாக்குறுதிகளை வழங்கும் பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் அரசின் சமாதானநடைமுறைகளுக்கு ஒத்துழைப்பார்கள் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் வழங்கவில்லை. விடுதலைப் புலிகள் பற்றிய சரியான புரிந்துணர்வற்ற நிலையிலிருந்து இவர்களுக்கு இத்தகையதொரு உத்தரவாதத்தை வழங்கவும் முடியாது. எனினும், புலிகளை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சமாதானப்பேச்சுவார்த்தைகள் இராணுவ செயற்பாடுகளை ஆரம்பித்ததைத் தொடர்ந்து அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறி முழுமையான யுத்தத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

மாறாக, முழுமையான யுத்த முனைப்புகளைத் தவிர்த்து, விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்து அரச இராணுவ தளங்களையும், பொருளாதார இலக்குகளையும் பாதுகாத்துக்கொள்ளும் வரையறைக்குள் யுத்த நடைமுறைகளைக் கட்டுப்படுத்தி தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய வகையில் அரசியல் நடைமுறைகளை அரசு முன்னெடுத்து சென்றிருக்குமேயானால் இது தமிழ் மக்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் அரசுக்கு பெற்றுக்கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருப்பதோடு, தமிழ் மக்கள் புலிகள் மீது தமது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கும் ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கும். இதன் மூலம் அரசியல் தீர்வின் நடைமுறைக்கு சாதகமான ஒரு வலுவான தோழமையைத் தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்புவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். இதற்கு அரசியல் தீர்வு தொடர்பாகவும், சமஷ்டி அரசியல் கட்டமைப்பு தொடர்பாகவும், உறுதியானதும் நேர்மையானதுமான கடமைப்பாட்டை அரசு பிரகடனப்படுத்துவது முன்நிபந்தனையாக அமையும்.

ஆனால், அரசியல் தீர்விற்கான நடவடிக்கைகளை மந்தகதியில் விட்டு விட்டு இராணுவ நடைமுறைகளைத் தீவிரமாகவும், ஆர்வமாகவும் முன்னெடுத்ததன் மூலமாக அரசின் சமாதானம் தொடர்பான வாக்குறுதிகளை நம்பிச் செயற்பட்டவர்களுக்கு மாபெரும் துரோகத்தை இழைத்துள்ளது.

ரிவிரச இராணுவ நடவடிக்கைகளின் மூலம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய சம்பவத்தை விடுதலைப்புலிகள் என்னும் தமிழ் இராணுவ அமைப்பிடமிருந்த ஆதிக்கத்தை வெறுமனே இலங்கை அரசின் சிங்கள இராணுவத்தின் ஆதிக்கத்திற்குட்படுத்திய சம்பவமாக மட்டும் கருதமுடியாது. அல்லது யாழ்நகரைத் தம்மால் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்னும் நம்பிக்கையை யாழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இராணுவத் தோல்வியாக மட்டும் பார்க்க முடியாது. மாறாக யாழ் நகரைக் கேந்திரமாகக் கொண்ட ஈழத்தமிழர்களின் பாரம்பரியக் கலாசாரப் பேரழிவாகவே இச்சம்பவம் கருதப்படல் வேண்டும்.

ஐ.தே.க. ஆட்சியின் போது 1981ல் யாழ் நூலகம் எரித்து சாம்பலாக்கப்பட்டதைவிட மிகவும் மோசமான செயலாக அமைந்தது இந்த ரிவிரச படையெடுப்பின் விளைவு என்பதை எவரும் மறுக்க முடியாது. இத்தகைய பாதகமான செயலை நிறைவேற்றியதன் மூலம் ''என்ன விலைகொடுத்தும் சமாதானத்தை நிலைநாட்டுவேன்'' (Peace at any cost) என்னும் ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் தேர்தல் வாக்குறுதி நீரில் எழுதிய எழுத்தாக மாற்றப்பட்டு விட்டது. தமிழர்கள் மத்தியில் பாரிய வேதனையை ஏற்படுத்திய இச்சம்பவத்தை இவ்வரசினதும், அதன் இராணுவத்தினதும் மாபெரும் சாதனையாக வெற்றி விழாவாகக் கொண்டாடியதன் மூலம் இவ்வரசு சாதித்தது என்ன? அச்சாதனைகள் எல்லாம் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதலின் மூலம் தவிடுபொடியாகிவிட்டது. வெற்றியும் தோல்வியும் இருசாராருக்கும் மாறிமாறிக் கிடைக்கக்கூடியவை என்பது மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆனால், ''தமிழ் மக்கள் தொடர்பான விவகாரங்களில் எத்தகைய மிலேச்சத்தனங்களுடனும் செயற்படுவதற்கான தனது தயார் நிலையை இவ்வளவு கெதியில் மிகத் தெளிவாகப் பிரகடனப்படுத்தியதுதான் இவ்வரசு இன முரண்பாடு தொடர்பாக இது வரை நிலைநாட்டிய மாபெரும் சாதனையாகும்.

யாழ் நகருக்கு இந்நிலைமை ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகள் வகித்த பங்கையும் மறந்து விடமுடியாது. மக்களை வெறும் பார்வையாளர்களாக வைத்துவிட்டு இராணுவத்தேவைகருதிய புலிகளின் செயற்பாடுகள் பல்வேறு வகையிலும் பொதுமக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ளன.

ஆனால், இறுதியில் இப்
ஏற்படுகின்ற பாதிப்புக்க
பேறக எவரும் முன்
பாதிப்புக்கள் இப்பே
வெறும் பார்வையாளர்
இம்மக்கள் வழங்குகின்ற
ளாக மாறிவிடுகின்ற
மயப்படுத்தப்படாத மக்
மக்கள் மயப்படுத்தப்ப
நடாத்தும் போது இவை
வுகள் தவிர்க்கக் கூடியதல்
தீர்வுகளை நாடும் போது
பாதிப்புக்களை எதிர்நே
நிலைமை தமிழ் மக்களு
சிங்கள மக்கள் உட்ப
ளுக்கும் ஏற்படும் என்ப
ரண்பாட்டு யுத்த வரலா
காண்பித்திருக்கின்றது.

### சந்திரிகாவின் இ... தலைமை...

அரச இராணுவம் யாழ்நக
யதற்கு அந்த இராணு
வழங்கிய மிகச் சிற
தலைமையே காரணம் எ
கொண்டுள்ளார் ஜனாதி
அவர்கள். ஆனால், இ
தலைமையின் கீழ் தான்
இராணுவமுகாம் முற்
பட்டது. இச்செய்தியை
தணிக்கையின் மூலம்
இவ்வரசு முற்பட்டதே
அத்தலைமையின் பலவீ
முற்பட ... லை. மக்க
களை துச்சமென மதிக்கு
அதனுடைய பலம் வாய்
தின் மூலம் யாழ்நகரை
ருக்க முடியும். ஏனெனி
லாப் பாணியிலான
பலமிக்க ஆயுதங்களை
ளையும் கொண்ட எந்த
இராணுவத்துடனும் நேர
வசமுள்ள பிரதான வள



களை இழக்க முன்வ
இரகசியமல்ல. 1987ல்
பிரதேசம் இராணுவத்தின
பட்ட போதும், தீவுப்பகுத
பட்ட போதும், விடுத
மேற்கொண்ட முடிவுக
கின்றன. ஆனால், யாழ்
இந்நிலைமைக்கு ம
மனநிலையைத்தான் விடு
மக்கள் மத்தியில் ஏற்படு
என்பதுவும் குறிப்பிடப்
1987ம் ஆண்டு ஒப்பரே
வடமராட்சியின் பின்
கைப்பற்ற இராணுவம் மு
ரஞ்சன் விஜேரட்ன
அமைச்சராக இருந்த
மக்களைப்பாதுகாப்பாக
வவுனியாவில் முகாம
வைத்துவிட்டு யாழ் நக
புலிகளின் பிடியில் இரு
முயற்சிகள் மேற்கொ
இவ்விரு சந்தர்ப்பங்க
உட்பட வெளிநாடுகளி
காரணமாக இம்முயற்
பட்டன. எனினும், ரிவி
போது இந்த வெளிநாட்
மௌனப்படுத்தியது யா
அரசியற் பேச்சுவார்த்
எவ்விதக் காரணமும் க
பெற்றது உட்பட அரசிய
இராணுவ ரீதியாகவு
புலிகள் விட்ட தவறுக
மைக்கு வழிவகுத்தன.
பதி சந்திரிகாவின் ரிவி
இரகசியம். எனவே ஜன
நன்றி கூறவேண்டிய
புலிகளுக்கேயாகும். வி
ளுக்கு எதிரான இராணு
என்பதுவும், ஆயுதமே

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மாதானம்!

எஸ்.பாலகிருஷ்ணன்

பொதுமக்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கை வேறுபட்ட நடவடிக்கை என்பதுவும் இரு வேறு பட்ட விடயங்களாகும். இவை அந்த இராணுவ நடவடிக்கைகளின்விளைவுகளிலிருந்து தீர்மானிக்கப்பட வேண்டியவையாகும்.

உள்நாட்டு யுத்தத்தில் ஆயுதம் ஏந்தாத பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான செஞ்சிலுவைச்சங்கத்தின் சர்வதேசக் கமிட்டியின் ஜெனிவாப் பிரகடன்த்தில் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டு அதற்கு அனுகூலமான வகையில் கட்டுப்பாட்டுடனான இராணுவ நடவடிக்கைகளை இவ்வரசு நடைமுறைப்படுத்தி இருக்குமேயானால், இவ்வரசு தமிழர்கள் நலவுரிமை பற்றி வெளியிடும் கருத்துக்களில் ஓரளவிற்காவது பற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை உணரக் கூடியதாக இருந்திருக்கும். இந்நிலைமையானது மறுபுறத்தில் ஆயுதம் ஏந்தாத பொது மக்களைப் பாதிக்காத விதத்திலான கட்டுப்பாட்டுடனான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதை விடுதலைப் புலிகள் உத்தரவாதப் படுத்துவதற்குத் தேவையான தமிழ் மக்களின் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு தேவையான அனுகூலமான சூழ்நிலையை ஏற்படுத்த உதவியிருக்கும்.

ஆனால், பல தசாப்தங்களாக தமிழரெதிர்ப்பு உணர்வுகளுடன் இனவாதமயப்படுத்தப்பட்ட இராணுவத்தை எவ்விதக் கட்டுப்பாடு மற்றவகையில் முழு வட - கிழக்கையும் போர்க்களமாகப் பயன்படுத்த அனுமதியை வழங்கியதன் மூலம் பாரிய பாதிப்பிற்கு உள்ளானவர்கள் பொதுமக்கள்தான் என்பது நிரூபிக்கப்பட்ட விடயமாகும். இவ்வகையில் போர்புரியும்இரு சாராரும் போட்டா போட்டியாக மாறிமாறி சிவில் இலக்குகளை இராணுவ இலக்குகளாகக் கருதி செயற்படுவதன் மூலம் பாரிய இழப்புக்களையும், அழிவுகளையும் சந்திப்பவர்கள் பொதுமக்களேயாவர்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினையைக் கருப்பொருளாகக் கொண்டு உருவாகிய இம்முரண்பாட்டின் அடிப்படைக் காரணிகளை அரசியல் ரீதியாகத் தீர்க்காமல் அதன் விளைவாக மேலெழுந்த இராணுவ முரண்பாட்டிற்குத் தீர்வைக்காண முடியாது என்பது இவ்வரசுக்குத் தெரியாத விடயமல்ல. இருப்பினும், இவ்வரசும் இவ்விதமாக இராணுவ முனைப்புக்களை முன்னெடுத்து செய்தித் தணிக்கையின் மூலம் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவதன் மூலம் இராணுவத்தீர்வு சார்பான மனநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துமேயானால் பின்வரும் விளைவுகளை சந்திக்க நேரிடும்.

1. சமாதானமான அரசியற் தீர்விற்கான எதிர்பாப்புகளும், ஆதரவும் வலுவிழந்து இன முரண்பாட்டின் தீர்வைக் காண வேண்டிய ஒரே தளமாக ஆயுதப் போர்க்களம் மட்டுமே மிஞ்சும்.

2.இந்த யுத்தத்தின் தவிர்க்க முடியாத விளைவாக உருவாகக் கூடிய இனவாத உணர்வுகள் வளர்ச்சியடைந்து அது அரசியல் தீர்விற்கான அடிப்படையைப் பலவீனப்படுத்துவதோடு சமூகத்தில் வன்முறைச்சம்பவங்களை அதிகரிக்கவும் அதன் மூலம் அரசியலில் ஒரு அராஜக நிலைமையைத் தோற்றுவிக்கவும் வழிவகுக்கும்.

3. விடுதலைப் புலிகள் போன்ற தீவிரவாத, இராணுவவாத அமைப்புகள்தவிர்க்கப்பட முடியாத சக்தியாக உருவெடுத்து தமிழ் மக்களில் பெரும்பான்மையினரின் ஆதரவும் அங்கீகாரமும் அவர்கள் நடத்தும் போராட்டத்திற்கு வந்தடையும். தமிழ் மக்கள் முழுமையாக கிரமமாக புலிகளின் மடிக்குத் தள்ளப்படும் நிலைமையைத்தோற்றுவிக்கும்.

4. மேற்கூறிய நிலைமைகளினூடாக ஆயுதப் போராட்டமானது பல தசாப்தங்களுக்கு நீடிக்கக் கூடிய நிலைமை ஏற்படுவதோடு சிங்கள, தமிழ், முஸ்லிம் உட்பட இந்நாட்டின் எல்லா மக்களுக்கும் பாரிய பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஒரு கட்டுப்பாடற்ற நிலைமை ஏற்பட வாய்ப்புக்களிருக்கின்றது.

சமஷ்டி அரசியல் கட்டமைப்பைக் கொண்ட ஒரு அரசியல் தீர்வின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சாதகமான தன்மையும் அதற்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவும் போது இவ்வரசு இராணுவ முனைப்புகளில் தனது முழுக்கவனத்தையும் செலுத்திச் செயற்படுவதன் உள்நோக்கம் என்ன என்ற கேள்வி எழுகின்றது?

## அரசு - புலிகள் தீர்வின் எதிர்காலம்:

இந்தளவுக்கு இராணுவ ரீதியில் இவ்வரசு செயற்படுவதற்கான காரணம் என்ன? விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தைகளை முறித்துக்கொண்டதன் விளைவாக அவர்களை இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்ட நடைமுறையா? அல்லது முறையான பல்லினப் பாங்கை உத்தரவாதப் படுத்தக்கூடிய சமஷ்டிக் கட்டமைப்பைக் கொண்ட அரசயாப்பு சீர்திருத்தம் ஏற்படுவதைத் தவிர்த்து சிங்கள - பௌத்த இனவாதக் கருத்தியலுக்கு அனுகூலமான வகையில் சிங்கள பௌத்த ஆதிக்கத்தை தேசிய ரீதியில் உறுதிசெய்யக்கூடிய யாப்பு சீர்திருத்தத்தைத் தமிழ் மக்களின் மீது திணிப்பதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியின் காரணமாகவா? என்பது ஆராயப்பட வேண்டியவிடயமாகும்.

விடுதலைப் புலிகளை புறக்கணித்து விட்டு இனமுரண்பாட்டைத் தீர்க்கப் போவதாக இவ்வரசு அடிக்கடி சுட்டிக் காட்டிக்கொண்டாலும் கடந்த இரண்டு வருட பதவிக்காலத்தில் இன உறவு தொடர்பாக மேற்கொண்ட எல்லா நடவடிக்கைகளுமே விடுதலைப் புலிகளை இலக்காகக் கொண்டுதான் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளதோடு தமிழ் மக்களின் அபிலாஷைகளை முற்று முழுதாகப் புறக்கணிப்பதாகவுமே அமைந்துள்ளமையைக்காணக்கூடியதாக இருக்கின்றது. விடுதலைப் புலிகள் தொடர்பான அல்லது இனமுரண்பாட்டைத்தீர்ப்பது தொடர்பாகவோ அல்லது தமிழர்களின் ஏனைய விவகாரங்கள் தொடர்பாகவோ தமிழ் மக்களின் முறைமையான பங்குபற்றுதலின்றி எடுக்கப்படும் தீர்மானங்களையும் அவர்களின் முறையான அங்கீகாரமற்ற தீர்வுகளையும் தமிழ் மக்கள் நிராகரிப்பார்கள். இது அவர்களின் ஜனநாயக உரிமையுடன் தொடர்புடைய விடயமாகும். சிங்கள மயப்படுத்தப்பட்ட அரசோ அல்லது சிங்களமயப்படுத்தப்பட்ட இராணுவமோ தமிழர்களின் முறையான பங்குபற்றுதலின்றி எடுக்கின்ற எந்தத் தீர்மானத்தையும்நிராகரிக்கின்ற உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. இவ்வரசும் கடந்த இரண்டாண்டு காலத்தில் எடுத்த எல்லா நடைமுறைகளும், பேசிய எல்லாப் பேச்சுக்களும்சிங்களவர் பக்கம் சார்ந்த அரசு என்ற நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக இனங்காட்டியே வந்துள்ளது.

தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு எத்தனையோ நடைமுறைகள் மேற்கொண்டிருந்திருக்கலாம். ஆனால், இது வரை ஆக்கபூர்வமான எதையுமே அரசு செய்யவில்லை. உதாரணமாக 1988ம் ஆண்டு தமிழ் மொழியும் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப் பட்டது. இன்று வரை அது ஏட்டுச்சுரைக் காயைப் போல வெறும் எழுத்துக்களாகவே இருக்கின்றன. இவ்விருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஆரம்ப நடவடிக்கையாக ஒரு ஆயிரம் அல்லது இரண்டாயிரம் மொழி பெயர்ப்பாளர்களை நியமனம் செய்து அவர்களுக்குத் தமிழ் தட்டச்சு இயந்திரங்களை வழங்கி பொலிஸ்நிலையங்கள், அரசகாரியாலயங்கள் போன்றவற்றில் தமிழ் மக்களுடனான தொடர்புகளை தமிழ் மொழியில் மேற்கொள்வதைக் கட்டாயப்படுத்தக் கூடிய விதத்தில் இவ்வரசு செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கலாம். இச்செயலானது ஒரு புறத்தில் பல தசாப்தங்களாக சிங்கள மயப் படுத்தப்பட்டு வந்த அரசு இயந்திரத்தை இரு மொழிக் கொள்கையை ஏற்றுச் செயற்பட வைப்பதற்குத் தேவையான கருத்தியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு உதவியிருக்கும். மறுபுறத்தில் இவ்வகையான நடவடிக்கைகளானது தமிழ் மக்களின் கௌரவத்திற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானதாகவும் அமைய வாய்ப்புகளுண்டு. இவ்வகையான செயற்திட்டங்களுக்கு செலவு செய்ய வேண்டிய பணத்தை வெளிநாடுகளிலிருந்து உதவியாகவும் பெறக்கூடிய வாய்ப்புக்கள்இருக்கின்றன. யுத்த செலவீனங்களுக்காக பல கோடிரூபாய்களை ஒரு நொடிப்பொழுதில் தேடி செலவுசெய்கின்ற இந்த அரசுக்கு இது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்காது.

இதுபோன்ற நடவடிக்கைகள்தான் இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டின் அமைச்சின்நடவடிக்கைகளாக அமைதல் வேண்டும். ஆனால், இருவருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்ட ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கின்ற இவ்வமைச்சின் பிரதான பணியாக யுத்தத்திற்குத்தாளம் போடுகின்ற வெண்தாமரை (சுதுநெலும்) இயக்கத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு தான் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அரசின் யுத்த செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற இந்த வெண்தாமரை இயக்கம் சமாதான முகமூடிக்குள் யுத்த முனைப்புகளை முன்னெடுத்துச் செல்லத் தேவையான சூழலை மக்கள் மத்தியில் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும். இதுதான் இவ்வரசின் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வழியாக இருக்கின்றது.

இவ்வரசின் எல்லா நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தக்கூடிய காரணியாக விடுதலைப் புலிகள் இருக்கின்றனர். விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி அரசாங்கம் தனது இராணுவ அடாவடித்தனங்களைக் காரணம் காட்டி விடுதலைப் புலிகள் தமது எல்லாச் செயற்பாடுகளையும் நியாயப்படுத்தி வருகின்றார்கள். உண்மையில் அரசும், விடுதலைப் புலிகளும் பல வழிகளிலும் ஒருவரில் தங்கி வாழ்ந்து (Co-exist) கொண்டிருக்கின்றார்கள். ஆனால், மக்களின் கதி என்ன? முரண்பாட்டு யுத்தத்தின் பிரதான சக்தியாகத் திகழ்கின்ற அரசாங்கமும், விடுதலைப் புலிகளும், இந்நாட்டில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பரந்த எதிர்பார்ப்புகளையும், தேதவைகளையும் உதாசீனப்படுத்தியே செயற்பட்டு வந்துள்ளார்கள். அரசாங்கம் ஒரு பல்லினப்பாங்கான சமஷ்டி அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்தி இப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் அடிப்படையை ஏற்படுத்தக் கடமைப்பாட்டுடன் செயற்படத் தயாராக இருக்கின்றதா? சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை உத்தரவாதப்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட சிங்கள, பௌத்த சக்திகளின் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட அரச கட்டமைப்பை நிராகரிக்கத் தயாரா? என்பது இன்னும் விடை காணப்பட வேண்டிய கேள்வியாகவே தொடர்கின்றது. மறுபுறம் தனது தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு மாற்றுத்தீர்வை இனம் காண விடுதலைப் புலிகள் தயாரா? அவர்களது அந்தத் தயார் நிலையை இந்நாட்டு (அரசாங்கமல்ல) மக்கள் நம்பக்கூடியவகையில் பிரகடனப்படுத்துவார்களா? அல்லது விடுதலைப் புலியினர் மாற்றுத்தீர்வை அணுகத் தயார் என வெறும் வார்த்தைகளில் மட்டும் கூறிக்கொண்டிருக்கும் அவர்களின் கூற்றை இந்நாட்டின் மக்கள் பரீட்சித்துப் பார்க்கக்கூடிய அரசியல் சூழ்நிலையை உருவாக்க இவ்வரசு தயாரா? இனமுரணபாடு அரசியல் ரீதியில் தீர்க்கப்பட வேண்டுமேயானால், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருசாராரும் மிகத் தெளிவான முறையில் தமது கடமைப்பாடுகளை மக்கள் நம்பக்கூடியவகையில் முன்வைப்பது தவிர்க்க முடியாத வியடமாகும். அப்படி இவ்விருசாராரும் முன்வராவிட்டால் மக்களின் கதி என்ன?

இவ்வரசு ஒன்றும் செய்யாது என்று இதன் காலத்தை இப்படியே ஓட்டிவிட்டு அடுத்த அரசு வரும்வரை பார்த்துக்கொண்டிருப்பதா? அல்லது மாறி மாறி வருகின்ற எந்த ஒரு அரசாங்கமும் இப்பிரச்சினையைத் தீர்க்காது. எனவே பிரிந்து செல்வதுதான் ஒரே வழி என்ற அடிப்படையில் பாரிய அழிவுகளுக்கு வழிவகுக்கக்கூடிய நீண்டகாலப் போராட்டமான தமிழ் ஈழத்திற்கு ஆதரவளிப்பதா? அல்லது இராணுவத்திற்கு ஆள் திரட்டக்கூட முடியாமல் அரசு திக்குமுக்காடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் யுத்தத்திற்கு எதிராகவும், அரசியற் தீர்விற்கு சார்பாகவும்நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற மக்கள் சக்தியுடன் ஒவ்வொருவரும் நம்பிக்கையுடன் ஒன்றிணைந்து இந்நாட்டின் பல்லின அரசியல் பரிமாற்றத்திற்கான சுதந்திரமான மக்களின் நிகழ்ச்சிநிரலையும் செயற்திட்டங்களையும் தயார் செய்து பிரசைகள் என்ற வகையில் எமது கடமைகளை நிறைவேற்ற முன்வருவதா? இவைதான் இந்நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் முன் உள்ள கேள்விகள்.

இன முரண்பாட்டிற்கான அடிப்படைக் காரணிகளுக்குத் தீர்வைக் காணாமல் அதன் விளைவுகள் தீரப்போவதில்லை. யுத்தத்திற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை இனம்கண்டு அவற்றிற்குத்தீர்வுகாணாமல் யுத்தம் நின்றுவிடப் போவதுமில்லை''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் - 12
## உங்களுக்குமிடையே...

*பொறுப்புணர்வும் சுதந்திரமும்*

குழந்தைகளுக்குப் பொறுப்புணர்ச்சியைப் போதிப்பதற்கான வழிவகைகளை எல்லாப் பெற்றோர்களும் தேடுகிறார்கள். பெரும்பாலான குடும்பங்களில், நாளாந்தம் செய்யப்படும் செயல்கள்மூலம் இந்தப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியும் என்று எதிர்பார்ப்பு நிலவுகிறது. குப்பைக் கூடைகளை துப்புரவு செய்தல், முற்றத்துப் புற்களை வெட்டி மட்டமாக்கல் என்பவற்றில் பையன்களைப் பொறுப்புள்ளவனாக்குவது பயனுள்ளது என்று கருதப்படுகிறது. பாத்திரங்களைக் கழுவுவது, கட்டிலைத்தட்டி விரிப்பது போன்றவை சிறுமிகளுக்கு பொறுப்புணர்ச்சியின் அடிப்படைகளை ஏற்படுத்திக் கொள்ள அவசியமான வேலைகள் என்று நம்பப்படுகிறது. ஆனால்நடைமுறையில் இத்தகைய விடயங்கள், (சிலவேளைகளில் வீட்டை ஒழுங்காக நிர்வகிக்க உதவக்கூடுமே ஒழிய) குழந்தைகளின் பொறுப்புணர்ச்சியில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. மாறாக, இத்தகைய நாளாந்த வேலைகள், நாளாந்த சச்சரவுகளிலும், இச்சச்சரவுகளினால் பெற்றோர்களும், பிள்ளைகளும் ஆத்திரமும் எரிச்சலும் அடைவதிலுமேயே கொண்டு போய் விடுகின்றன நாளாந்த வேலைகளைப் பலவந்தமாகவேனும் செய்வித்து விட முயல்வது ஒருவேளை கீழ்ப்படிவையும் சுத்தமான அடுப்படிகள் மற்றும் முற்றங்களைப் பெற்றோருக்குத் தரக்கூடும். ஆனால், குழந்தைகளின் இயல்புருவாக்கத்தில் இவை மிகவும் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

பொறுப்புணர்ச்சி என்பது ஒருபோதும் திணிக்கப்படக் கூடியதல்ல. இது ஒரு வெளிப்படையான உண்மை. அது குடும்பத்தினதும், சமூகத்தினதும் பெறுமானங்கள் உள்வாங்கப்படுவதாலும், ஊட்டப்படுவதாலும் ஒருவருக்கு உள்ளிருந்தே வளர்ந்து வரும் ஒன்றாகும். சமூகத்தின் நேர்ப்படியான பெறுமானங்களுடன் (Positive Values) இணைக்கப்படாத பொறுப்புணர்ச்சியானது சமூக விரோதத்தன்மை கொண்டதாயும், அழிவுத்தன்மை வாய்ந்ததாகவும் அமைந்து விடும். சமூக விரோத குண்டர் படையினர் கூட தமது கூட்டத்திலுள்ள தமது சகாக்களுடனும், தமது கூட்டத்துடனும் மிகுந்த கட்டுப்பாட்டோடும் பொறுப்புணர்ச்சியோடும் பழகுகிறார்கள். உதாரணமாக மாஃபியா அமைப்பின் உறுப்பினர்கள் தமது கடமைகளை உயிரிலும் மேலாகக் கருதி நிறைவேற்றுகிறார்கள். அவர்கள் உத்தரவுகட்குக் கீழ்ப்படிகிறார்கள்; தமது சக உறுப்பினர்கட்கு சட்ட உதவி செய்கிறார்கள்; கைதாகிவிட்ட தமது சகாக்களின் குடும்பங்களைப் பராமரிக்கிறார்கள்.

### *பொறுப்பான பொறுப்புணர்ச்சி*

குழந்தைகள் பொறுப்புணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அதேவேளை அவர்களது பொறுப்புணர்ச்சியானது, மனித நலன்களின் அடிப்படையிலிருந்து எழுந்து வருகின்ற, வாழ்வுக்கு மதிப்பளிக்கின்ற ஒன்றாக அமைய வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். மிகவும் பரிச்சயமான வார்த்தைகளில் சொல்வதானால், பொறுப்புணர்வு என்பது, மனித உயிர், சுதந்திரம் என்பவற்றுக்கு மதிப்புக்கொடுத்தலை அடிப்படையாகக் கொண்டதாகவும், சந்தோஷத்தைத் தருவதாகவும் அமையவேண்டும். ஆயினும், நாம் பொதுவாக பொறுப்புணர்ச்சி குறித்து அதன் பரந்த அர்த்தங்களில் சிந்தித்துப் பார்ப்பதில்லை. பொறுப்புணர்ச்சி என்று நாம் கருதுவதெல்லாம் எமது குழந்தையின் குப்பையாகக் கிடக்கும் அறை, பாடசாலைக்கு ஒழுங்காகப் போவதில் சிரத்தையற்று இருப்பது, ஒழுங்கற்ற வீட்டுவேலைகள், பியானோ வகுப்புக்கோ மாலைநேர சங்கீத வகுப்புக்கோ செல்ல பஞ்சிப்படுதல், கீழ்ப்படியாத தன்மை அல்லது கூடாத பழக்க வழக்கம் என்பவற்றில் தங்கியுள்ள ஒன்று என்று தான்.

ஆனால், பொறுப்புணர்ச்சி என்பது இவற்றினால் மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல. குழந்தைகள் அமைதியானவர்களாகவும் தம்மையும் தமது அறைகளையும் சுத்தமாக வைத்திருப்பவர்களாகவும் தமக்கு வழங்கப்படும் வேலைகளை நேர்த்தியாகச் செய்து முடிப்பவர்களாவும் இருக்கலாம். இவ்வளவும் செய்யும் அதேவேளை பொறுப்பற்ற முடிவு எடுப்பவர்களாகவும் அவர்கள் இருக்கக் கூடும். இது பெரும்பாலும் என்ன செய்ய வேண்டும் என்று அடிக்கடி அறிவுறுத்தப்படும் குழந்தைகளிடம் காணப்படுகிறது. ஏனென்றால் அவர்களுக்கு தமக்குத் தேவையான ஒன்றைத் தாமே தெரிவு செய்வதற்குத் தேவையான முடிவைத் தாமே எடுப்பதற்கும், அது தொடர்பான தமது ஆற்றலை வளர்த்துக்கொள்வதற்கும் வாய்ப்புக்கிடைப்பதில்லை. அவர்களுக்காகப் பிறரே முடிவுகளை எடுக்கிறார்கள். நாம் குழந்தைகட்கு வழங்கும் அறிவுறுத்தல்கள் தொடர்பான குழந்தைகளின் உள்ளத்திலெழும் எதிர்வினை உணர்வுகள் மிகவும் முக்கியமானவை. ஏனென்றால், அவை தான் நாம் குழந்தை தெரிந்து கொள்ள வேண்டுமென விரும்பியவற்றில் எவ்வளவு விடயங்களை அது கற்றுக் கொள்கிறது என்பதைத் தீர்மானிக்கின்றன. மனித சமூகப் பெறுமானங்கள் நேரடியாகக் கற்பிக்கக் கூடியவையல்ல. அவை குழந்தையின் அன்பைப் பெற்றுக் கொண்டுள்ள மனிதர்களைப் பின்பற்றுவதன் மூலமாகவும், அவர்களை அடையாளங்கண்டு கொள்வதன் மூலமாகவும் குழந்தைகளின் உருவாக்கத்தின் ஒரு பகுதியாக உள்வாங்கப்படுகின்ற விடயங்களாகும்.

ஆகவே, குழந்தைகளின் பொறுப்புணர்வு பற்றிப் பேசுவதென்பது அவர்களது பெற்றோர்கள் பற்றிப் பேசும் ஒன்றாகி விட்டது. இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் குழந்தை வளர்ப்பு நடைமுறைகளின் போது பெற்றோர்கள் வெளிப்படுத்தும் தம்பற்றிய பெறுமானங்கள் குழந்தைகளின் பொறுப்பீனத்திற்கும் பொறுப்பாகி விடுகின்றன. ஆக, நாம் கவனத்திலெடுக்க வேண்டிய இப்போதைய கேள்வி இதுதான்: ''எமது குழந்தைகளிடம் பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஏதாவது தெளிவான வழிமுறை அல்லது அணுகுமுறை இருக்கிறதா?''

குழந்தைகளின் பொறுப்புணர்ச்சியானது பெற்றோரது போக்கு, செயற்திறன் என்பவற்றுடன் ஆரம்பமாகிறது. பெற்றோரது போக்கு என்னும் போது, அது குழந்தைகள் தமது எல்லா உணர்வுகளையும் உணர்வதற்கு அக்கறையுடன் அனுமதிக்கும் போக்கையும் உள்ளடக்கியதாகும். அதேபோல் செயற்திறன் என்கிற போது, அது குழந்தைகள் தமது உணர்வுகளை நடைமுறைப்படுத்துகையில் எப்படி ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் அதை நடைமுறைப்படுத்தலாம் என்று செயல் முறை மூலமாக விளக்கும் ஆற்றலையும் உள்ளடக்கியதாகும்.

இந்த இரு அவசியமான விடயங்களையும் கொண்டிருப்பதில் உள்ள சிரமம் மிகவும்பெரியது. எமது பெற்றோர்களோ ஆசிரியர்களோ உணர்வுகளை எதிர்கொள்ளுவதற்குப் போதுமான பயிற்சியை எமக்கு அளித்ததில்லை. அவர்களும் தாமே பலமான உணர்வுகளை சமாளிப்பது எப்படி என்பதை அறிந்திருக்கவில்லை. குழந்தைகளது கொந்தளிக்கும் உணர்வுகளை எதிர்கொள்ள வேண்டிவரும் போது அவர்கள்



## ஓடும் ஆற்றை நிறுத்திவிட முடியாது!

குழந்தைகளது உணர்வுகளை மறுத்துரைக்கவோ அவர்களைப் பொறுப்பற்றவர்களாக்கவோ; அடக்கவோ அல்லது அவர்களது உணர்வை அழகுபடுத்தவோ முற்படுகிறார்கள். இதற்கு அவர்கள் பாவிக்கும் சொற்கள் பெரும்பாலும் பயனற்றவையாக அமைந்து விடுகின்றன.

**மறுத்துரைத்தல்:** உனக்கு நீ என்ன சொல்கிறாய் என்றே விளங்கவில்லை; நீ அதன் அர்த்தத்தை விளங்கிக்கொண்டு சொல்லவில்லை. நீ உனது சகோதரனை எவ்வளவு தூரம் விரும்புகிறாய் தெரியுமா?''

**பொறுப்பற்றதாக்கல்:** '''உது நீ அல்ல. உனக்குப் பிடிச்சிருக்கிற பேய் தான் உன்னை உப்பிடிச் செய்ய வைக்கிறது''

**அடக்குதல்:** ''உந்த மாதிரி அவனை 'வெறுக்கிறேன்' என்று இன்னொரு தடவை சொன்னியோ, உனக்கு மரண அடி நடக்கும்... ஒரு நல்ல பிள்ளை ஒரு போதும் இந்த மாதிரி நினைப்பதில்லை''

**அழகுபடுத்தல்:** நீ உண்மையில் உனது சகோதரனை வெறுக்கவில்லை. சில வேளை உனக்கு அவனில் விருப்பமில்லாமல் இருக்கலாம். நீ அந்தப் பக்கமாக நினைச்சுப்பார்....

ஓடும் ஆற்றை நிறுத்தி விட முடியாது. வேண்டுமானால் அதன் திசையை மாற்றி ஓடவைக்க முடியும். அதுபோல்தான் உணர்ச்சிகளும் அவற்றை ஒருபோதும் நிறுத்திவிட முடியாது. மேற்கூறிய உதாரணங்கள் இந்த அடிப்படை உண்மையை கவனத்தில் எடுக்கவில்லை. உண்மையில் கடுமையான உணர்வுகள் மிஸ்ஸிஸிபி நதியில் பொங்கியெழும் நீர் போன்றவை. மறுக்கப்படவோ, காரணம் கூறப்படவோ, அல்லது அதைப்பற்றிப் பேசாமல் இருக்கவோ கூடியன அல்ல. அவற்றை கணக்கிலெடுக்காமல் விடுவது என்பது பெரும் ஆபத்துகட்கு இட்டுச்செல்லக் கூடும்.

குழந்தைகளது உணர்வுகள் கணக்கெடுக்கப்பட வேண்டும். அவற்றின் சக்தி மதிக்கப்பட வேண்டும். அவை கௌரவத்துடன் அணுகப்பட்டு திசைதிருப்பப்பட வேண்டும். இவ்வாறு உணர்வுகள் ஆற்றுப்படுத்தப்படுமானால், அவர்கள் எமது இருப்பிற்கு புத்துயிரூட்டுபவர்களாகவும் வாழ்வில் மகிழ்ச்சியையும் ஒளியையும் தருபவர்களாகவும் அமைவர்.

இவையெல்லாம் பெரிய இலட்சியங்கள், எம்மிடம் இன்னமும் அதே கேள்வி இருக்கிறது. நாளாந்த நடைமுறையையும் எமது வியப்புக்குரிய இலக்குகளையும் இணைப்பது எப்படி? நாம் எங்கிருந்து தொடங்குவது?

### *நீண்டகால குறுகிய கால திட்டங்கள்:*

இந்தக் கேள்விக்கான பதில் நீண்டகால குறுகிய கால முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களை உருவாக்குவதில்தான் தங்கியுள்ளது. உடனடியாக நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், குழந்தைகளின் இயல்புருவாக்கத்திற்கான கல்வி என்பது எமக்கும் அவர்களுக்கும் இடையிலான உறவில் தான் தங்கியுள்ளது என்பதே. இயல்புருவாக்கம் என்பது ஒரு போதும் சொற்களினூடாக உருவாக்கப்பட முடியாத ஒன்றாகும்; செயல்முறை மூலமாகவே உருவாக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகாலத் திட்டத்தின் முதலாவதுபடி, குழந்தைகள் தமக்குள் எதை உணர்கிறார்கள், சிந்திக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதில் நாம் ஆர்வம் காட்டவேண்டும் என்று உறுதி செய்து கொள்வதாகும். இது மிகவும் முக்கியமானதாகும். ஏனென்றால் அவர்களது வெளிப்படையாகத் தெரியும் குளப்படிகள் மற்றும் செயல்களை மட்டும் கவனத்தில் எடுப்பது போதுமான ஒன்றல்ல.

குழந்தைகள் தமக்குள் என்ன நினைக்கிறார்கள், உணர்கிறார்கள் என்று அறிந்து கொள்வது எவ்வாறு?

இதைப்புரிந்துகொள்வதற்கான அடையாளங்களை அவர்கள் எமக்கு வெளிப்படுத்துகிறார்கள். தமது உணர்வுகளை சொற்களினூடாக, தொனிகளினூடாக, நடந்துகொள்ளும் முறைமைகளினூடாக, தாம் காட்டும் பாவனைகளினூடாக அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

எமது உள்ளார்ந்த கோட்பாடாக இருக்க வேண்டியது இதுதான்: நான் இவர்களைப் புரிந்துகொள்ள வேண்டும்; நான் புரிந்து கொள்கிறேன் என்பதை இவர்களுக்குக் காட்ட வேண்டும். இவற்றை அவர்களை விமர்சிக்காத அல்லது மட்டம் தட்டாத வார்த்தைகளின் மூலமாக வெளிப்படுத்த வேண்டும்.

ஒரு குழந்தை பாடசாலையிலிருந்து அமைதியாக, ஆறுதலாக, நடந்துவரும் போதே அதற்கு ஏதோ விரும்பத்தகாத சம்பவம் நடந்து விட்டது என்பதை அதனது காலடிகளை வைத்தே நாம் புரிந்து கொள்ள முடியும். நாம் எமது உள்ளார்ந்த கோட்பாட்டின் அடிப்படையில் நடப்பதானால் எமது உரையாடலை இப்படி ஆரம்பிக்கக் கூடாது.

''எதுக்கு இந்த மூஞ்சை....''

''என்ன முகம் ஒரு மாதிரி இருக்கு''

''என்ன நடந்தது.. உன்ரை நண்பர்களில் ஒருவருடன் கோபமா?''

''இன்றைக்கு என்ன செய்திட்டு வாறீர்?''

''இன்றைக்கு என்ன பிரச்சினை?''

குழந்தையின் உள்ளக எதிர்வினை பற்றி அதிகளவு அக்கறை கொண்டவர்கள் என்ற முறையில் நாம் மனதில் வெறுப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தக் கூடிய வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். முழு உலகமும் அழிந்து போய்விட வேண்டும் என குழந்தையை நினைக்க வைக்கக்கூடிய அபிப்பிராயங்களை நாம் தவிர்த்து விட வேண்டும்.

பதிலாக, பெற்றோர்கள் அதைப் புரிந்து கொள்கிறோம் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் இவ்வாறு கூறலாம்:

''உங்களுக்கு ஏதோ விரும்பத் தகாதது நடந்து விட்டது.''

''இன்றைக்கு உங்களுக்கு அவ்வளவு நல்ல நாளாக இல்லைப் போல்''

''இன்றைக்கு ஒரு கஷ்டமான நாள் என்ன?''

''யாரோ உங்களுக்கு இன்றைக்கு கஷ்டம் கொடுத்து விட்டார்கள்''

இத்தகைய அபிப்பிராய வார்த்தைகள், ''உங்களுக்கு என்ன நடந்தது'', ''உங்களுக்கு என்ன ஆயிட்டுது?'' என்று கேட்பதை விடவும் வரவேற்கத்தக்கவை. கேள்விகள் எப்போதும் விருப்பு அறியும் ஆவலையே வெளிப்படுத்துகிறது. ஆனால், அபிப்பிராயங்கள் ஆதரவை வெளிப்படுத்துகின்றன.

ஒரு குழந்தை தான் வாழ்கின்ற தனது வாழ்வின் அனுபவங்களிலிருந்தே கற்றுக் கொள்கிறது. இந்த உண்மையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. அது விமர்சனங்களுக்கு மத்தியில் வாழுமாயின் ஒரு போதும் பொறுப்புணர்வைக் கற்றுக் கொள்ள முடியாது. அது தன்னைத் தானே இகழவும், பிறர் மீது பிழை பிடிக்கவும் மட்டுமே கற்றுக்கொள்ளும். அது தனது சொந்த முடிவுகளையிட்டு சந்தேகம் கொள்ளத் தொடங்குகிறது. தனது சொந்தத் திறமையின் மீது ஐயம் கொள்கிறது. அது மட்டுமல்ல மற்றவர்களது நோக்கங்கள் மீதும் நம்பிக்கை கொள்ளத் தொடங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அது ஒரு தொடர்ச்சியான அச்சுறுத்தலை எதிர்பார்க்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளத் தொடங்குகிறது.

வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# 'சிகின தேசயென்' சிங்களத்தில் முதலாவது பரிசோதனைத் திரைப்படம்

நம்பினால் நம்புங்கள். லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸக்குப் பிறகு என்னைப் பாதித்த சிங்கள திரைப்பட இயக்குனர் இளைஞரான விஷ்வநாத் புத்திக கீர்த்திசேன தான். இடையில் வந்த பராக்கிரம நிரி எல்ல, தர்மசேன பத்திராஜா, வசந்த ஒபயசேகர, பிரேமரத்ன முதலியோர் நல்ல திரைப் படங்களைத் தந்தபோதும் லெஸ்ரரின் சினிமா பாதித்த அளவுக்கு என்னைப் பாதித்ததில்லை.

பாரிஸிலிருந்து லெஸ்ரறே இந்தப்படத்தைப்பற்றி சிலாகித்து எழுதுகிறார். அரைநூற்றாண்டு கால சிங்கள சினிமா வரலாற்றில் புத்திகவின் முதல் முயற்சியான இந்த 'சிகின தேசயென்' தான் முதலாவது பரிசோதனைத் திரைப்படம். (Experimental Film)

மேலும் புத்திகவில் டிரக் ஜாமன் (Derek Jarmon) பீற்றர் கெப்நவா (Peter Geffnawa) முதலிய திரைக்கலைஞர்களினதும் இலங்கையருக்கு அதிகம் அறிமுகமில்லாத பியூம் மற்றும் பேமன் (Feuim and Berman) முதலியவர்களினதும் பாதிப்பை லெஸ்ரர் இனங்காண்கிறார்.

பாரம்பரியமான கதையோட்டம் எதுவும் இச்சினிமாவில் கிடையாது. அப்படிக் கதை சொல்கிறதானால் இது விரகதாபத்திலும் காமத்திலும் வாழ்வைக் காணும் ரஜித போன்ற மாந்தரின் கதை. மரணத்தினால் வாழ்வின் நிலையாமை இருக்க ஆன்மீக தத்துவத்தேடலில் ஈடுபடும் சரிதவின் கதை. மூன்றாம் உலக நாட்டு நாடக குழு ஒன்றினால் காலனித்துவ ஆட்சிக்காலத்து கதையொன்றை அடிப்படையாகக்கொண்ட நாடகமொன்றை மேடையேற்ற முயல்கிற போது அவர்கள் எதிர்கொள்கிற பிரச்சினைகள் பற்றிய கதை என்று சொல்லிக்கொள்ளலாம்.

அரங்க மேடையில் வாழ்வின் சந்தோஷங்களையும் (Fantasy) நாம் வாழுகின்ற சமூகத்தில் அதன் யதார்த்தத்தையும் கொண்டு மூன்றாம் உலக நாடுகளில் நிலவுகிற, ஆன்மீக, காம ரீதியான பொருளாதார, அரசியல், இனத்துவ, குடும்பப் பிரச்சினைகளை கலாரீதியாகப் பதிந்து ஒரு உன்னத திரைக்காவியத்தை சிருஷ்டிக்க புத்திக முயன்றுள்ளார்.

இசை இப்படத்துக்கு மேலும் மேலும் மெருகூட்டியுள்ளது. பல நல்ல சிங்களப் படங்களில் இசை துருத்திக் கொண்டு நிற்க இதில் அப்படி அல்ல. ஒரு முறை மட்டுமே இப்படத்தைப்பார்க்கக் கிடைத்த எனக்கு அதன் துல்லியத் தன்மையை மொழியால் இங்கு விளக்க முடியவில்லை.

படம் முழுவதுமே ஒரு அமெரிக்க ஐரோப்பியத்தன்மை ஊடோடி நிற்பதை உணருகிறேன். விருந்தில் பரிமாறிய உணவுகளிலும் சமையலறையில் தப்பி உணவுக்கூடத்துக்கு வரும் பன்றியை சமையல்காரர் கத்திகளோடு துரத்துவதிலும், வைனிலும் பியரிலும் அமெரிக்க நடிகை மொலி காஸ்ரெலொவுக்கும் பாலித சில்வாவுக்கும் இடையில் உயிரோட்டமாக நடக்கும் உடல் உறவு Posture இலும்..... அதற்காக நம்ம ஊர் வாசம் இல்லை என்று சொல்லவரவில்லை. நாடகக்காரருக்கு பிளேன்ரீ குடுக்கும் நொண்டி பிளேன்ரீயைக் கொண்டு நொண்டி நொண்டி வருகிற கட்டம் என்னை உருக்கியது. கடைசியில் அதே நொண்டி தன் வாழ்வின் அவலங்களைச் சொல்லி நாடகநெறியாளருடன் நம்ம நாட்டு சாராயம் குடிக்கிறதும்... புத்திக ஒரு அற்புதமான கலைஞனாக ஒரு நாள் வருவான்.

மீளவும் மீளவும் பார்க்க விளைகின்ற அவாவில் அடுத்தமுறை ரீகல் படமாளிகைக்குப் போனால் அடுத்த படம் வந்து விட்டது. ஏமாற்றத்தோடு திரும்பினேன். அமெரிக்காவில்சினிமாற்றோகிராபி கற்ற புத்திக கீர்த்திசேன George Cafferomias ஆங்கிலத்தில் எழுதிய Veils of maya என்ற ஸ்கிறிப்ரைக் கொண்டு சிங்களத்தில் சுகதபால டி சில்வாவினால் எழுதப்பட்ட ஸ்கிறிப்ரைக் கொண்டு இயக்கியுள்ளார். உள்ளூரிலும் வெளியூரிலும் பல பிரமிக்கத்தக்க விருதுகளைப்பெற்றுள்ள இத்திரைப்படம் இந்தியாவில் 1995ம் ஆண்டு நடைபெற்ற 26வது சர்வதேச திரைப்பட விழாவில் இலங்கையை கௌரவமாகப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

மசாலாப் பட ரசிகர்கள் பலர், ஒரு எக்ஸ் சான்றிதழ் பட எதிர்பார்ப்போடு இப்படத்தில் வருகிற ஒரு சில 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' காட்சிகளுக்காக இதனைப் பார்த்துள்ளனர். பேராதனை வளாகத்தில் எந்திரவியல் கற்கும் தமிழ் மாணவர்கள் அனைவரும் சகோதர இன மாணவர்களது சிபாரிசுடன் இதனை ரசித்துள்ளனராம். ஒரு உன்னத திரைப்படம் இவ்வாறு அடையாளப்படுத்தப்படுவது மிகுந்த கவலையளிக்கின்றது. லெஸ்ரரே கூறுகிறார் இலங்கையின் சிங்கள திரைப்பட விநியோக அமைப்பினால் 'சிகின தேசயென்' 'எகே வைரயவுடன்' போட்டி போடவேண்டியிருக்கிறது.

*நட்சத்திரன் செவ்விந்தியன்*

# தினகரன்: அரசின் ஊதுகுழலா?

1996 - 07 - 11ஆந் திகதிய, 'தினகரன்' மாகாணப் பதிப்பின் ஆசிரியர் தலையங்கத்தில் ''இலங்கையில் பிரதானமாக இரண்டே இரண்டு தேசிய இனங்களே வாழ்கின்றன'' என தினகரன் குறிப்பிட்டிருந்தது. இச்செய்தியானது, பிரதான தேசிய இனங்களில் ஒன்றான இலங்கை முஸ்லிம் சமூகத்தை, ஆழ்ந்த அதிர்ச்சிக்கும், விசனத்திற்கும் ஆளாக்கியுள்ளது.

ஓர் இனக்குழுவை அல்லது தேசிய இனத்தை அடையாளப்படுத்திக் கொள்ள, இனத்துவ ஆய்வுக்கோட்பாட்டு ரீதியான அளவுகோலாக, மொழி மாத்திரம் இல்லை என்பதை தினகரன் அறிய வேண்டும். ஓர் இனக்குழு வரலாறு, மதம், கலாசாரம், தனித்தன்மை, ஏனைய இனக்குழுக்களின் அடையாளப்படுத்தல், பின்னணிப் பிரதேசம் - மொழி போன்ற பலதரப்பட்ட வெளிப்பாடுகளின் ஊடாக, தன்னை இனங்காட்டிக்கொள்கிறது. இவ்வகையில், இத்தேசிய இனத்துவ அடையாளம் யாவும், இலங்கை முஸ்லிம்களுக்கும் உண்டு என்பதை தினகரன் உணர வேண்டும். முஸ்லிம்கள் தேசிய இனங்களில் ஒன்று என்பதை தினகரனோ வேறு பத்திரிகைகளோ இருட்டடிப்புச் செய்யவோ மறுத்துரைக்கவோ முடியாது.

நிலைமை இவ்வாறிருக்க, முழுப் பூசனிக்காயை பகல் வேளையில், சோற்றில் புதைத்த கதைபோன்று தினகரன் கருத்து வெளியிட்டிருப்பது, திட்டமிட்டு வலிந்தே தேசிய இனமாகிய முஸ்லிம்களை வேறு ஓர் இனக்குழுவுக்குள் அடக்க முற்படும் நடவடிக்கையாகும். இது தினகரன் கருத்தா அல்லது அரசகட்டுப்பாட்டுக்குள் இருக்கும் 'தொடர்பூடகம்' ஒன்றின் தான்தோன்றித்தனமான செயலா என்பதை முஸ்லிம்கள் அறிந்து கொள்ள விரும்புகின்றனர்.

இவ்வாறான நச்சு விதைகள், குறிப்பாக முஸ்லிம் இனத்துக்கு எதிராக 1885இல் சட்டசபையிலும், 1888 - 04 - 26ஆந் திகதி அரச ஆசிய கழகத்தின் (இலங்கைக் கிளை) முன்னிலையில் சேர் பொன். இராமநாதன் போன்றோரால் முன்வைக்கப்பட்ட போது முஸ்லிம்களின் நம்பிக்கை அனைத்துமே, பிறிதொரு சிறுபான்மை மகனால் சிதறடிக்கப்பட்டது. அதனை அன்று முஸ்லிம் தலைவர்களாக இருந்த அறிஞர் சித்தி லெவ்வை, ஐ.எல்.எம். அஸிஸ், பின்னர் அறிஞர் ஏ.எம்.ஏ. அஸிஸ் போன்றோர் நிராகரித்து, முஸ்லிம்களின் பிரத்தியேக தனித்தன்மையை தெளிவுப்படுத்தியதை வரலாறு தினகரனுக்கு புகட்டியிருக்க வேண்டும்.

அரசகட்டுப்பாட்டு தொடர்பூடகங்களில் ஒன்றாகிய தினரகன் நாளிதழ், முஸ்லிம் இனத்தின் வரலாற்றை இருட்டடிப்பு செய்து அச்சமூகத்தை பழிவாங்க எத்தனிப்பது, கடந்த காலங்களில் திட்டமிட்ட தொடர்பூடக செயற்பாட்டின் ஊடாக சகோதர தமிழ் சமூகம் புறக்கணிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டதை முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி தமிழ் சமூகத்திற்கும் நினைவூட்டும் படிப்பினையாக அமைய வேண்டும்.

தினகரன் இலங்கையின் பல்லினத் தன்மைக்குச் சாவுமணி அடித்திருப்பது அதனால் வெடித்துப் புரையோடிப் போயிருக்கும் இனப்பூசலையும் கண்டு கொள்ள முடியாதது போன்று கருத்துக் கூறியிருப்பது இலங்கை முஸ்லிம்கள் தரப்பில் சந்தேகத்தையும், மனக்கிலேசத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தவிரவும் ஜனநாயகம், பத்திரிகைச் சுதந்திரம் பற்றி பேசும் தினகரன் தேசிய இனம் ஒன்றை இழிவு படுத்தியிருப்பது பத்திரிகைச் சுதந்திரத்தின் அடித்தளத்தையே பெயர்த்தெறிவதாக அமைந்துள்ளது.

முஸ்லிம்களின் கருத்துச் சுதந்திரத்தை வெளியிடுவதற்கு ஒரு மூலம் இல்லையே என்ற குறைபாட்டை தினகரன் பத்திரிகை நிறைவு செய்வதாக பலரும் கூறிக்கொள்கின்றனர். இருந்தும் பல்லின சமூகங்களினது பிரதிநிதிகள் சேவையாற்றும் இப்பத்திரிகையில் அவர்கள் எல்லோருடைய கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு முஸ்லிம்களது வரலாற்றில் மாசு கற்பித்து இருப்பது வரலாற்றில் மறக்க முடியாத குற்றமேயாகும்.

இவ்வாசிரியர் தலையங்கம் வெளியிடப்பட்டு மாதம் ஒன்றாகியும் முஸ்லிம் அரசியல் கட்சிகளோ, முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகளோ, முஸ்லிம் சமூகநல அமைப்புகளோ இப்பிழையினைச் சுட்டிக்காட்டி பத்திரிகைகளில் மறுப்பறிக்கை விடாமல் மௌனிகளாக இருந்து கொண்டிருப்பது அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் தரும் விடயமாகும். எனவே தவறுகளைத் திருத்துவதும், மாற்றுக் கருத்துக்களுக்கு தளம் அமைத்துக் கொடுப்பதுமே பத்திரிகா தர்மமாகும், 'நீதி தூங்கவும் கூடாது. அநீதி விழிக்கவும் கூடாது'.

*-அக்கரையூர் பைஉலெ*

## புலநானூறு

# பண்பாட்டு உசாவலில் சில உட்கூறுகள்

உலகில் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் தங்களது கலை கலாசாரங்களைப் பாதுக்காக்கிறார்கள் என்று யாராவது உங்களிடம் சொன்னால், அதை நீங்கள் நம்புவதும் நம்பாமல் விடுவதும் உங்கள் விருப்பம். ஆனால் சீதனம் வாங்குவது தமிழர்களது கலாசாரம் என்று நீங்கள் நம்புவீர்களாயின், தமிழர்கள் தமது கலாசாரத்தைக் காப்பாற்றுகிறார்கள் என்று ஜோராகவே நம்பிக் கொள்ளுங்கள்.

தமிழர்கள் புலம்பெயர்ந்ததில் நேர்ந்த இன்னொரு (நல்ல/கெட்ட) விஷயம், தமிழர்களது பணப்புழக்கம் ரூபாக்களில் இருந்து டொலர்கள், மார்க்குகள், பிராங்குகள் என்று ஆகியது. இதில் கொஞ்சம் காசுப் புழக்கம் அதிகம் உள்ளவர். ''அது மூண்டு முடிஞ்சுது'' என்று ஒரு விடயத்தைக் குறிப்பிடுவாராயின், அது வெறும் மூன்று ரூபாயோ, மூவாயிரம் ரூபாயையோ மாத்திரம் குறிப்பிடாது. பதிலாக மூன்று லட்சம் டொலர்களைக் குறிக்கக்கூடும். அல்லது மூன்று லட்சம் சுவிஸ் பிராங்குகளைக் குறிப்பிடக்கூடும். இந்தவிதமாகத் தமிழர்களது சீதனமும் வெளிநாட்டு நாணய மதிப்பில் ஒரு வரையறையைத் தாண்டிவிட்டது.

எனது நீண்ட நாள் நண்பர் ஒருவர் தனது வெற்றிகரமான திருமணம் பற்றிக் குறிப்பிட்டபோது, தனது சீதனம் இலங்கைக் காசில் முப்பது லட்சம் வரும் என்று போகிறபோக்கில் சொன்னார். எனக்குத் தெரிந்த மனக்கணக்கில் இந்தச் சீதனத்தைப்பிரித்துப்பார்த்தபோது அவர் தான் இருக்கும் நாட்டின் நாணயத்திலேயே லட்சக்கணக்கில் வாங்கியிருக்கிறார் என்பது புரிந்தது. ஆக, ஊரில் லட்சக்கணக்கில் வாங்கியவர்கள் இப்போது வெளிநாட்டில் லட்சக்கணக்கில் வாங்குகிறார்கள். ஊரில் இருப்பவன் சீதனம் வாங்குவதைவிட, ஏதாவது ஒரு வெட்டித்தனமான சாட்டுச் சொல்லி மன்னிக்கலாம் ஆனால், ஏற்கெனவே பல லட்சங்களைச் சேர்த்த ஒருவன் இப்படி வாங்குகிற போது அதனைப்புரிவது கஷ்டமாயிருந்தது.

எனது நண்பர் ஒருநாள் தனியே இருந்த போது, அவரது இடக்கைப் பக்கம் போயிருந்து, ஆறுதலாக ''மச்சான் உன்னட்டைக் காசிருக்கு, நீ சீதனம் வாங்காமற் கட்டலாம்தானே?'' என்றேன் பவ்வியமாக. அவரது பதில் என்னைத் தூக்கிவாரிப்போட்டது, ''எடேய் நான் ஆம்பிளையடா'' என்றார் நண்பர் நிதானமாக. அதனால் தானே ஒரு பெண்ணை இவருக்கு கட்டிவைத்திருக்கிறார்கள் என்று நான் யோசித்தபடியே இருந்தபோது, அவர் மேலும் சொன்னது என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. ''எனக்குக்காசு தேவையில்லை, உண்மைதான், ஆனால், நான் சீதனம் வேண்டாமென்று சொன்னால், என்னை ஆம்பிளையில்லையோ என்று சந்தேகப்படுங்கள்'' என்றார் நண்பர். இப்போது பிரச்சினையின் இன்னொரு பரிமாணமும் விளங்கத் தொடங்கியது. யாரோ ஒருவன் தான் ஆம்பிளை என்று நிரூபிப்பதற்காக, யாரோ ஒருவனை (வருங்கால மனைவியின் அண்ணன்/தம்பி/அப்பா) பிடித்து உலைக்கும் இந்த விஷயத்தை என்னமாதிரி எமது சமூகம் கட்டிக்காத்து வைத்திருக்கிறது என்பது புரியவில்லை.

இந்தச் சீதனம் பற்றிப் புலன்விசாரணை செய்யப் புகும் ஒருவர் சுவாரசியமான விஷயங்களையும் கண்டு பிடிக்கலாம்.

1. ஒரு ஆண் வாங்கும் சீதனத் தொகையினைப் பொறுத்து அவரது சமூகமதிப்பு இருக்கிறது. இதற்காகவே தாங்கள் வாங்கிய சீதனத்தைக் கூட்டிச் சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.

2. சீதனத் தொகையை நிர்ணயம் செய்வதில் மணமகனின் தாய் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறார் (அவர் எந்த நாட்டில் வசித்தாலும் இந்தக் கடமையை மட்டும் மகனுக்கு ஒழுங்காகச் செய்கிறார்) தப்பினாலும், சகோதரிகள் அதைச் செவ்வனே நிறைவேற்றுகிறார்கள்.

3. சீதனம் வாங்குவது ஒரு வில்லங்கமான விவகாரம் என நினைக்கும் சிலர், ''எனக்கு விருப்பமில்லை. ஆனா அவையள் தங்கடை மகளுக்குக் கட்டாயம் செய்ய வேணும் எண்டு நிண்டினம்'' என்று (வாக்குமூலம் மாறுபடலாம்) கூறித் தப்பித்துக் கொள்கிறார்கள்.

4. அகதியாக (கடைசித் தாக்குதல்களின்போது) ஓடிக்கொண்டிருக்கும் போது நிகழ்ந்த காதற் திருமணங்களுக்குக்கூடச் சீதனம் இங்கிருந்து அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

5. இன்னபிற

சட்டத்தால் அல்லது கொமிசன் வாங்குவதால் நிறுத்தப்படக்கூடிய ஒரு விவகாரமாகச் சீதனம் இருக்குமா என்பது இருபதாம் நூற்றாண்டின் கடைசி நாட்களிலும் கேட்கப்படும் ஒரு கேள்வியாய் போய்விட்டது. சீதனம் பெண்ணடிமைத்தனத்தை ஊக்குவிக்கிறது என்று கூறுகிறவர்கள் அடுத்த நூற்றாண்டிலும் அப்படியே கூறிக்கொண்டிருப்பார்கள். புலம்பெயர்ந்த தமிழன் கிரகம் பெயர்ந்து வேறு கிரகங்களில் குடியேறினாலும், தனது கலாசாரத்தைக் காப்பாற்றுவான் என்பதில் எந்தச் சந்தேகமும் எனக்கில்லை. உங்களுக்கு?



*அகதியான் பிரக்தியான்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பத்தாவது நாளில் புலிகள்

-ஸகரிய்யா தாமர்

நன்றி: புதிய நம்பிக்கை

அந்தக் கூண்டிலிருக்கும் புலியை விட்டு, காடுகள் வெகுதூரம் சென்று விட்டன. ஆனாலும், புலியால் காடுகளை மறக்க முடியவில்லை, தனது கூண்டைச் சுற்றி, சிறிதும் பயம் இல்லாமல் பார்த்துக் கொண்டு நிற்கும் மனிதர்களை கோபத்தோடு முறைத்துப் பார்த்தது.

அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவன், அமைதியான, அதே நேரம் ஒரு அதிகாரத் தொனியுடன் மற்றவர்களைப் பார்த்துப் பேசினான்; ''என்னைப் போல் நீங்களும் மிருகங்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சியாளனாக மாற விரும்பினால், ஒரு விஷயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் இந்த கடினமான தொழில் சுலபமான தொழிலாக மாறும்.''

''இந்தப் புலியைப் பாருங்கள். தன்னுடைய சுதந்திரத்தைப்பற்றி மிகவும் பெருமை கொண்டு கோபமாகவும் ஆக்ரோஷமாகவும் வளைய வருகிறது. இதையே ஒரு சிறு குழந்தையைப் போல் மென்மையாகவும், இணக்கமாகவும் மாற்ற முடியும். நன்றாக சாப்பிட்டுக்கொண்டிருக்கும் இந்தப் புலி, உணவின்றி இருக்க நேர்ந்தால் என்ன ஆகும் என்பதைக் கவனித்து அதிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.''

மிகுந்த மகிழ்வோடும், சிறிது கர்வத்தோடும் பயிற்சியாளன் புலியைப் பார்த்து, ''நமது விருந்தாளி எவ்வாறு இருக்கிறார்?'' என்று ஏளனமாக வினவினான்.

''என்னுடைய சாப்பாடு நேரம் வந்து விட்டது. எனக்கு சாப்பிடக்கொடுங்கள்'' என்றது புலி.

ஆச்சரியப்படுவது போன்ற பாவத்துடன் பயிற்சியாளன், ''என்னுடைய கைதியாக இருந்து கொண்டு எனக்கு கட்டளையிடுகிறாயா? என்ன ஒரு விளையாட்டு காட்டுகிறாய்? கட்டளையிட எனக்கு மட்டுமே அதிகாரம் உண்டு என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும்'' என்றான்.

''புலிகளுக்கு யாரும் கட்டளையிட முடியாது'' என்றது புலி.

''ஆனால் இப்போது நீ புலி அல்ல. காட்டில் வேண்டுமானால் நீ புலியாக இருந்திருக்கலாம். ஆனால், இப்போது கூண்டில் இருக்கிறாய்! நீ என் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் வெறும் அடிமை. என் விருப்பப்படி தான் நடக்க வேண்டும்.

''நான் யாருக்கும் அடிமையாக இருக்க முடியாது'' வெறுப்புடன் சொன்னது புலி.

''நீ எனக்கு கீழ்ப்படிந்துதான் ஆகவேண்டும். ஏனென்றால், உனக்கு வேண்டிய உணவு என்னிடம் தான் இருக்கிறது'' பயிற்சியாளன் பதில் சொன்னான்.

''நீ வைத்திருக்கும் உணவு எனக்கு வேண்டாம்.''

''அப்படியானால், உன் விருப்பப்படி பட்டினியாகக் கிட. நீ விரும்பாததைச் செய்யச் சொல்லி நான் கட்டாயப் படுத்தமாட்டேன்,'' என்றான் பயிற்சியாளன்.

பிறகு தன் மாணவர்களைப்பார்த்து, ''இந்தப் புலி எவ்வாறு, மாறப்போகிறது என்பதை நீங்களே பார்ப்பீர்கள். இதன் கர்வம் பசியுள்ள இதன் வயிற்றை நிரப்பாது,'' என்றான்.

புலி பசியோடிருந்தது. சுதந்திரத்தோடு தனது இரையைத் தேடி காற்றைப் போல் அலைந்து திரிந்த நாட்களை சோகத்தோடு நினைத்துக் கொண்டது.

இரண்டாவது நாளும் அந்தப் பயிற்சியாளன் தனது மாணவர்களோடு கூண்டைச் சுற்றி நின்று கொண்டு, ''உனக்கு பசிக்கவில்லையா? நிச்சயமாக பசிக்கும். பசி உன்னைக் கொடுமைப்படுத்தும். வலிக்கும். பசி என்பதை ஒப்புக்கொள். வேண்டிய மாமிசத்தை தருகிறேன்.'' என்றான்.

புலி அமைதியாக இருந்தது.

பயிற்சியாளன் மேலும் சொன்னான்: ''முட்டாள்தனமாக இருக்காதே. நான் சொல்வதைச் செய். உனக்கு பசி என்று சொல். உடனே உன் வயிற்றை நான் நிரப்புவேன்.''

''எனக்கு பசிக்கிறது.'' என்றது புலி.

பயிற்சியாளன் சிரித்தபடி தன் மாணவர்களைப்பார்த்து சொன்னான்: ''புலி வழிக்கு வந்து விட்டது. தன்னால் தப்பிக்கமுடியாத ஒரு பொறியில் அது மாட்டிக் கொண்டு விட்டது.''அவன் கட்டளைகளைப் பிறப்பித்தான். புலிக்கு நிறைய மாமிசம் கிடைத்தது.

மூன்றாவது நாள் பயிற்சியாளன் புலியைப் பார்த்து சொன்னான். ''இன்று உனக்கு உணவு வேண்டுமானால் நான் சொல்வதை நீ செய்ய வேண்டும்.''

''நீ சொல்வதை நான் செய்ய மாட்டேன்'' என்றது புலி.

''அவசரப்படாதே! நான் சொல்லும் வேலை மிகவும் சுலபம். நீ இப்போது இந்தக் கூண்டில் மேலும் கீழும் நடந்துகொண்டிருக்கிறாய். நான் 'நில்' என்றவுடன், நீ நிற்கவேண்டும்.'' என்றான்.

''இது உண்மையிலேயே சுலபமான வேலை தான். நான் பிடிவாதமாக இருக்கவும், பட்டினி கிடக்கவும் அருகதையில்லாத வேலை'' என்று தனக்குள் எண்ணியது புலி.

பிசிறில்லாத அதிகாரத் தொனியில் அந்தப் பயிற்சியாளன் கத்தினான், ''நில்''

உடனே புலி நின்றது.

சந்தோஷமான குரலில் ''நன்றாகச் செய்தாய், '' என்றான்.

புலிக்கும் திருப்தியாக இருந்தது, பசியால், மிகுந்த வெறியோடு மாமிசத்தை தின்றது. பயிற்சியாளன் தன் மாணவர்களைப் பார்த்து, ''இன்னும் சிறிது நாட்களில், இந்த புலி வெறும் காகிதப் புலியாக மாறிவிடும்'' என்றான்.

நான்காவது நாள், புலி பயிற்சியாளனைப் பார்த்து, ''எனக்குப் பசிக்கிறது. எழுந்து நிற்கச் சொல்லி கட்டளையிடு'' என்றது.

பயிற்சியாளன் மாணவர்களைப் பார்த்துச் சொன்னான்: ''இந்தப் புலி என்னுடைய கட்டளைகளை விரும்ப ஆரம்பித்துவிட்டது.''

பிறகு புலியைப் பார்த்து, ''ஒரு பூனையைப் போல் கத்தினால்தான் இன்று உனக்கு உணவு'' என்றான்.

புலி தன்னுடைய கோபத்தை அடக்கிக் கொண்டு, தனக்குள்ளேயே சொல்லிற்று, ''ஒரு பூனையைப் போல் கத்தி வேடிக்கை காட்ட வேண்டும்'' புலி பூனையைப் போல் கத்தியது.

பயிற்சியாளன் சிடுசிடுப்புடன் மறுத்தான்.

''ம்ஹூம்.... நீ கத்தியது சரியில்லை, உனது உறுமலை பூனையின் கத்தலைப் போல் எடுத்துக்கொள்ளச் சொல்கிறாயா?''

பசி.. இருட்டிக்கொண்டு வந்தது. கண்களை மூடிக்கொண்டு, கழுதையைப்போல் கத்தியது,

''உன் கத்தல் சரியாக அமையவில்லை.. போனால் போகிறது, உன்மேல் இரக்கம் கொண்டு உனக்கு இறைச்சியைக் கொடுக்கிறேன்.'' என்றான் அவன்.

புலி மீண்டும் முயற்சித்தது. பயிற்சியாளன் திருப்தியடைய வில்லை. ''நிறுத்து! நீ கத்துவது சரியில்லை. நீ பூனையைப் போல கத்த பயிற்சி எடுத்துக்கொள். நான் நாளைக்கு வந்து உன்னைப் பார்க்கிறேன். நீ சரியாகக் கத்தினால் உனக்கு சாப்பாடு, இல்லாவிட்டால் இல்லை.''

பயிற்சியாளன் புலியின் கூண்டைவிட்டு மெல்ல நடந்து சென்றான். அவனது மாணவர்கள் மெல்லிய குரலில் பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

புலி காடுகளை நோக்கிக் கதறியது.. ஆனால், காடுகள் வெகுதூரத்திலிருந்தன.

ஐந்தாவது நாள் பயிற்சியாளன் புலியிடம் சொன்னான்: ''வா நண்பனே, வா. எங்கே பூனையைப் போல் கத்து. நீ வெற்றியடைந்தால், உனக்கு புதிய பெரிய இறைச்சித்துண்டு தருகிறேன்.''

புலி பூனையைபோல் கத்தியது. பயிற்சியாளன் கைகளை கொட்டி மகிழ்வுடன், சொன்னான்: ''உண்மையிலே திறமைசாலிதான்! பூனையைப்போல் கத்துகிறாயே!'' என்றவாறு பெரிய இறைச்சித்துண்டை வீசினான்.

ஆறாவது நாள் வந்தது. பயிற்சியாளன் கூண்டை நெருங்கியதும், புலி பூனையைப் போல் கத்தியது. ஆனால் அவன் அமைதியாக இருந்தான்.

''என்னைப்பார்... நான் பூனையைப்போல் கத்தவில்லை?'' என்றது புலி.

''ஒரு கழுதையைப்போல கத்து'' பயிற்சியாளன் சொன்னான்.

''நான்... காட்டு விலங்குகளையெல்லாம் நடுங்க வைக்கும் புலி... என்னையா கழுதை போல கத்தச் சொல்கிறாய்?''

பயிற்சியாளன் புலியின் கூண்டை விட்டு புன்னகையோடு நகர்ந்தான்., ''நீ சாப்பிட வேண்டாமா?''

''நான் சாப்பிட வேண்டும்'' - புலி சொன்னது.

''நீ சாப்பிடும் இறைச்சிக்கு ஒரு விலையுண்டு.... கழுதையைப் போல கத்து, உனக்கு உணவுகிடைக்கும்.''

புலி தான் காடுகளில் இருந்த நிலையைப் பற்றி நினைக்க விரும்பியது. முடியவில்லை.

எட்டாவது நாளில் பயிற்சியாளன் சொன்னான்: ''நான் இப்போது பேசுவேன். பேசி முடித்தவுடன் நீ கை தட்ட வேண்டும்.''

அவன் பேச ஆரம்பித்தான். ''மதிப்புக்குரியவர்களே! நமது விதியை நிர்ணயிக்கும் சில விஷயங்கள் பற்றியும், அவற்றின் பால் நமது நிலைப்பற்றியும் பல சந்தர்ப்பங்களில் நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நமக்கு எதிரான சக்திகள் எப்படி சதித்திட்டம் தீட்டினாலும், நமது உறுதியும் நடுநிலையான செயல்களும் என்றும் மாறாது. நாம் நம்பிக்கை கொள்வோம், வெற்றி பெறுவோம்.''

''நீ சொன்னது எனக்கு ஒன்றும் புரியவில்லை'' என்றது புலி.

''நான் என்ன சொன்னாலும் அதைப் பாராட்டி கைதட்டுவது தான் உன்னுடைய வேலை,'' என்றான் பயிற்சியாளன்.

''மன்னிக்க வேண்டும்,'' புலி சொன்னது, ''எனக்குப் படிப்பறிவில்லை. அறிவும் கிடையாது. நீ சொன்னது நன்றாக இருந்தது. உன் விருப்பப்படி நான் கை தட்டுவேன்.''

புலி கை தட்டியது.

பயிற்சியாளன் சொன்னான், ''எனக்கு அதிகப்பிரசங்கிகளைப் பிடிக்காது- அதற்கு தண்டனையாக இன்று உனக்கு பட்டினி.''

ஒன்பதாவது நாள் பயிற்சியாளன் புல் கட்டோடு வந்தான். அதைப் புலியிடம் வீசினான். ''சாப்பிடு''

''என்ன இது?'' புலி கத்தியது ''நான் மாமிசப் பட்சிணி.''

''இன்றிலிருந்து புல்லைத் தவிர நீ ஒன்றும் சாப்பிடப்போவதில்லை,'' பயிற்சியாளன் சொன்னான்

புலிக்கு பசி தாங்கவில்லை. புல்லை தின்ன முயற்சித்தது. அதனுடைய சுவையும், அதிலிருந்து வந்த வித்தியாசமான வாசனையும் குமட்டலை உண்டாக்கியது. ஆனால், பசியோ கொடூரமாக இருந்தது. புலி மெல்ல புல்லைத் தின்ன ஆரம்பித்தது. சிறிது சிறிதாக அதன் சுவையை விரும்பத்தொடங்கியது.

பத்தாவது நாள்... பயிற்சியாளன், அவனது மாணவர்கள் எல்லோரும் மறைந்தனர். புலி இந்த நாட்டின் ஒரு குடிமகனாகியது. அதன் கூண்டு அதன் நகரமாகியது.

---

# போதும்.

அவனைப் பிடித்திருப்பதாக
பெற்றோரை நம்பவைப்பதும்,
சந்தோஷமாய் இருப்பதாய்
அவனிற்கு காட்டிக் கொள்வதும்,
பிள்ளைகளை எமது அன்பில்
உதித்தவர்கள் என நினைக்க வைப்பதும்
காதலில் கண்ணை மூடியிருப்பவர்கள் என
ஊரைப் பார்க்க வைப்பதும்,
எல்லாமே ஒரு நாடகம் தான்.

இந் நாடகம்
நிறையக் காலம் நடக்கிறது
பல வருடங்களாக தொடர்கிறது
நிறையப் பூச்சுக்கள், முகமூடிகள்
வழி வழியாய் சந்ததி சந்ததியாய்
கையளிக்கப்படுகின்றன.
ஆடல் முறைகள் முத்திரைகள்
முக பாவங்கள் எல்லாமும் தொடர்கின்றன.

என்னை என்னுள் பூட்டி
கண்ணிலே மெருகேற்றுவது தான்
எவ்வளவு கடினமான காரியம்.
நான் களைத்துப் போய் விட்டேன்
தாளம் தவறாது ஆடி ஆடி.
பார்வையாளருக்குப் பயந்து பயந்து.

இனி எனக்காய் வாழ்வ தென்பதும்
எனது குரல் வளையிலிருந்து
என்னுடைய கைகளை விடுவிப்பதென்பதும்
இன்று அவசியமாகிப் போனது
கடினமானது தான் இனிமேல்
உங்கள் எல்லோருக்கும் எனது இருப்பை
ஏற்பது தென்பது.

ஆனால்,
எனது சோகம் அதனிலும் கொடியது
வான் பரவி, மனிதர் உணர்ந்து,
மண்ணின் அடியில் பூச்சி புழுக்கள்
நுண்கிருமிகள் எல்லாம் அறிய வேண்டியது.

-க. கமலினி

---

ஓடு!
முடிந்தால் நுனி நகத்தை ஊன்றி
பறந்து விடு.
எனது முகம் உடைந்து
அள்ளுண்டு போகிறது -
உனது மூச்சில்.
சுவாசப் பையுள் கல்நிரப்பும் குரங்குத்
தனத்தோடு
கெந்தித் திரிகிறது காற்று.

இன்னமும் இரத்தம் பாய்ச்சப்படாத
புதிய இதயங்களோடு
எமது குழந்தைகள்
பூமியில் தளிர்க்கட்டும்.
பறந்துவிடு!

நீளமாய், உனது விரல் இடுக்கில்
புகைகிறது யுத்தம்.
ஊதிமகிழ்ந்தது போதும், அணைத்துவிடு.

எமது வாழ்வு உடைக்கும்
தண்டனையின்
கொடூரம் பார்த்த கைதிகள் நாம்.
வளம் தின்று கொழுக்கும்
யுத்த வாயிலிருந்து
எமது நாட்கள் துப்பப்படுகின்றன.

மனிதப் பிறவி மிருகம்போல.

எமது கைமடக்கி
நிலத்தில் ஊன்றி, நடக்கக் கற்றுக்
கொண்டதல்லால்
வேறென்ன கண்டோம் உன்னிடத்தில்?
பறந்துவிடு!

வேலியோரம் ஒரு புல்முளைத்து
நாட்களுக்கு
நிறம் வழிந்து
எனை மகிழ்விக்கட்டும்.
எமது நாட்களை
மெல்லிழையாய் எடுத்து
பின்னிடுவோம் - சிலந்தி வலைபோல்.
எண்திசையும் கைகால் எறிந்து
பாரமற்று, நாம் மிதந்து திரிவோம் -
அந்த நாட்களில்.
ஒரு புதிய நீ அப்போ பிறந்திருப்பாய்!

பாலமோகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்களிடம் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்..

- ஈவா ரணவீர



*"பெண்ணின் குரல்" நீண்ட காலமாகவே சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளிவந்து கொண்டிருக்கும் ஒரு பெண்நிலைச் சஞ்சிகை. பெண்கள் கல்வி ஆய்வு நிலையம் இதனை வெளியிடுகின்றது. "பெண்ணின் குரல்"ஐ வழிநடாத்தும் அமைப்பின் அமைப்பாளரான ஈவா ரணவீரவுடன் பெண்களது பிரச்சினைகள் தொடர்பாக நடத்திய உரையாடலில்இருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறோம்.*

***கேள்வி:- பெண்ணின் குரலின் முக்கிய நோக்கம் பற்றிக் கூறமுடியுமா?***

பதில்:- பெண்களை அறிவு ரீதியான விழிப்புணர்வு உடையவர்களாக ஆக்க வேண்டும் என்பதே எம் பிரதான நோக்கம். பெண்களுக்கு ஆண்களைப் போன்ற சம அந்தஸ்து பெயரளவிலேயே வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அது ஆண்களை விடத் தாழ்ந்த நிலையே.இந்த வேற்றுமையை சமப்படுத்த முடியும் என நாம் நம்புகின்றோம் அதற்காகவும் செயற்படுகின்றோம்.

***கேள்வி:- உங்கள் அமைப்பு தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலலும் சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதை நாம் அறிவோம். இதைத் தவிர்ந்த வேறு செயற்பாடுகள் ஏதாவது கூறமுடியுமா?***

பதில்:- கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றை நடாத்துகின்றோம். பெண்களை வரவழைத்து பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடுகின்றோம்.அத்துடன் கீழ் மட்டப் பெண்கள் , சேரிப்புறத்தில் வாழும் பெண்கள் ஆகியோரை வரவழைத்து பல துறைகளிலும் பயிற்சி அளிக்கின்றோம்.உதாரணமாக வெல்டிங், கட்டிடம் கட்டுதல் போன்ற துறைகளைக் கூறலாம்.இதன் மூலம் எம் நோக்கம் யாதெனில் ஆண்கள் செய்யும் வேலைகளில் பெண்களின் பங்கும் இருக்க வேண்டும் என்பதாகும். பெண்கள் மத்தியில் அவ்வாறான எண்ணங்களை ஏற்படுத்தவும் முயற்சிக்கின்றோம்.

***கேள்வி:- நீங்கள் ஆண்கள் செய்யும் வேலைகள் என வரையறுத்துக் கூறினீர்களே, அதனைவிவரித்துக் கூறமுடியுமா?***

பதில்:- தற்காலத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் என வேலைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.பெண்கள் சமையல் கட்டுக்கும், ஆண்கள் தொழிநுட்ப வேலைகளுக்கும் என்ற அடிப்படை இங்கு பங்கு வகிக்கின்றது. இந்த வேற்றுமையை முறியடிக்கும் வகையிலான பயிற்சி நெறிகளையே நாம் மேற்கொண்டு வருகிறோம்.

***கேள்வி:- இவ்வமைப்பின் பிரதான செயற்பாடு சஞ்சிகை வெளியீடும் பயிற்சிபட்டறைகளை நடாத்துவதும் மட்டுமா?***

பதில்;- பெண்ணியம் பற்றிச் சொல்லிக் கொடுக்கின்றோம். நாம் ஓர் ஓவியப் பயிற்சி நெறியை ஆரம் பித்தோம். தமிழ்ப் பெண்களை எடுக்கும் தேவை எமக்கிருந்தது. நாம் தமிழ் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுத்தோம். ஒரேயொரு தமிழ் விண்ணப்பம் மட்டுமே வந்தது. அவர் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்.ஆனால் அவர் பயிற்சி நெறிக்கு வரவில்லை. இரு ஆண்களை எடுத்தோம். அவர்கள் சிங்களவர்கள்.

***கேள்வி:- இப்பயிற்சி நெறியினூடாக வரையப்படும் ஓவியங்கள் பெண்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்துவனவாக உள்ளனவா?***

பதில்:- ஆம். இவை பெண்கள் பிரச்சினைகளை மையப்படுத்துவனவாகவே உள்ளன.

***கேள்வி:- கிராமத்துப் பெண்களுடன் உங்களது தொடர்புகள் எப்படி உள்ளன. பெண்ணின் குரல் இந்தப் பெண்களை எவ்வளவு தூரம் சென்றடைகின்றது?***

பதில்:- அவர்கள் எம்முடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்கின்றனர். தேவையான போது நாம் அவர்களை அழைக்கின்றோம். எமது சஞ்சிகையை அவர்களுக்குக் கிடைக்குமாறு செய்கின்றோம். புத்தகங்களை இலவசமாக வழங்குகின்றோம். அண்மையில் யாழ்ப்பாணத்தில் திருமதி .ஜீ. இராசநாயகம் அவர்களின் புத்தகத்தை வெளியிட்டோம். அது யாழில் பிரதிபலிக்கும் மாமியார் மருமகள் பிரச்சினைபற்றியது. இப்புத்தகம் இடப்பிரச்சினை, பெண்களின் உரிமைப்பிரச்சினை, ஆண்களின் உரிமைப்பிரச்சினை என பல பிரச்சினைகளை ஆராய்கின்றது.

***கேள்வி:- தமிழ், சிங்கள பெண்கள் அமைப்புக்கள் போன்று முஸ்லிம் பெண்கள் அமைப்புக்கள் இல்லை. ஓரிரண்டே உள்ளன. அத்துடன் முஸ்லிம் பெண்களுக்கு பெண்நிலைக் கருத்துக்கள் சென்றடைவதும் குறைவாகவே உள்ளது.புத்தளம் மாவட்டத்தில் இடம் பெயர்ந்து கிட்டத்தட்ட 38,000 முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.அங்கு வாழும் இடம் பெயர்ந்த பெண்களில் பலர் தமது சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஆர்வம் இருந்தும் இவர்களை உற்சாகப்படுத்த அங்கு பெண்கள் அமைப்புக்கள் முயற்சிப்பதாகத் தெரியவில்லை. உங்களது அமைப்பு முஸ்லிம் பெண்களுடன் இணைந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றதா?***

பதில்:-சில முஸ்லிம் பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து வேலை செய்ய எமக்கு ஆர்வம் இருந்தபோதும் இது வரையில் எமது முயற்சிகள் நிறைவு பெறவில்லை. முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகள் பற்றியும் எழுதி வருகின்றோம். அத்தகவல்களை நாம் வேறு பத்திரிகைகளில் இருந்து தான் எடுக்கின்றோம். இவர்களுடன் இணைந்து செயற்படும் போது மொழிப பிரச்சினை ஏற்படுகின்றது. ஒவ்வொரு இனத்துப் பெண்ணும் தத்தமது இனம் சார்ந்த பெண்களுடன் இணைந்து வேலை செய்வதையே விரும்புகின்றனர். ஏனெனில் அது இலகுவாக உள்ளது.

***கேள்வி:- மலையகப் பிரதேசங்களில் உங்கள் நடவடிக்கை எவ்வாறு அமைந்துள்ளது?***

பதில்:- விசேடமாகக் கூறும்படி இல்லை. சில நிக்ழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. தோட்டப்புற பெண்களின் தொடர்பு அதிகம் இல்லை. ஆனால், நகர்ப்புற பெண்களுடன் ஓரளவு தொடர்பு உண்டு.

***கேள்வி:- சமீபத்தில் மலையக பணிப் பெண் தீ மூட்டி கொலைசெய்யப் பட்டார் எனற செய்தி எங்கள்' பத்திரிகையில் வெளிவந்தது. அதை எழுதியவர் ஒரு ஆண். அவர் இது தொடர்பாக பெண்கள் அமைப்புக்கள் ஒன்றும் கவனம் செலுத்தவில்லை எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.***

பதில்:- தமிழ்ப் பத்திரிகையில் வந்ததால் நாங்கள் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சிங்கள, ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவரும் வரையில் எங்களுக்கு ஒன்றும் தெரியாது.

***கேள்வி:- பொதுவாகப் பெண்கள் பிரச்சினை பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?***

பதில்:-நான் இதை பெண்ணிலைவாதத்தின் அடிப்படையில் கூறுகின்றேன். தமிழ் சிங்கள, முஸ்லிம் சகோதரிகள் ஆணாதிக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றார்கள்.யுத்தத்துக்கு அவர்களை முன்னுக்கு இழுத்துச்செல்லப்படுகின்றனர். பின்னர் யுத்தம் முடிவடைந்ததும் அவர்கள் தேவை முடிவடைந்தவுடன் சமையலறைக்குள் அனுப்பி விடப்படுகின்றனர். நாம் அதற்கு எதிராகப் போராடுகின்றோம். ஆண்கள் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்கின்றனர். நாம் சமைக்கவேண்டும், துணி துவைக்க வேண்டும், பிள்ளைகளைப் பாதுகாக்கவேண்டும். எனினும் தற்போது பொருளாதாரச் சுமை காரணமாக பெண்கள் தொழிலுக்குச் செல்கின்றனர்.ஆனால் இது நீடிக்கக் கூடிய விடயம் அல்ல. இங்கு நாம் -இன பேதங்களைப் பார்ப்பதில்லை.எல்லாப் பெண்களுக்குமே பிரச்சினை பொதுவானது. இப்பொழுது பெண்களுக்கு வேலைப் பளு அதிகம். இன்னொரு விடயத்தையும் கூற விரும்புகின்றேன். நான் ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்று வந்தேன். இந்த நாடுகளின் சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்கு நிறைய உண்டு. ஆனால் இந்த நாடுகள் சுதந்திரம் அடைந்த பின் பெண்களுக்குச் சுகாதார அமைச்சு போன்ற சின்னச்சின்னப் பதவிகளை வழங்கி ஏமாற்றினர். பெண்கள் தமக்கு நல்ல பதவிகளைத் தரும்படி கேட்பதில்லை. பெண்கள் உயர் பதவிகளை வகிக்கத் தகுதி இல்லாதவர்கள் என்ற கருத்தில் நல்ல பதவிகள் வழங்கப்படுவதுமில்லை. பெண்கள் இதற்காகப் போராடுவதும் இல்லை.ஒரு வேளை பெண்களுக்கு பாதுகாப்பு அமைச்சு போன்ற பதவிகள் வழங்கினால் ஆயுத விற்பனை, கொலை செய்தல் போன்றவை குறையும். பெண்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் இவ்வாறான நிகழ்வுகள் யாவற்றையும் தவிர்த்து விடலாம்.

***கேள்வி:- இலங்கை ஜனாதிபதியும் ஒரு பெண்தானே. ஆனால் இங்கு நிலைமை மேம்பட்டதாகத் தெரியவில்லையே?***

பதில்:- சந்திரிகா மேம்படுத்த வேண்டும் என்றும் முயற்சி செய்கிறார்.ஆனால் அவர் ஆணாதிக்கத்திற்கு உட்பட்டு இருக்கின்றார். ஆணாதிக்கத்திற்கு உட்படாத பெண்நிலைவாதச் சிந்தனை கொண்ட ஒரு அரசு தோன்றினால், அதில் அதிகம் பெண்களும் அங்கம் வகித்தால் அப்படி எதிர்பார்க்கமுடியும். ஆணாதிக்கத்திற்கு உட்படாத அரசில் ஆண்களும் அங்கம் வகிக்கலாம்.

***கேள்வி:- முயற்சி என்று கூறினீர்கள் உதாரணம் கூற முடியுமா?***

பதில்:-குழந்தைகளைக் கொண்டு வேலை செய்வதற்கு எதிரான ஒரு சாசனம், பெண்கள் சாசனம் கொண்டு வந்துள்ளார். இவை இதுவரையில் கடதாசியில் உள்ளதே அன்றி நடைமுறையில் இல்லை.

***கேள்வி:- சிங்கள சமூகத்தில் சீதனம் வாங்குதல், திருமணமான பின் 'இரத்தச் சோதனை'க்கு உட்படுத்தப்படல் போன்றவை இப்போதும் நடைமுறையில் உள்ளனவா?***

பதில்:- இப்பொழுது சீதனப்பிரச்சினை குறிப்பிடும்படி இல்லை. உயர்மட்டப் பெண்களிடையே தான் இந்தப் பிரச்சினை அதிகம். தற்சமயம் பெண்கள் வேலை செய்வதனால் இது குறைவாக உள்ளது. கிராம மட்டத்தில் ஆணும் பெண்ணும் விவசாயிகளாக இருந்தால் சீதனம் கேட்கும் பிரச்சினை இல்லை. நடுத்தரக் குடும்பங்களிலும் பெண்கள் வேலை செய்வதனால் சீதனப் பிரச்சினை இல்லை. நான் பார்த்த அளவில பத்திரிகைகளில் அழகான பெண்கள் தேவை என்று தான் விளம்பரப்படுத்தப்படுகின்றதே தவிர சீதனம் கேட்கப்படுவதில்லை. ஆனால் பெண்ணும் வைத்தியராகவிருந்தால் எப்படியும் சீதனம் கிடைக்கும் தானே என்று நேரடியாகக் கேட்கப்படுவதுமில்லை. திருமணத்தின் பின் பெண் இரத்த சோதனைக்கு உட்படுத்தப்படல் மறைமுகமாக நடந்து கொண்டுதான் இருக்கின்றது. சமீபத்தில் இது காரணமாக ஒரு பெண் தற்கொலை புரிந்து கொண்டார். இப்பொழுது நமக்கு இருக்கும் பாரிய பிரச்சினை பாலியல் வல்லுறவுப் பிரச்சினை தான்.

***கேள்வி:- இந்தப் பாலியல் வல்லுறவுகளை, துஷ்பிரயோகங்களை முறியடிப்பதற்கு என்ன முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றீர்கள்?***

பதில்:- பிரச்சார நடவடிக்கைகள் கூடுதலாக செய்கிறோம். அரசின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்கின்றோம். அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் சேர்ந்து நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றோம். பதினொரு வயது பெண் பிள்ளையை பாலியல் வல்லுறவு செய்த எழுபது வயதுடைய அந்நபர் இறந்து போனார். பெண்ணின் தகப்பனார் இவ்விடயம் பகிரங்கத்துக்கு வந்து விட்டது. தனது மகளுக்கு அவப்பெயர் பரவி விட்டது. தான் என்ன செய்வது என்று எங்களைக் கேட்கிறார். தற்போது இந்த ஆணாதிக்க சமூகத்தினால் நிராகரிக்கப்பட்ட ஒரு பெண் அவள்.

***கேள்வி:- பாலியல் வல்லுறவு துஷ்பிரயோகங்களை புள்ளிவிபர ரீதியாக கூறமுடியுமா?***

பதில்:- பலர் தவறை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர். சில வெளி வருவதில்லை. இத்தகைய பெண்களைத் திருமணம் செய்ய யாரும் முன்வராமை சமூகத்திற்கு பயப்படுகின்றமை என்பவையே இதற்குக் காரணம். ஒருவர் இது பற்றி ஆய்வொன்றை நடாத்தினார். அதற்கு போதிய பங்களிப்பு கிடைக்கவில்லை.

***கேள்வி:- தற்போது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்கலாம்.***

பதில்:- யுத்தம் நிறுத்தப்படவேண்டும். நாங்கள் முன்னோக்கிச் செல்வதை விடவும், பின்னோக்கியே செல்கிறோம். பிரச்சினையைச் சரியாக ஆராய்ந்து சமாதான ரீதியில் தீர்வை முன்வைத்து நடுநிலையாக நின்று இதனைத் தீர்த்து வைக்க வேண்டும்.

***கேள்வி:- ஜனாதிபதி அவர்களால் முன்வைக்கப்பட்ட சமாதானப் பொதியைப் பற்றி உங்கள் கருத்து என்ன?***

பதில்:- அதில் அடங்கியிருக்கும் விடயங்கள் நல்லவை. ஆனால் இது போதாது. அல்லது இது நல்லது என்ற கருத்துகள் பலபகுதிகளில் இருந்தும் வரவேண்டும்.

***கேள்வி:- சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினை பற்றி சிங்கள மக்கள் மத்தியில் எப்படிப் பார்க்கப்படுகின்றது?***

பதில்:- இதுவரையில் அவர்கள் இப் பிரச்சினை பற்றி பெரிதாக எதுவும் யோசிக்கவில்லை. இனித்தான் யோசிக்க வேண்டும். இதற்கு மேல் நான் எதையும் கூற விரும்பவில்லை. இந்தத் தீவிரவாதத்தால் எதையும் செய்ய முடியாது. அது மீண்டும் மீண்டும் எழுந்து வரும்.

*சந்திப்பு:*
*நிருபா ரத்னா.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## சி. சிவசேகரம்

"வெறுமனே வரலாறாக அன்றி எமது வாழ்கால நிகழ்வுகள் மீது சவாலாகப் படியக் கூடியவை" என்ற நோக்கில் காஷ்மீர், வட அயர்லாந்து, தென்னாபிரிக்கா, பியாஃப்ரா (நைஜீரியா), பாஸ்க் (ஸ்பானியா), சூடான், கிழக்கு தீமோர் (இந்தோனிசியா), மேற்கு இரியன் (இந்தோனிசியா), தீபெத் (சீனா) என்பன தொடர்பான பத்துக் கட்டுரைகளும் இனத்துவ அரசியல் பற்றியும் தேசியவாதம் பற்றியுமான கட்டுரைகளுஞ்சேரச், 'சரிநிகர்' இருவார ஏட்டுக்குத் தமிழ்மாறன் எழுதிய பன்னிரு கட்டுரைகளது தொகுப்பு இது. சிவத்தம்பி ஒரு மதிப்புரை எழுதியுள்ளார்.

வெறுமனே வரலாறென வரலாற்றில் ஏதுமில்லை. தகவல்களின் வியாக்கியானங்கள் மட்டுமின்றித் தகவல்களும் 'அகச்சார்பிற்கு ஆளாவனவே. வரலாறு எழுதப்படும் நோக்கம், எழுதப்பட்ட வரலாற்றின் வடிவையும் உள்ளடக்கத்தையும் நிர்ணயிக்கிறது. பொதுவாக வரலாற்றைச் சமூக எசமானர்களே எழுதுவிக்கின்றனர். சமூகத்தை மாற்ற விரும்புவோர் கூட அவற்றினின்றே தமக்கு அவசியமான தகவல்களைப் பிரித்தெடுப்பது அவசியமாகிறது.

சமகால உலக நிகழ்வுகளின் பதிவுகளை அறிவதற்கு நம்மிற் பெரும்பாலோர் சர்வதேசச் செய்தி நிறுவனங்களையும் நியூஸ்வீக், இகொணமிஸ்ற், ஃபார் ஈஸ்ற்றேன் இகொணமிக் றிவ்யூ போன்ற ஏடுகளையுமே நாடவேண்டியுள்ளது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின், மாற்றுப் பார்வைகட்கான வாய்ப்பு மேலுஞ் சுருங்கிவிட்டது. இடதுசாரி மார்க்ஸியச் சஞ்சிகைகளைத் தேடி வாசிப்போர் அனேகரல்லர். அணிசேரா இயக்கம் தளர்வுற்ற பின் மாற்றுப் பாாவைகளை அறிவதற்கு, ஒருவர் மிகுந்த சிரமம் எடுக்க வேண்டியே இருந்துள்ளது. ஈழத்தின் தேசிய இனப்பிரச்சினையிற் பிரதான செய்தி ஏடுகள் அனைத்துமே பல்வேறு காரணங்கட்காக அதிகாரபூர்வமான நிலைப்பாட்டினின்றே செய்திகளை வழங்குகின்றன. ஒரு குறிப்பிட்ட இயக்கத்திற்கும் அதன் போராட்டத்திற்கும் எதிரான செய்தித் திரிப்புக்கள் வரலாற்றுத் திரிப்புக்குக் களமமைக்கின்றன. எனவே, அரசியல் விமர்சகருடைய பொறுப்பு பெரியது. ஒரு அரசியல் விமர்சகருடைய அரசியல் நிலைப்பாட்டை அவரது எழுத்து எவ்வாறேனும் அடையாளங் காட்டிவிடும். பக்கச் சார்பற்ற விமர்சனம் என்று கருதப்படுவன சரியானவையாகவோ முழுமையானவையாகவோ இருக்க அவசியமில்லை.

தமிழ் மாறன் இருபதுக்குட்பட்ட நூல்களையுஞ் சில அறிக்கைகளையுஞ் சஞ்சிகைகளையும் உசாத்துணை எனக் குறிப்பிட்டுள்ளார். சிக்கலான பல பிரச்சினைகளைப் பரிசீலிக்க அவர் சார்ந்துள்ள ஆதாரங்கள் போதியனவா என்பது ஐயத்துக்குரியது. அவரது தகவல்களைத் தருவோரது அரசியல் என்ன என்பது பற்றிய அறிவுறுத்தலை அவர் தரவில்லை. அவற்றை அவர் கேள்விக்குட்படுத்தியதற்கு அவரது கட்டுரைகள் சான்று கூறவும் இல்லை.

காஷ்மீர் தொடர்பாக இந்திய அரசின் அடக்கு முறை பற்றிய அவரது விமர்சனத்தில் நியாயமுண்டு. அதே வேளை, காஷ்மீர் மக்களின் சுயநிர்ணயத்திற்குப் பாதகமான முறையிலேயே பாகிஸ்தானும் நடந்து கொள்கிறது என்பது குறிப்பிடப் படவில்லை. காஷ்மீர் மக்கள் பற்றிய அக்கறையினாலன்றிப், பிராந்திய அரசியலிற் தமது லாப நட்டக் கணக்குக கருதியே, மேலை நாடுகள் தமது ந. லப்பாட்டை வகுத்துள்ளன. இங்கு கவனத்துக்குரிய விஷயம், அயற் தலையீடு தேசிய விடுதலைப் போராட்டங்களை மேலும் சிக்கலாக்குகிறது என்பதே. இந்திய அதிகார வர்க்கத்தின் பிராந்திய விஸ்தரிப்பு நோக்கங்கள், ஆதிக்க இலட்சியங்கள் என்பவற்றையுங் கருத்திற் கொண்டே, ஈழத்தமிழரின் விடுதலைப்போராட்டத்திலும் இந்திய ஒன்றியத்தின் தேசிய இன எழுச்சிகளிலும் இந்திய அரசின் நடத்தை மதிப்பிடப் படவேண்டும். இதற்குப்பதிலாக மேலோட்டமான ஒற்றுமைகளை வைத்து (உதாரணமாக 5ம்பக்கத்தில்) சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிய வசனங்கள்) மிகவும் பலவீனமான விளக்கங்களைக் கட்டுரையாளர் முன்வைத்துள்ளார். இப்பலவீனம் அனேகமாக எல்லாக் கட்டுரைகளிலும் உள்ளது.

வட அயர்லாந்து பற்றிப் புலம்பெயர்ந்த தமிழ் ஏடுகளில் நான் வாசித்த சில கட்டுரைகள் தமிழ்மாறனின் கட்டுரையை விடத் தெளிவுடன் அப்பிரச்சினையைக் கையாண்டுள்ளன. பிரித்தானிய ஏகாதிபத்தியம், மொழி உட்படத் தேசிய இனங்களின் சுய அடையாளங்களைச் சிதைப்பதில் முக்கியமான கவனங்காட்டி வந்துள்ளது. இன்றைய வட அயர்லாந்தின் பிரச்சினை, பிரித்தானிய ஆட்சியாளர்கள் வேறும்பல பிரதேசங்களிற் போல, வேண்டுமென்றே உருவாக்கிய ஒரு சிக்கலின் விளைவு. வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மதத்தினரின் (உண்மையில் மதவாதத் தலைவர்களின்) கவலைகள் பற்றி நிறையவே எழுதியுள்ள தமிழ்மாறன், பிரித்தானிய ஆட்சியாளர்கள் சார்பில் முன்வைக்கப்படும் கத்தோலிக்க விரோதப் பிரசாரத்தை அதிகக் கேள்வியின்றி ஏற்றுக் கொள்கிறார். ஐரிஷ் விடுதலைப் படை (ஐ.ஆர்.ஏ) நடத்தும் இன்றைய போராட்டம் பழைய விடுதலைப் புரட்சியின் தொடர்ச்சியாகவன்றி வட அயர்லாந்து கத்தோலிக்க மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொடும்நடவடிக்கைகளின் விளைவானது என்பது பற்றி அவர் கவனங்காட்டாததோடு, ஷின் ஃபெயின் (Sin fein), ஐரிஷ் விடுதலைப்படையின் அரசியற்பிரிவு என்ற வாதத்தையும் அப்படியே எதிரொலிக்கிறார். ஷின் ஃபெயின் ஐ.ஆர்.ஏயினின்று கிளைத்தது மெய். ஆனால் அதன் தலைமையும் ஐ.ஆர்.ஏயின் தலைமையும் வேறு; அவற்றிடையே பாரிய கருத்து வேறுபாடுகள் உள்ளன. அண்மைக்காலத்தின் அரசியல் நிகழ்வுகள் தமிழ்மாறனின் பாராட்டுக்குரிய ஜோன்மேஜரின் சந்தர்ப்பவாதத்தையும் அவரது பழமைப்பேணற் கட்சிக்கும் வட அயர்லாந்தின் இரண்டு பிரதான புரட்டஸ்தாந்து மதவாதக் கட்சிகட்கும் உள்ள உறவின் நெருக்கத்தையும் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளன. வட அயர்லாந்தில் நீதியான சமாதானத்தின் எதிரிகள் இவர்கள் என்பதை நாம் மறக்கலாகாது. அண்மையில் நடந்த கலந்தாலோசனைக் குழுவுக்கான தேர்தல் முடிவுகள் ஷின்ஃபெய்னைத் தனிமைப்படுத்த மேஜர் எடுத்த முயற்சியை முறியடித்து விட்டன. அநீதி உண்டேல் அமைதி இல்லை என்பதே வட அயர்லாந்து தரும் பாடம்.

தென்னாபிரிக்கா பற்றிய கட்டுரையிலும் எஸ் டபிள்யூ. டெ க்ளேர்க்குக் கட்டுரையாளர் தெரிவிக்கும் பாராட்டுகள், இதே க்ளேர்க்கின் பழைய இனவெறி அரசியலை மூடிமறைக்கின்றன. இந்த மனமாற்றங்களை இயலுமாக்குவதிலும் தெற்கு ஆபிரிக்கா முழுவதிலும் தமது மறைமுக/ நேர்முக ஆதரவுடன் நிகழ்ந்த உள்நாட்டுப் போர்களை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது அக்கறையை இயலுமாக்கியது என்ன என்ற கேள்வியைக் கட்டுரையாளர் தவற விட்டுவிட்டார். இன்றைய தென்னாபிரிக்காவின் பிரதான கேள்வி, வெள்ளை இனத்து வசதிபடைத்த வர்க்கத்தினரை மகிழ்விப்பது தொடர்பானதல்ல; மாறாக முன்னூறு வருட காலம் அடக்கி வைக்கப்பட்ட மக்களை நிமிர்ந்து நடக்க வைப்பது தொடர்பானது. இதற்கான முயற்சிகளை உலக சமாதானத்தின் புதிய காவலர்களும், மனித உரிமையாளர்களும் எவ்வாறு எதிர்கொள்வார்கள் என்பதே நம் கவனத்திற்குரியது. அவர்களது சுயநிர்ணயக் கோட்பாடு அப்போது எவ்வாறு பயன்படும் என்று பார்க்கலாம்.

பியாஃப்ரா பற்றிய குறிப்புக்களில் ஆபிரிக்கா ஒற்றுமைத் தாபனம் (ஒ.ஏ.யு.) பியாஃப்ரா பிரிவினைக்கு எதிராக நின்றமைக்கு ஒவ்வொரு நாடும் தனது எல்லைகளைக் காக்கும் தேவையே காரணம் என்று கட்டுரையாளர் கூறுகிறார். இதில் ஓரளவு உண்மை இருந்தாலும் இந்த நிலைப்பாடு ஆபிரிக்காவில் மேலும் பிளவுகளை ஊக்குவிக்கும் அயல் முயற்சிகளை எதிர்க்கும் தேவையும் உள்ளடங்கும். 1960களின் பிற்பகுதியில் பியாஃப்ரா போராட்டம் எழ ஆறேழு ஆண்டுகள் முன்பு, கொங்கோ (இன்று ஸய்யிர்) நாட்டினின்று கனிப்பொருள் வளம் மிகுந்த கட்டங்கா மாகாணத்தைப் பிரிக்கும் மேனாட்டு முயற்சியின் விளைவுகளை ஆபிரிக்கா மறக்க நியாயமில்லை. பியாஃப்ரா விடுதலையை ஆபிரிக்க நாடுகள் நான்கு அங்கீகரித்தன. ஆபிரிக்காவுக்கு வெளியே எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை. சீனா, பியாஃப்ரா பிரிவினையை ஆதரித்ததாகக் கூறும் கட்டுரையாளர் தன் கூற்றுக்கான ஆதாரங்களைத் தருவாராயின் பயனிருக்கும். ஏனெனில், இன்று வரை சீன அரசு ஆபிரிக்காவின் வேறெந்த உள்நாட்டுக் கிளர்ச்சியையும் ஆதரித்ததாகத் தெரியாது இதுபோக, சோவியத் ஒன்றியத்துடன் முரண்பட்டமையே பியாஃப்ரா பிரிவினைப் போராட்டத்தின் தோல்விக்குக் காரணம் எனவும் அக்கால கட்டத்தில் சோவியத் ஒன்றியத்துடைய ஆதரவு பெற்ற சகல விடுதலைப் போராட்டங்களும் வெற்றிபெற்றன எனவும் ஆசிரியர் கூறுகிறார். அவ்வாறாயின் ஸிம்பாப்வே விடுதலைப் புரட்சி எவ்வாறு வெற்றிபெற்றது என்பதும் தென் ஆபிரிக்காவும் நமீபியாவும் (தெ.மே ஆபிரிக்கா) ஏன் சோவியத் யூனியனின் சரிவு வரை காத்திருக்க நேர்ந்தது எனவும் கட்டுரையாளர் தான் விளக்க வேண்டும்.



*தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள்*
-மோதல்களும் தீர்வுகளும்

**வி.ரி.தமிழ்மாறன்**

கார்த்திகேயன் வெளியீட்டகம்
501/2, காலி வீதி, கொழும்பு-06
பக்கங்கள்: 134+10
விலை: ரூபா 100

## செங்கோல் = செப்பு + கோல்

அரசன் எழுந்தான்
அப்பாவிகளின் தொடை, கணைக்காலென்புகளால் செய்யப்பட்டு
குழந்தைகளின் கன்னத்தசைகளால் போர்த்தப்பட்ட
ஆசனத்திலிருந்து
வலது கையில்
எழுவன் குளத்துச் சிங்கள மக்களின்
புத்தம் புதிய குருதி நிரம்பிய கிண்ணம்
ஒருமிடறு குருதியருந்தியபடி
திறந்து கிடந்த அடுத்த அறையை எட்டிப் பார்த்தான்
அறைச் சுவரில்
ஆணியடித்துக் கொழுவப்பட்ட 103 தொப்பிகள்
காத்தான்குடிப் பள்ளிவாசலில்
சுட்டுக் குதறப்பட்டவர்களின் தலைகளிலிருந்து
கழற்றி எடுத்து வரப்பட்ட மாவீரச் சின்னங்களவை.
பக்கத்தில்
இரு கூறிடப்பட்டு வீசி யெறியப்பட்ட சிறு பிள்ளை யொன்றின்
குருதி பீச்சியடிக் கப்பட்டுக் காய்ந்த சீமெந்துப் பேப்பர்
பெருமிதத்தில் தனக்குள் சிரித்துக் கொண்ட அரசன்
திடுமென அதிர்ந்தான்.
மிக அருகில் எங்கோ பாங்கொலிக்கக் கேட்டான்
அம்பிளாந்துறைச் சந்தியில் மரண ஓலமெழுப்பிய
அதே 157 ஹாஜிமாரினதும் குரல் அசப்பில்
மடுவுக்குள் பாதி புதைந்தும்
பட்டை வாய் வெடித்த காட்டு மரங்களில் தொங்கியும்
இரத்தம் தோய்ந்த வெண்ணிற 'ஜூப்பா'க்கள்
அரண்மனைக்கு வெளியே காற்றிலசைவதும் கண்டான்.
காதை இறுகப் பொத்தியபடி
கதவை இழுத்து அடைத்துச் சாத்தி
அறைக்குள் மீளவும் வந்தமர்ந்தான்
அருகில்
தப்பித் தவறியும் எதனையும் சிந்தித்துவிடக்கூடாதென்பதற்காய்
கழற்றிய மூளை ஒரு கையிலும்
சயனைட் குப்பி ஒரு கையிலுமாய்
யாரிலோ அல்லது எதிலோ வீழுந்து வெடித்துச் சிதறிட
தன் அரசனின் ஆணையைக் கோரி நிற்கும்
இயந்திரத் தனப்பட்டு இளைஞனாய்ப் போன
பன்னிரு வயதுத் தமிழ்ப் பாலகன்
மெல்லக் குனிந்து தன் அரசனைக் கேட்டான்
"முஸ்லிம்களைக் கொன்று கன நாளாயிற்றே
கொல்வதில்லையா இனி?"
அரண்மனை அதிரப் பேயிடியாய்ச்
சிரித்த அரசன் திருவாய் மலர்ந்தான்
"கொல்வதில்லை யென்றெதுவுமில்லை,
இப்போதில்லை!"

-1996

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இலங்கை வெயிலில் கழரும் சாயம்!

அண்மைக்காலங்களாகச் சரிநிகர் தொடர்பாகச்சில விவாதங்கள் வெளிவந்தன. இவற்றின் சாரத்தில் சரிநிகர் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமாக இயங்கவில்லையென்ற குற்றச்சாட்டே முக்கியமாக உள்ளதை உணர முடிகிறது. தவிரவும், தமிழர்களது சுயநிர்ணய உரிமை தொடர்பாய்ச் சரிநிகர் கொண்டுள்ள உறுதியான நிலைப்பாடு கேள்விக்குள்ளாக்கப்படுவதையும் உணர முடிகிறது.

சரிநிகர் தனது நூறாவது இதழைத் தயாரித்துக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் இவ்வாறான விவாதங்கள் சரிநிகரையும், அதன் வாசகர்களையும் சலிப்படையச் செய்யக்கூடும். சரிநிகர் தனது அரசியல் நிலைப்பாட்டில் ஆரம்பத்தில் இருந்தே தெளிவாக இருந்திருக்கிறது என்றே கருதுகிறேன். ஏறத்தாழ ஐந்து வருடங்கள் கழித்தபிறகு இந்த நிலைப்பாடு தமிழர் சிலராலேயே கேள்விக்கு உள்ளாக்கப்படுவது வருந்தத்தக்கது. விடுதலைப் புலிகள் மீது சிலர் கொண்டுள்ள அதிருப்தி / முரண்பாடு, சுயநிர்ணய உரிமைப் பற்றிப்பேசுவோர் எல்லோரையும் புலிகளாய்க் காணும் நிறக்குருட்டுக்கு வழிவகுத்துள்ளது. சுயநிர்ணய உரிமைக்குக் குறைந்த எந்தத் தீர்வும், தமிழ் மக்களது சவக்குழிக்கு வழிகாட்டும் வாய்ப்புகள் கொண்டதைக் கடந்த ஐம்பது வருட இலங்கை வரலாற்றை அறிந்தவர்கள் மறுக்க இயலாது. இன்றும் இனவாதிகளைத் திருப்திப்படுத்துவதையே முக்கிய நோக்கமாய்க், கொண்டு இயங்கும் அரசியற் போக்கே சிங்கள அரசிடம் உள்ளது. இதற்கு இடதுசாரி/ மக்கள் நலம் பேணும் சாயங்களைப் பூசினாலும், வெயில் அதிகம் உள்ள இலங்கையில் அது அதிகம் தாங்காது. தமிழர்கள் தாம் இலங்கைப் பிரசைகள்தானா என்பதைச் சந்தேகிக்கத் தொடங்கி நீண்ட காலங்களாகிறது. அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படாத நிலையில் சரிநிகரும் சரி, தமிழ் மக்களும் சரி, தமது சுயநிர்ணய உரிமைக்கான குரலை எப்போதும் உயர்த்தியே வைத்திருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக சரிநிகர் இயங்குகிறது என்று கூடச் சிலர் குற்றம் சாட்டுகின்றனர். தமிழ் மக்களது உரிமைகளைப் பற்றிப் பேசுபவர்கள் எல்லோரும் புலிகள் என்றால், தமிழர்கள் அனைவருமே புலிகளாக மாறினாலும் காரியமில்லை. புலிகள் தமிழ் மக்களது ஜனநாயக உரிமைகளை மதிப்பதில்லை, ஏனைய இனங்கள் மீது நிகழ்த்தும் வன்முறைகள் ஏற்புடையவை அல்ல என்ற காரணங்களை வைத்துப் புலிகளை நிராகரிப்பது அறிவின்பாற்படாது. புலிகளை விமர்சிப்பதற்கு முன்பு ஒருவர் தான் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கவா, பலிகொடுக்கவா இயங்குகிறார் என்பதைத் தெளிவுபடுத்தி விடுவது நல்லது. ஏனென்றால் இது அரசியல்வியாபாரம் மும்முரமாக நிகழும் காலம்.

அமைதிக்காகச் சிங்கள மக்களிடையே நிகழும் முனைப்பான காரியங்களைச் சரிநிகர் சரியாக வெளிக்கொணர்வதில்லை என்ற குற்றச்சாட்டில் உண்மை இருக்கக்கூடும். அப்படியிருப்பின் அதைத் திருத்துவது ஆசிரியர் பீடத்தின் பொறுப்பு. சிங்கள இலக்கியங்களைத் தமிழில் அறிமுகப்படுத்துவதிலும், சிங்கள மக்களுக்கே உரித்தான பிரச்சினைகளைத் தமிழ் மக்களிடையே வெளிக்கொணர்வதிலும் சரிநிகர் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். இவ்வாறான முயற்சிகள் சிங்களப் பத்திரிகைகளிலும் (தமிழ் மக்கள் பற்றி) இடம்பெற, சரிநிகர் ஆசிரிய பீடத்தினரும், சிங்கள மக்களிடையே சமாதானப் பிரச்சாரம் செய்யும் நண்பர்களும் ஒன்று பட்டு உழைத்தல் அவசியம்.

எமது தேசத்தைப் பீடித்துள்ள இனவாதப் பேய்களிடமிருந்து அடுத்த தலைமுறை யாவது தப்பி வாழும் என்று நம்புவோமாக.

*இளவாலை விஜயேந்திரன்,*
*நோர்வே.*

## மார்க்கம் மறந்த "கார்ணிவல்"!

அஷ்ரஃப் பற்றிய வெறுமையை முஸ்லிம்கள் அவதானிக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது. நாற்காலி மரத்தில் இருந்து விழாதிருக்கும் படியாக அதிகமான குறியீடுகள் தேர்தல்காலங்களில் காண்பிக்கப்பட்டன. இன்று காங்கிரஸ் கூட்டங்களில் தொப்பி மொஹிடீன் நகைச்சுவையாகப் பேசுவதோடு திருப்தியடைந்து விடும் மு.கா. உயர்மட்டம் மக்கள் மத்தியில் கேள்விக் குறியாக்கப்பட்டிருப்பதும் தவிர்க்க முடியாததாகி வருகின்றது.

அண்மையில் கம்பளையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழாவும் பல அனாச்சாரங்களை அள்ளி இறைத்து விட்டுச் சென்றுள்ளது. முஸ்லிம் மக்களின் மனதில் இது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

மீலாத் மேடையில் தனி அரசியலே நாடகமாடியது. கம்பளை காதர் ஹாஜியாரின் அரசியல் இமேஜை உடைப்பதற்கு திட்டமிடப்பட்ட அரசியல் மீலாத் விழா அண்ணார்ந்து உமிழ்ந்தவன் கதையாக மாறிவிட்டது.

மேடைக்கு காவியுடையணிந்த ஒரு தேரோ வர அவசர அவசரமாய் எழுந்து மரியாதை செய்த முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் தலைவருட்பட ஏன் உலமாக்களுக்கு அவ்வாறு செய்யவில்லை என்பது உலமாக்கள் கேட்கின்ற கேள்வி.

பேசும்போது அஷ்ரஃப் மீலாத்துல்லாஹ் என்ற ஷிர்க்கான் வார்த்தையையும் மொழிந்து எரிச்சலையூட்டினர்.


மீலாத் விழாவில் வைக்கப்பட்ட கண்காட்சியில் ஆண்களும் பெண்களும் தாராளமாக நெரிபட்டு களிப்புற வைத்த இஸ்லாமிய கலாசாரத்தையும் நபி மொழிகளையும் பாதுகாத்த(?) வெலம்பொட ரவுஃப் ஹாஜியாரும் அவர் தம் கூட்டமும் இன்னும் வாழ வேண்டியது கடமை.

உலமாக்களில்லாத மார்க்கம் மறந்த ஒரு காணிவேல் போல அஷ்ரஃபின் புகுந்த ஊரின் மீலாத் விழாவும் அமைந்துவிட்டது. மருந்திற்குத்தானும் ஒரு சிறந்த மார்க்கச் சொற்பொழிவை ஏற்படுத்தாதது, திட்டமிட்டவர்களின் கைங்கரியமாகும்.

மீலாத் செலவிற்கென முஸ்லிம் கிராமங்கள் தோறும் 'மடிப்பிச்சை' கேட்டுச் சென்ற ரவுஃப் ஹாஜியாருக்கு அக்குறணை முஸ்லிம்கள் நன்றாகவைது அனுப்பிவைத்தனர். காரணம் தேர்தல்காலங்களில் அக்குறணைக்கு அது செய்கிறேன் இது செய்கிறேன் என்று கூறிவிட்டு பின்னர் ஒன்றுமே செய்து கொடுக்காதது மட்டுமன்றி அப்பக்கம் திரும்பியும் பார்க்கவில்லையாம்.

ஒட்டு மொத்தமாய் அஷ்ரஃபும் அவர்தம் பங்காளிகளுமே முஸ்லிம்களிடையே ஒரு மாற்றுக்கட்சி உதயமாவதற்கு பிஸ்மில்லாஹ் போடுபவர்கள்.

*அபூ. இஃப்திகார் அஹமட்*
*கண்டி மத்தி*



## பூனைக்கு மணிகட்டுவது யார்?

இதழ் 101 கண்டேன். ஜே.வி.பி. பொதுச் செயலாளர் செவ்வி குறித்த எதிர்வினை நியாயமாகவும், அருமையாகவும், அழுத்தமாகவும் இருந்தது. இடதுசாரி, அந்தசாரி, இந்தசாரி, என்பவர்களின் கபடம் காலங்காலமாகப் புரிந்ததுதான். இனி புதிதாய் ஒன்றும் இருக்கப்போவதில்லை. நகைப்பு என்னவெனில், ''மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் அறிவீனம். அறிவீனமல்ல பாசாங்கு'' இதை அனுபவரீதியாக நன்கு உணர்ந்தவர்கள் தமிழ் மக்கள். பொருத்தமான நேரத்தில் ஜே.வி.பி செயலாளரின் செவ்வியைப் பிரசுரித்து அவர்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தியதோடு அபாரமான எதிர்வினை எழவும் வாய்ப்பளித்த உங்களுக்கு என் நன்றிகள்.

களுத்துறை மகசீன் சிறைக் கைதிகள் பற்றிய விடயம் படித்தேன். இந்தளவிற்குப் பிரச்சினை முற்றியும் யாருமே பாராது இருப்பது ஏன்? மனித உரிமை என்பர், ஜனநாயகம் என்பர், ஆனால் அவரின் சிந்தை ஏன் இவ்வப்பாவிகள் சம்பந்தமாக இரங்குவதில்லை. அவர்கள் பட்டினி கிடப்பதும் அரசியல் வேடதாரிகள் நாரதராய் மாறி, தூது போவதும் பின் பட்டினிகிடப்பதும் என்ன ஐயா இது என்ன விளையாட்டு? பூனைக்கு விளையாட்டு சீவன்போவது எலிக்கு அல்லவா? இது பற்றி குரல் தர யாருமே முன் வருகிறார்கள் இல்லையே.... இறந்து போனவர்களுக்காக விசாரணை அது இது என பணத்தையும், நேரத்தினையும் விரயமாக்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், வாழவேண்டியவர்கள் அநியாயமாகச் சிறையில் வாடும் அநியாயம் ஏன்? நீங்களும் எழுதுகிறீர்கள் அத்தோடு சரி. இவ்வாறான அநியாயங்களைத் தட்டிக் கேட்க ஒரு அணியை உருவாக்க ஏன் முயலக்கூடாது? இருக்கும் சூழலில் கடினம் தான். ஆனால், நிலைமை தொடுவானமாகக்கூடாதல்லவா? பூனைக்கு மணி கட்டுவது யார்?

தணிக்கைக்கு எதிராக ஏதாவது எழுதுங்கள். வரவர சரிநிகர் சுவையாக இல்லை. கராணம் என்ன? யாரின் அழுத்தமோ அழுத்துவதாக எனக்குப் படுகிறது. இப்படி எழுதுகிறேன் என குறைவிளங்காதீர்கள். அக்கறை. அத்தோடு சரிநிகர் போன்ற ஒரு பத்திரிகை வீணடிக்கப்படுவதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. எது எப்படியோ.... ஏதோ ஒரு முரண்பாடு எங்கிருந்தோ முளைக்கிறது என்பது மட்டும் தெரிகிறது.

*கேகாலை மலர்*
*கேகாலை.*

## கண்ணீரை இறைத்த தேரோவின் கவிதை!

புனைப் பெயர்களை ஏன் சிவசேகரம் கொச்சைப்படுத்துகிறாரோ தெரியவில்லை. விமர்சனங்களை வெறுவாய்ச்சப்பிகள் முன்வைக்கிறார்கள் என்று மனங்கொள்ளும் சிவசேகரத்தின் வாதம் உடன்பட முடியாதது.

-1 பங்காளிகள் யாருக்குப் பயப்படுகிறார்கள். இறுதி ஆணி அடிக்குமளவு ஏன் விசனப்படுகிறார்கள் என்று விளங்கவில்லை. பங்காளிகள் பற்றிய ஒரு தெளிவிற்கு வினைகளும் எதிர்வினைகளும் அத்திவாரம் போட்டுக் கொடுக்கின்றன.

அப்போதிருந்தே ஜெயபாலன் பள்ளிவாசல்கள் பக்கமும் கவனம் செலுத்துவது வரவேற்க வேண்டியது. இன்னும் மானுடம் அழியவில்லை. இலங்கையிலும் அது இருக்கத்தான் செய்கிறது என்ற அருமையான தொனி கலைஞர் ஜயதிலக பண்டார அவர்களின் செவ்வியில் காணக்கிடந்தது. புலிகள் வந்தாலும் ''சாதுஜனராவ''யில் சேர்த்துக் கொள்வர்ராம். தாண்டிக்குளம் தாண்டி பாஸ்கொண்டு சாதாரண மக்களே தற்போது கொழும்பு வரமுடியவில்லை அப்படி வந்தாலும் இடையில் நாலாம் மாடிக்கோ, வெலிக்கடைக்கோ போக வேண்டி வருமே... அன்பு நண்பர் ஜயதிலக அவர்களே!

கண்ணீரை இறைத்தது ஆனந்த தேரோவின் ''சகோதரன் திலீபன்'' என்ற கவிதை.

*அபூ. இஃப்திகார் அஹமட்*
*கண்டி மத்தி*

## கட்டுரை கவர்கின்றது!

நான் நீண்ட காலமாக சரிநிகரை வாசித்து வருகிறேன். தொடர்ச்சியாக உங்களது சரிநிகரை வாசித்து பல அரிய விடயங்களைப் புரிந்து கொண்டும் வருகிறேன்; நன்றி.

தங்களது சரிநிகரில் தொடர்ச்சியாக எழுதி வரும் 'குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே' என்ற தொடர் கட்டுரை என்னை மிகவும் கவர்ந்த ஒன்று. என்னை மட்டுமல்ல யாரெல்லாம் அவற்றைப் பார்க்கின்றார்களோ அனைவரையும் கவரக் கூடிய விதத்தில் மொழி மாற்றம் செய்து வெளியிடுகிறீர்கள்.

மொழிமாற்றம் செய்து வெளியிடும் சகோதரர் அருணுக்கும் அதை சரிநிகரில் பிரசுரிக்கும் உங்களுக்கும் சரிநிகர் வாசகனாகிய நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

*ஏ.ஆர். பௌசர்*
*புத்தளம்*

## தபுதாரன் என்ற சொல் உண்டே..!

சரிநிகர் இதழ் 97ல் 'சுயநிர்ணயம் பற்றிய தவறான எண்ணங்களை களைவது அவசியம்' எனும் தலைப்பில் பேராசிரியர் சிவசேகரம் லண்டனிலிருந்து சமுத்திரன் செல்வி திருச்சந்திரன் போன்றோரது கருத்துகள் தொடர்பாக எழுதியிருந்த விடயம் பற்றி ஓர் முக்கிய குறிப்புத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

சிவசேகரம் அவர்கள் விதவைத்துவம் தொடர்பாக கூறும் போது ''ஆங்கிலத்தில் தாரமிழந்த ஆணைக் குறிக்கச் சொல்லுண்டு. தமிழில் இல்லாமைக்குக் காரணம் நமக்கே உரிய ஒரு ஆணாதிக்க மரபுதான்'' என அழுத்தம் திருத்தமாக அடித்துக் கூறியிருந்தார். ஏன் ''தபுதாரன்'' என்னும் ஓர் அழகான செந்தமிழ்ச் சொல் இருக்கிறதே இது பேராசிரியருக்குத் தெரியாததா?

*ஸ்ராலின்*
*பிரான்ஸ்*

## அமெரிக்க.....

வியைத் தழுவுவதற்கு சிறிது காலத்திற்கு முன்னரே நிலைமையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

அதன் பின்னர் பாரிய வெற்றியீட்டிய சந்திரிகாவின் அரசாங்கம் மனித உரிமைகளை மதித்து நடக்கும் விதத்தில் தளம் அமைத்துக் கொடுத்ததோடு, 'அதனை மதித்து நடக்காதவர்களுக்கு தண்டனையும் வழங்கலாயிற்று'' என இவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

புதிய அரசு படுகொலைகள் தொடர்பாக விசாரணைகள் நடாத்துவதற்கு பல்வேறு ஆணைக்குழுக்களை அமைத்ததுடன், 18 மில்லியன் சனத்தொகையுடன் கூடிய இலங்கைத் தீவில் வசிக்கின்ற 20% தமிழ் மக்களின் நலன்கருதி தமிழ் போராளிகளை சமரசப் பேச்சுவார்த்தைக்கும் அழைத்தது.

கடந்த ஆண்டு தமிழ்ப் போராளிகளும் இவ்வழைப்புக்கு உடன் பட்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் சிறிது காலத்தின் பின்னர் போராளிகள் தாக்குதலை ஆரம்பித்தனர். இந்த யுத்தம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

1990களின் முற்பகுதியில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்டது. இருப்பினும் இன்றும் பிரச்சினை தொடர்வது மட்டுமன்றி தமிழ் இளைஞர்களும் ஏனையோரும் 'காணாமல் போவது இன்னமும் நடந்துகொண்டே இருக்கிறது'' என்கிறார் கொழும்பிலுள்ள பெரிய மனித உரிமை அமைப்பொன்றைச் சேர்ந்த ஷெரின் சேவியர் அவர்கள்.

''இது வரை அரசாங்கம் எந்தவொரு கொலைக் குழுவினரையும் தண்டிக்கவில்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

''மரணங்கள் பற்றிய விசாரணைகள் தொடர்ந்த போதிலும் எவருமே இதுவரை குற்றவாளியாகக் காணப்படவில்லை'' என்று கூறுகின்றனர் வேறு சில மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்கள். படுகொலை செய்யும் குழுக்கள் மர்மமான முறையில் இன்றும் படுகொலைகளைச் செய்து கொண்டே இருப்பதாக சில இலங்கை அதிகாரிகள், அரசைக் குற்றம் சாட்டுகின்றனர்.

''மனித உரிமைகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறும் இத்தகைய பேச்சுக்கள் அமெரிக்கா போன்ற நாட்டின் அரசாங்கங்கள் இலங்கையுடன் மேலும் நெருக்கமாக வருவதற்கு கண்டுபிடித்துள்ள ஒருநியாயப்படுத்தலேயாகும்'' என்று கூறும் சேவியர். ''கோரமான மனித உரிமை வழக்கங்கள் ஓரிரவில் மாறி விடுவதில்லை'' என்று குறிப்பிடுகிறார்.

அமெரிக்க அதிகாரிகள் இங்கு பயிற்சியளிக்க வந்துள்ள விடயம் பத்திரிகை தணிக்கைகளையும் மீறி கொழும்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவியுள்ளதாக குறிப்பிடும் அவர், இது ஒரு ஆபத்தான நடவடிக்கை என்று கூறுகிறார்.

''ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கு உதவியளித்து வருகின்றது என்ற தகவல் தமிழர்களைப் பொறுத்தவரையில் முக்கிய விடயமாக இருக்கும். இதனால்தான் இதை வெளியில் விடாமல் இரகசியமாக வைத்திருக்கிறார்கள்' என்கிறார் சேவியர் அவர்கள்.

'இவ்விடயம் இலங்கை முழுவதிலும் பரவலாக தெரிய வரும் பட்சத்தில் பல எதிர்ப்புக்கள் கிளம்பும்.'

**நன்றி: The Dallas Morning News**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# வவுனியா:

# பொறியிலகப்பட்ட மக்கள்!





''நாங்கள் இடம்பெயர்ந்தவர்களே ஒழிய அகதிகள் அல்ல. எங்களைத் தடுத்து இந்த நலன்புரி நிலையத்தில் வைத்துப் பராமரிக்கிறோம் என்று கஷ்டப்படுத்த வேண்டாம். எம்மை எங்கள் வழியில் செல்ல விடுங்கள். இதுவே எங்களது தேவை'' என்று வவுனியா நெலுக்குளம் நலன்புரிநிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் ஒரே குரலில் உறுதி தொனிக்கக் கோருகிறார்கள்.

''யாழ்ப்பாணத்தைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிவிட்டோம். அதன் மூலம் அவர்களது முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டது. தோல்விகளால் திணறுகின்ற புலிகள் வன்னியில் இழந்து விட்ட சக்தியை ஒன்று திரட்டப் பார்க்கிறார்கள். அவர்களை ஒடுக்கி யாழ்ப்பாணத்திற்குத் தரைவழிப் பாதையொன்றைத் திறப்போம்' எனச் சூளுரைத்த இலங்கை அரசின் இராணுவம் ''ஓயாத அலைகளின்'' மூலம் முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளினால் பதம்பார்க்கப்பட்ட சூட்டோடு சூடாக ஆனையிறவிலிருந்து கடந்த மாதம் 26ம்திகதி ஆரம்பித்த 'சத்ஜய' நடவடிக்கை காரணமாக இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இடம் பெயர்ந்து வன்னிக்கு வர நேரிட்டது.

கிளிநொச்சியை நோக்கி நகர்ந்தபடையினர் மேற்கொண்ட ஷெல் வீச்சுக்கள் விமானக்குண்டுத் தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து கிளிநொச்சியில் தஞ்சமடைந்திருந்தவர்கள் மட்டுமல்லாமல், இப்பகுதியைச் சேர்ந்த ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்டவர்களும் புதிதாக இடம் பெயர நேர்ந்தது.

இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளவர்களில் ஒன்று ஒன்றேகால் லட்சம் பேரை எதிர்பார்த்து வவுனியா நகரப் பகுதியில் - இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் 35 அரச பாடசாலைகளை இனம் கண்டு நலன்புரி நிலையங்களாக ஸ்தாபிப்பதற்கு இராணுவமும் பொலிசாரும் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

நெலுக்குளத்தில் அமைந்துள்ள கலைமகள் மகாவித்தியாலயம் இந்த ஏற்பாட்டின்பேரில் கடந்த வாரம் முதலாவது நலன்புரிநிலையமாகத் திறக்கப்பட்டு 21 குடும்பங்களைச்சேர்ந்த 79 பேரை முதலாவதாக உள்வாங்கிச் செயற்பட ஆரம்பித்தது.

இங்கு தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் (முன்னூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள்) தங்கவைக்கப்பட்டு (?) பராமரிக்கப்படுகின்றார்கள்.

இவர்களில் 98 வீதமானவர்களே முதலில் குறிப்பிட்டிருப்பது போல ஒரேகுரலில் தம்மைத் தடுத்துவைக்காமல் வெளியில் செல்ல விடுமாறு குரல் எழுப்புகிறார்கள். இங்குள்ளவர்களில் 36 பேரே போக்கிடமின்றி இங்கேயே தங்கியிருப்பதற்கு அதிகாரிகளிடம் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். 600க்கும் மேற்பட்டவர்கள் வவுனியாவில் உள்ள தமது உறவினர்கள் நண்பர்களோடு தங்கியிருக்கச் செல்ல அனுமதி கோரியுள்ளனர். ஏனையோரில் ஒரு தொகுதியினர் யாழ்ப்பாணம் செல்ல வேண்டியிருப்பதாகக் கூறுகிறார்கள். ஏனையோர் கொழும்பு, கண்டி, திருகோணமலை எனப் பல இடங்களுக்கும் செல்வதற்காக வன்னிலியிருந்து தாண்டிக்குளம் ஊடாக வவுனியாவுக்குள் வந்தோராவார்கள்.

இவர்களில் கிட்டத்தட்ட முழுப்பேருமே யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சம் புகுந்தவர்கள். 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையையடுத்து முறிகண்டி, மாங்குளம், அக்கராயன் குளம், மல்லாவி, வவுனிக்குளம், ஒட்டுச்சுட்டான், புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி என பல்வேறு இடங்களுக்கும் பலதடவைகள் இடம்பெயர்ந்து இடத்துக்கு இடம் நகர்ந்து பின்னர் தாண்டிக்குளம் ஊடாக வவுனியாவுக்குள் வந்துள்ளார்கள்.

சுற்றிலும் ஆளுயரத்துக்கும் மேல் உயர்த்தி அமைக்கப்பட்ட உறுதியான முள்ளுக் கம்பி வேலிக்குள் மிகவும் கவனமாகப் பொலிசாரின் பாதுகாவலில் இவர்கள் வைக்கப்பட்டுள்ளார்கள். தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் கூட அனுமதியின்றி உள்ளே செல்லமுடியாது.

ஒருகோடி பத்துலட்சம் ரூபாசெலவில் பாதுகாப்பான முட்கம்பி வேலிக்குள் குடிநீர் வசதிக்காகக் குழாய்க்கிணறுகள் தற்காலிக, நிரந்தர மலசல கூடங்கள், மின்சாரம், பொழுது போக்குவதற்கான தொலைக்காட்சி மற்றும் பொழுது போக்கு சாதனங்களுடன் தயாராகி வருகின்ற இந்த நலன்புரிநிலையங்கள் யாவும் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி சில்வாவின் நேரடிப் பொறுப்பில் உள்ளன. அவரது அனுமதி பெறுகின்ற பத்திரிகையாளர்களும், செய்தித் துறையினருமே விசேடமாக நெலுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய நலன்புரி நிலையத்தினுள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

செய்தியாளர்களையும், வெளியாரையும் கண்ட உடனேயே சுற்றிவளைத்துக் கொண்டு நீ முந்தி, நான் முந்தி என அனைவருமே தமது குறைபாடுகளையும் கஷ்டங்களையும் கொட்டித் தீர்க்கிறார்கள். அவர்கள் இறுதியாகக் கூறுவது ''நாங்கள் அகதிகள் அல்ல. அகதிமுகாமில் தங்கியிருப்பதற்காக நாங்கள் வரவில்லை. உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் செல்லவும் தொழில் தேடவும் எங்கேயாவது குடியமர்ந்து எமது பிள்ளைகளின் கல்வியைத் தொடர்வதற்கான வழியைத் தேடுவதற்காகவுமே நாங்கள் இங்கே வந்தோம். எங்கேயும் வெளியே செல்ல முடியாத நிலையில் இங்கு சிறைக்கைதிகளைப்போல அடைந்து கிடப்பதற்கு நாங்கள் தயாரில்லை.''

சுமார் 900 மாணவர்கள் கல்விகற்றுவந்த நெலுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம் இரண்டாந்தவணைப் பரீட்சைக்கு ஆயத்தமாகிய வேளையில் பொலிசாரினால், பொறுப்பேற்கப்பட்டு பாடசாலை மூடப்பட்டது: பரீட்சைக்குக் கூட மாணவர்கள் தோற்ற முடியவில்லையே என்று மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றார்கள் என முத்தரப்பினரும் கவலை கொண்டு தவிக்க கடந்த வாரம் அகதிகள் என்ற போர்வையில் இடம் பெயர்ந்தவர்கள் தமது உறவினர்கள், நண்பர்களிடம் செல்லும் வழியில் இடைமறித்து இங்கு கொண்டு வரப்பட்டார்கள்.

தங்கியிருப்பதற்கு இடமின்றி உண்மையாகவே தஞ்சம் கோருகின்ற சிறிய எண்ணிக்கையானோரைத் தவிர கொழும்பு, உட்பட நாட்டின் தென்பகுதிகளுக்கும் வவுனியாவின் ஏனைய பகுதிகளுக்கும் செல்ல வேண்டியவர்கள் இந்த முகாமில் எவ்வளவு காலத்திற்குத் தங்கவைக்கப்படப்போகிறார்கள் என்பது குறித்து எவருக்கும் எதுவுமே தெரியவில்லை.

இவ்விடம் தொடர்பாக சிவில் அதிகாரிகள் தமக்கு எதுவும் தெரியாது, அது பாதுகாப்புப்பகுதியினரோடு சம்பந்தப்பட்டது எனக்கூறுகிறார்கள். பொலிசாரோ தமது கடமை முகாமின் பாதுகாப்பு நிர்வாகக் கடமைகளுடன் முடிந்து விடுகிறது என்றும், தங்கியிருப்பவர்களை விடுவித்து அனுப்புவது குறித்து தீர்மானம் எடுக்கும் பொறுப்பு தம்மிடம் இல்லையெனத் தெரிவிக்கிறார்கள். இராணுவ அதிகாரிகளும் இது விடயத்தில் கொழும்பிலுள்ள தலைமையக அதிகாரிகளின் பணிப்புரைகளை எதிர்பார்த்திருப்பதாகவே தெரிகின்றது.

நொச்சிமோட்டைக்குள்ளே இராணுவ காவலரண் ஊடாக வருகின்ற இடம் பெயர்ந்த குடும்பங்கள் முதலில் தாண்டிக்குளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுப்பூர்வாங்க விசாரணைகள் பதிவுகளின் பின்னர் நெலுக்குளம் நலன்புரி நிலையத்திற்கு அழைத்துவரப்படுகின்றார்கள். உடனடியாகவே அல்லது மறுநாள் இக்குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பாதுகாப்பு விசாரணைகளுக்கென தாண்டிக்குளம் முகாமிற்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். இவர்கள் மீதான விசாரணைகள் மூன்று நான்கு தினங்களுக்குத் தொடர்கின்றன.

இவ்வாறான விசாரணைக் காலத்தில் முகாமில் உள்ளவர்களது பெற்றோர்கள் தமது பிள்ளைகளைச் சென்று பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்றும் விசாரணை முடிவுற்றதும் இளைஞர்கள் மீண்டும் நலன்புரிநிலத்திற்கு அழைத்து வரப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். சந்தேகத்திற்கு உரியவர்கள் யாரேனும் ஊருடுவியுள்ளார்களா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகவே இந்த விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிசார் விளக்கமளித்துள்ளார்கள்.

ஆயினும் ராசலிங்கம் இராஜசேகரன் என்ற 19 வயது இளைஞன் இவ்வாறான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இன்னும் விடுதலை செய்யப்படவில்லையென அவரது பெற்றோர் கவலையோடு தெரிவிக்கின்றார்கள். இவ்இளைஞரோடு அவரது சகோதரியாகிய தயாநிதி (16) என்பவரும் விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டு சில தினங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். எனினும், இராஜசேகரன் சுகவீனம் காரணமாக வவுனியா ஆதார வைத்தியசாலையில் இருதினங்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் மீண்டும் பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக அவரது தந்தை ராசலிங்கம் தெரிவித்தார்.

''எனது மகனை வவுனியா ஆஸ்பத்திரியில் இருந்து பொலிசார் கூட்டிச் சென்றாதாக அறிந்தேன். அவர் இப்போது கண்டி வீதியில் உள்ள பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளார். பொலிஸாரிடம் அனுமதிப்பெற்று அவரை சந்தித்துப் பேசினேன். அவருக்கு ஒருகண் ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர் சிறிது மனநலம் குறைந்தவராகவும் இருக்கிறார். அவரை நேரில் பார்த்து பேசியபோது அவர் சுகவீன முற்றிருப்பதை அறிந்தேன். அவருக்கு வைத்திய கவனிப்பும் சிகிச்சையும் தேவைப்படுகின்றது. அவரை எப்போது விடுதலை செய்வார்கள் என்பது தெரியாமையினால், அவரது உடல் நலம் குறித்து எங்களுக்கு மிகவும் கவலையாக இருக்கிறது'' என்று அவர் மிகுந்த கவலையோடு கூறினார்.

ஆயிரத்து ஐநூறுபேரைத் தங்கவைத்துப் பராமரிப்பதற்கென நெலுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய நலன்புரி நிலையம் திட்டமிடப்பட்டு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட போதிலும் தற்போது இங்கு தங்கியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கும் போதிய இருப்பிட வசதி; மலசலகூட தண்ணீர் வசதிகள் என்பன இல்லையென்றே இடம் பெயர்ந்து வந்துள்ளவர்கள் முறையிடுகின்றார்கள்.

''நான்கு நிரந்தர மலசல கூடங்களே இங்கு இருக்கின்றன. பத்து தற்காலிக மலசல கூடம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் கடந்த சில தினங்களாக பெய்த மழை காரணமாக மலசல கூட குழிகளின் கரைச்சுவர்கள் கரைந்து மேலே போட்டுள்ள பலகையும் மலசல கூட 'பிளேட்டும்' எந்தவேளையிலும் குழிக்குள்ளே விழலாம் என்ற நிலையிலேயே உள்ளன. இதனால், இவற்றைப் பாவிப்பது பொது மக்களுக்கு ஆபத்தானதாக மாறியுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு திறந்த கிணறும், ஒரு குழாய்க் கிணறும் இங்கு இருக்கின்ற போதிலும் தண்ணீருக்குப் பற்றாக்குறையே நிலவுகிறது. வெளியிலிருந்து பவுசர் மூலமாகக் கொண்டு வரப்படுகின்ற தண்ணீரும் இங்குள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதாமல் இருப்பதாகவே அவர்கள் கூறுகின்றார்கள்.

''தண்ணீரில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்காததனால் குளிப்பதற்கும் கழுவுவதற்கும் தேவைக்கு அதிகமாக நீர் விரயம் செய்யப்படுகின்றது. இந்த நிலையில் அத்தியாவசியமான தேவைகளுக்கு சிலவேளைகளில் மலசல கூடபாவிப்புக்கும் தண்ணீர் இல்லாமல் அவல நிலையே ஏற்படுகின்றது'' என்றும் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

''குழந்தைகள் பற்றிய கணக்கெடுப்பு விபரங்களைத் திரட்டியுள்ள போதிலும் அவர்களுக்கான பாலுணவு போதியளவில் வழங்கப்படுவதில்லை. வெளியில் சென்று எத்னையும் வாங்குவதற்கு வசதியாக அருகில் போதிய கடைகளும் இல்லை. வவுனியா நகருக்கு மூன்று மைல் தூரம் பிரயாணம் செய்ய வேண்டும். இந்த நிலையில் குழந்தைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே தெரியவில்லை'' என்று தாய்மார் பலரும் குறைப்பட்டுக் கொண்டார்கள்.

சுமார் இருபத்தாறு நோயாளிகள் இனங்காணப்பட்டு வைத்திய கவனிப்பைப் பெறவேண்டும் என்று இந்த நலன்புரி நிலையத்திற்கு விஜயம் செய்கின்ற நடமாடும் சேவை வைத்தியர் சிபாரிசு செய்துள்ளார்.

ஆயினும் வவுனியா ஆதாரவைத்தியசாலைக்குச் செல்வதற்குரிய அனுமதி இவர்களுக்குப் பொலிசாரிடம் இருந்து கிடைக்கவில்லை. இவர்களுக்குத் தேவையான மருந்துகளைக் கொண்டுவந்து கொடுக்குமாறு நடமாடும் சேவை வைத்தியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

உறவினரைப் பார்ப்பதற்காக ஓமந்தை பகுதிக்குச் சென்று வந்த அரச ஊழியர்களும் தென்பகுதியில் உள்ள தமது வேலைத்தலங்களுக்கு தமது குடும்பத்தினரைக் கூட்டிச்செல்ல வந்துள்ளவர்களும் கூட இந்த இடைத்தங்கல் நலன்புரி நிலையத்தில் பொறியிலகப்பட்டது போல சிக்கிக் கொண்டு வெளியேற வழிதெரியாமல் தவிக்கின்றார்கள்.

வடக்கிலிருந்து வவுனியாவிற்கும் நாட்டின் தென்பகுதிகளுக்கும் வருபவர்களிடையே புலிகளும் ஊருடுவல் செய்யலாம் என்ற சந்தேகத்தில் நாளொரு சட்டமும் பொழுதொரு விதியுமாக நொச்சிமோட்டையிலும், தாண்டிக்குளத்திலும் அரசினால் கடைப்பிடிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு ஈடுகொடுத்து தடைகளைத்தாண்டி வருவது தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் சீவன் போகிற செயற்பாடாகவே உள்ளது.

- தம்பு திருநாவுக்கரசு

வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 18/2, அலோ சாலை, கொழும்பு-03. அச்சுப்பதிவு: நவமக அச்சகம். 334, காலி வீதி ரத்மலானை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்